# இலக்கியவழி

பண்டிதமணி

சி. கணபதிப்பிள்ளை

வரதர் வெளியீடு

○ பண்டிதமணி சி. கணபதிப பிள்ளை அவர்களின் முதலா வது கட்டுரைத்தொகுதியை நூல் வடிவில் வெளியிடும் பாக்கியம் எனக்குக் கிடைத் ததைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

○ நண்பர் கனக. செந்திநாதன் அவர்களின் பேராவல்தான் என்னை இவ்வழியில் முன் னின்று நடத்தியது. அவ ருக்கும,

மாணுக்கர் இதை எளிதில் விளங்கிச் சுவைபபதற்கு உதவியான அரும்பத உரை களையும் குறிப்புக்களையும் எழுதி உதவிய நண்பர் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றி.

○ இந்த அருமையான நூலை வெளியிடுந் தகுதி—வல்ல மை—எனக்கு எவ்விதம் வந் ததென்பதை வள்ளுவர் சொல்கிருர்:

'தம்மிற் பெரியார் தமரா [ஒழுகுதல்
வன்மையுள் எல்லாந் தலை'

அந்தப் பெரியார்களுக் கெல்லாம் நான் என்றுங் கடப்பாடு உடையவன்.

— தி. ச. வரதராசன்

வரதர் வெளியீடு
யாழ்ப்பாணம். 1-6-55

முதற் பதிப்பு
ஆனி 1955

விலை ரூ. 1-50

அச்சுப் பதிப்பும்
விற்பனை உரிமையும்:
ஆனந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை:

வரதர் வெளியீடு

# புறநிதழ்

என் பெயராலும் ஒரு புத்தகம் உருஆவது கண்டு, பெரிதும் ஆச்சரியம் அடைகின்றேன். புத்தகம் எழுதுகிறவர்கள் அதற்கென்று பிறக்கின்றார்கள்; எழுதவந்து எழுதுகின்றார்கள்; எழுதாமல் இருக்கமுடியாமல் எழுதுகின்றார்கள். புத்தகம் ஒன்று எழுதித்தான் தீரவேண்டுமென்று அவர்கள் எழுதுவதில்லை. இக்கருத்தினாலேதான், கனவிலாயினும் நான் புத்தகம் எழுத முயன்றதில்லை. அப்படியிருந்தும் இப்புத்தகம் எப்படியோ வெளிப்பட்டிருக்கின்றது.

பலவேறு காலங்களில்—பலவேறு சந்தர்ப்பங்களில்—வழியிலுந் தெருவிலுந் தோன்றிய எண்ணங்களின் கோவையே இப்புத்தகம். புத்தகத்துக்கென்று பிரசவிக்காத கருத்துக்களே இப்புத்தகம். அதனாலே இப்புத்தகம் சற்றே வழங்கிப் பயன் படும் போலும்.

பாலர்கள் தொடக்கம் ஆசிரியகலாசாலை மாணவர் பரியந்தம் இப்புத்தகத்தில் வருஞ் சில பாடங்களை அநுபவித்திருக்கின்றார்கள். பரிசோதனஞ் செய்து பார்த்திருக்கின்றேன். ஆறும் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கு இதனை நன்கு பயன்படுத்தலாம். இதில் வருஞ் செய்யுள்களைப் பிள்ளைகள் தாமாகவே மனனஞ் செய்வார்கள். பழைய யாழ்ப்பாணத்தின் இலக்கிய இரசனையை மறந்துபோனவர்களுக்கு இப்புத்தகம் ஞாபகஞ் செய்யும்.

அங்கும் இங்குஞ் சிதறிக்கிடந்தவைகளை —நான் மறந்து போனவைகளை—ஒருங்கு சேர்த்துச், சிலவற்றிற்குத் தலைகள் அமைத்தும், சில வற்றின் வால்களைக் கால்களை அளவுக்கு வெட்டியும், வேண்டிய வைத்தியஞ் செய்து, அரும்பத விளக்கத்தோடு இதனைத் தொகுத்து வெளிப் படுத்தியதில், எனக்கு ஒருசிறிதும் பங்கு இல்லை.

இதன் நற்றாய் திரு கனக. செந்திநாதன்; செவிலித்தாய் திரு இ. ச. வரதராசன்; நல்ல தோழி பண்டிதர் திரு ச. பஞ்சாட்சர சர்மா.

ஈழகேசரி, தினகரன், இலங்கைவானொலி, நிலையம் ஆதியன இப்புத்தகத்தின் விளை நிலங்கள்; வினைமுதல்கள்.

"திறையோடும் அரசிறைஞ்சுஞ்
செறிகழற்கால் தசரதனும்
பொறையோடுந் தொடர் மனத்தான்
புதல்வரெனும் பெயரே காண்
உறையோடு நெடு வேலாய்
உபநயன விதிமுடித்து
மறையோது வித்திவரை
வளர்த்தானும் வசிட்டன் காண்."

திரு. சைவாசிரிய கலாசாலை,

25—5—55 — சி. க.

# கட்டுரைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | இரட்டையர் .... .... | 5 |
| 2 | காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள் .... | 11 |
| 3 | சிவகாமி சரிதை .... .... | 17 |
| 4 | மதியும் பிறையும் .... .... | 23 |
| 5 | இலங்கை வளம் .... .... | 29 |
| 6 | கவி கவியாகிறான் ... .... | 37 |
| 7 | ஈழநாட்டுப் புலவர் .... .... | 47 |
| 8 | பறாளாய் விநாயகர் பள்ளு .... | 54 |
| 9 | கம்பரில் பாலர் பாடசாலை .... | 61 |
| 10 | கம்பன் செய்த வம்பு ... .... | 66 |
| 11 | சொற் சித்திரம் .... .... | 74 |
| 12 | யாழ்ப்பாணத்தில் இரு கவிராயர்கள் .... | 80 |
| 13 | கவிஞர்கள் .... .... | 86 |
| 14 | வாழ்க்கையின் மூன்று படிகள் .... | 94 |
| 15 | நகைப் பூங்கொத்து ... .... | 101 |
| | அரும்பத உரையும் குறிப்புக்களும் .... | 106 |

# இலக்கிய வழி

## 1. இரட்டையர்

ஒரு தாய் வயிற்றில ஒரே கர்ப்பத்தில் இரட்டையாய்ப் பிறந்தவர்கள் இரட்டையர்கள். ஒருவர் குருடர், மற்றவர் சப்பாணி. இருவரும் புலவர்கள். குருடரின் தோள்களிற் சப்பாணி ஏறிக்கொள்வார். சப்பாணி வழிகாட்டக் குருடர் நடப்பார். இருவரும் ஒருவர். ஒருவர் ஒருபாட்டின் ஒரு பாதியைப்பாட மற்றவர் அப்பாட்டின் மற்றப் பாதியைப் பாடுவார். இருவரிலும் அதிர்ஷ்டசாலி சப்பாணி. இச்சப்பாணிக்கு நடக்கிறதன் கஷ்டம் தெரியாது. சிலசமயங்களிலே வழி வேறாயிருக்கக் குறுக்கு வழியிலும் இறக்கிவிடுவான். அந்த வழி, ஏற்றமும் இறக்கமும் குன்றும் குழியுமாய் இருக்கும். ஏற்றத்தில் இருந்து இறக்கத்தில் குருடர் ஓடாமலிருக்க முடியாமல் ஓடும்போது சப்பாணிக்குப் பிரயாணம் சுகம்பேசும். பாவம், குருடர் என்னசெய்வார்!

**" குன்றுங் குழியுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ "**

'கடவுளே, மலைகளில் ஏறியும் குழிகளில் இறங்கியும் எத்தனை நாளைக்கென்று அலைகிறது! இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வராதோ!' என்று இரங்கி ஒரு வெண்பாவில் முதற் பாதியைப் பாடினர். வெகு குதூகலமாகக் குருடன் தோளில் இருந்த சப்பாணி,

**"— ஒன்றுங்
கொடாதானைக் கோவென்றுங் காவென்றுங் கூறின்
இடாதோ நமக்கிவ்விடர் "**

என்று, வெண்பாவைப் பூர்த்திசெய்தான். எச்சிற்

கையாலே காகந் துரத்த உடன்படாத உலோபிகளைக் காமதேனுவே கற்பகதருவே என்று பாராட்டிப் பாடினுல், இல்லாததைப் பாடிய குற்றத்துக் காகக் கடவுள் குன்றிலுங் குழிகளிலும் அலைந்து திரிகிற இந்த இடர்களையெல்லாம் நமது தலையில் எழுதிவைப்பார்தானே; இதில் ஒரு நூதனமும் இல்லையே என்பது, நடந்து களையாத சப்பாணியின் சித்தாந்தம். சப்பாணி இப்படிக் குறும்புசெய்த போதும், அந்தக் குருடர் வெறுக்காமல் தமது விதியை நொந்துகொண்டு, அந்தச் சப்பாணியைத் தமது கண்ணேபோற் பேணிக் காவிச் சுமந்து வருகிறார். பாவம்!

ஒருநாள் இருவருக்கும் நல்ல களை; பசி. ஒரு அரண்மனையை அணுகுகின்றார்கள். இராசா அத்தாணி மண்டபத்தில் அரசு வீற்றிருக்கின்றார். அவருடைய தம்பி பக்கத்தில் அமர்ந்திருக்கின்றார். மந்திரிகள், தானைத்தலைவர்கள், புலவர்கள் குழுமியிருக்கின்றார்கள். பெரிய ஓலக்கம். இரட்டையர்கள் அங்கே பிரவேசிக்கின்றார்கள். இராசாவுக்குப் பெரிய இரக்கம் வந்துவிட்டது. அவர்களுக்கு வேண்டிய திரவியங்கள் உதவும்படி மந்திரிக்கு உத்தரவிட்டார். மந்திரி மறுத்து, இப்படிப் பெருந்தொகை உதவுவது, இவர்களைப் பெரிய சோம்பர் ஆக்குவதாய் முடியுமென்று நியாயம் பேசினுன். இராசா கொடுப்பதற்கு மந்திரி பெரிய இடறுகட்டையாய் இருந்தான். சபை மௌனம் சாதித்தது. அங்கிருந்த புலவர்கள் மனம் எரிந்தார்கள்; வெளிக்காட்டவில்லை. சப்பாணி, "**புராதனமான தமிழ்ப் புலவீர் இந்த**" என்று தொடங்கி, ஏதோ ஒரு வார்த்தையை

மனசுக்குள் உச்சரித்துக்கொண்டு, "மராமரம் விட்டிங்கு வந்ததென்னே" என்று, ஒன்றேமுக்கால் வரி பாடினுன். புலவர்களே, பழைமைகளை உணர்ந்தவர்களே, இந்த இராசாவுக்குப் பக்கத்தில் நியாயம் பேசுபவர் யாவரோ? இந்தப் 'பிறப்பு', அடர்ந்த பெரிய மரங்கள் நிறைந்த காடுகளில், மரக் கொம்பர்களில் தனது வாழ்க்கையை வைத்துக்கொள்ளாமல், இந்தப்பக்கம்போந்த காரணம் என்னையோ! இதற்கும் இராச சபைக்கும் எவ்வளவுதூரம்! இதற்கு இங்கே என்ன அலுவல்!—என்றும் கருத்து விரித்தான். அதனைக் கேட்டதுங் குருடருக்குப் பாட்டுக் குமுறிக்கொண்டுவந்தது. சப்பாணியின் பாகமான இரண்டாவது வரியிலுங் குருடர் பங்கெடுத்துக்கொண்டார். "வந்தவாறு சொல்வேன்" என்று முதலில் அந்த வரி பூர்த்திசெய்யப்பட்டது. இந்தப் பெரிய சபையிலே இராசாவுக்கும் அவர் தம்பிக்கும் பக்கத்திலே நின்று, கொடுப்பதைத் தடுத்துச் சேட்டை செய்கின்ற பண்டம், காடுகளிலே மரந்தடிகளிலே வாழ்க்கை நடத்தவேண்டிய பண்டந்தான். அதில் எவ்வித சந்தேகமுமில்லை. அப்படிப் பண்டத்துக்கு மனுஷர் கொடுக்கல் வாங்கல் செய்கிற இந்தச் சபையிலே என்ன அலுவல் என்று யாரும் நினைக்கலாம்; நினைக்கத்தான்வேண்டும்! நினைப்பதில் தவறு இல்லை. ஆனல், அந்த வஸ்து இங்கே வந்து நிற்பதிலும் நூதனம் இல்லை. அது வந்ததற்குப் போதிய காரணம் இருக்கிறது. "வந்தவாறு சொல்வேன்" என்கிருர் குருடர். சபையிற் குதூகலம்! 'வந்தவாறு' இன்னதென்று, என்ன காரணங் கற்பிக்கப்போகின்ருரோ என்று புலவர்கள் தங்கள் கற்பனு லோகத்தில் சஞ்சரிக்கின்ருர்

கள். குருடர் தமது பங்கைப் பாடுகின்றார்:

"தராதலமன்னுந் தமிழ்மாறனையுந் தன்தம்பியையும்
இராகவனென்றும் இலக்குவனென்றும் வந்தெய்தியதே"

என்று பாட்டுப் பூர்த்தியானது. "இது இராமாயண காலத்தைச்சேர்ந்த, நீண்ட வாலுள்ள வர்க்கத்தைச் சார்ந்ததாயிருக்கவேண்டும். எங்கேயோ பராக்குப் பார்த்தமையினால், இராம லக்ஷ்மணர்களைத் தவறியிருக்கவேண்டும். அவர்கள் அயோத்திக்குப் போனதையறியாமல் இங்கே தங்கித் தமிழ் நாட்டில் அலைந்து அவர்களைத் தேடித்திரிந்திருக்கவேண்டும். தமிழை வளர்க்கின்ற எங்கள் மகா ராசாவையுந் தம்பியையும், இது தன் கண்மயக்கினாலே இராம லக்ஷ்மணர்கள் என்று நம்பியிருககவேண்டும். இது இங்கே வருகிறதற்குப் போதிய நியாயம் இருக்கிறது."—இது குருடரின் கண்ணான கற்பனை. அங்கே குழுமியிருந்த புலவர்கள் கவிதா லோகத்தில் தம்மையறியாமலே குதித்துக் கூத்தாடிச் சேட்டை செய்தார்கள். குருடர் அநுங்கிய—வெளிப்படாமல் உச்சரித்த வார்த்தையும் புலவர்களுக்கு இன்னதென்று தெரிந்துவிட்டது. இதோ, மராமரம்விட்டு இங்கு வந்துநிற்பது 'புன் குரங்கு' 'புன் குரங்கு' என்று சத்தமிட்டார்கள். சிலர் பாட்டை எழுதிக் கொண்டார்கள். சிலர் உரத்தும் படித்தார்கள்.

"புராதனமான தமிழ்ப்புலவீர் இந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்குவந்ததென்னோ வந்தவாறு [சொல்வேன்
தராதல மன்னுந்தமிழ் மாறனையுந்தன் தம்பியையும்
இராகவனென்றும் இலக்குவனென்றும் வந்தெய்தியதே"

இரட்டையர்களுக்குக் காளமேகப் புலவரிலே பெரிய பற்று; அவரைக் காணவேண்டுமென்று நெடு

நாள் ஆசை. ஒருநாள் காளமேகத்தைத் தேடி அவருடைய ஊருக்குப் பயணஞ்செய்தார்கள். எத்தனையோ அபசகுனங்கள் எதிர்ப்பட்டன. ஒன்றையும் பொருட்படுத்தாமற் புறப்பட்டார்கள். காளமேகத்தைக் கண்டு பேசவேண்டுமென்ற ஆசை அவர்களை இழுத்துச் சென்றது. ஒருவாறு காளமேகத்தின் ஊருக்குச் சென்றுவிட்டார்கள். அப்பால், காளமேகத்தின் வீட்டை விசாரித்துக்கொண்டு போகின்றார்கள். வீடு கிட்டிவிட்டதென்று அறிய அறிய அவர்களுக்கு ஆவல் பொங்கத்துவங்கிவிட்டது. வீட்டு வாசலை அடைந்துவிட்டார்கள். ஆகாசத்திலே சஞ்சாரஞ்செய்த ஒருவன், பாதாளத்திலே வீழ்ந்தால் எப்படியிருக்குமோ அப்படியான நிலை அவர்களுக்கு அந்த வேளையில் ஏற்பட்டது. வீடு அமங்கலமாய்க்கிடந்தது. "புலவர் பெருமான்! காளமேகம்! அதோ சுடலைநோக்கிச் செல்லுகின்றார்" என்று கண்ணீர் விட்டார்கள் அங்குள்ளவர்கள். இரட்டையர்கள் வந்தகால் ஆறவில்லை; சுடலையை நோக்கி நடந்தார்கள். காளமேகத்தின் தூலதேகம் கொழுந்துவிட்டெரிகிறது.

> "ஆசுகவியால் அகில உலகமெல்லாம்
> வீசுபுகழ்க் காள மேகமே—பூசுரா"

என்று கதறியழுதார் சப்பாணி. காளமேகம் ஆசுகவி. ஆசுகவியென்றால் விரைந்து பாடுகின்ற புலவன் என்று கருத்து. ஒருவர் ஒன்று பாடவேண்டுமென்று கேட்க முன்னமே, காளமேகத்தின் வாயிலிருந்து பாட்டு வழுக்கிக் கீழேவிழும். இம்மென்னும் முன்னம் எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம் பாட்டும் பாடிவிடும் காளமேகம். அந்தச் சாமர்த்தியத்தை நினைத்து நினைத்து அழுதார் சப்பாணி.

"விண்கொண்ட செந்தழலாய் வேகுதே ஐயையோ
மண் டின்ற பாணமென்றவாய்"

என்று கதறினர் குருடர். ஒருசமயம் சிவபெருமானுக்கு ஒரு நிந்தாஸ்துதி பாடினர் காளமேகம். "திருவாரூரிலிருக்கும் சிவபெருமானே, உனது வில்லோ கல்லு; வளைக்கமுடியாதது. நாணோ நஞ்சிருப்பது; தளர்வுள்ளது. இந்த இலக்ஷணத்தில் பாணமோ மண்டின்ற பாணம். — கறையான் கட்டினது போலும்! சிவசிவா! உன்வீர கெம்பீரத்தை என்ன சொல்வது! முப்புரத்தைப் பார்த்துப் பல்லை இளிக்காமல் நீ வேறென்னதான் செய்யமுடியும்!" என்பது அந்தப் பாட்டின் கருத்து. 'நாணென்றால் நஞ்சிருக்கும்' என்று தொடங்குகிறது அந்தப் பாட்டு. அந்தப் பாட்டிலே பாணத்தை 'மண்டின்ற பாணம்' என்று பாடியதன் அருமை குருடரின் இருதயத்தைக் கவர்ந்துவிட்டது. சிவபெருமானுக்கு வில் மகாமேரு; கல். நாண் ஆதிசேஷன்; நஞ்சுள்ளது. பாணம் மகாவிஷ்ணு; ஒருகாலத்தில் மண்ணுலகை விழுங்கினவர்; மண்டின்றவர். மகா விஷ்ணுவை "மண்டின்ற பாணம்" என்று பாடிய காளமேகத்தின் வாயும் வேகின்றதே என்று வேகின்றார் குருடர்.

கவிஞரின் அருமையைக் கவிஞரே அறிவர்; கவி அறியுமா?

# 2. "காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்"

இது கம்பன் வாக்கு. நாட்டுப் படலத்தில் வருகின்றது. ஒரு நாட்டின் வளம், அந்நாட்டின் கனிதரும் விருட்சங்களில் தங்கியிருக்கிறது. பஞ்ச காவியங்களுள்ளே முதலில் வைத்துச் சொல்லப்படுகின்றது சீவகசிந்தாமணி. அந்தச் சிந்தாமணியிலே ஏமாங்கதம் என்று ஒரு நாடு. அந்த நாட்டிலே தென்னைமரங்கள் காய் மயமாய் விளங்குகின்றன. தென்னைக்குத் தெங்கு என்றும் பெயர். தெங்கு களிலிருந்து பழங்கள்—'காய் மாண்ட தெங்கின் பழங்கள்'— பறிக்காமலே பழுத்து விழுகின்றன. அந்தப் பழங்கள் அடிக்கடி உதிருகின்ற அதிர்ச்சியினாலே, தெங்குகளை அடுத்து நிற்கின்ற கமுகுகள், தங்கள் தலைகளிலே சுமக்கின்ற, இனிய தேன் பொதிந்தனவும் மேலுறை கீறிப் புறப்பட வேண்டியனவும்—புறப்படுவனவும்— புறப்பட்டனவுமான பூங்கொத்துக்கள் தாறு கிழிகின்றன; அவற்றுக்கயலில் பலாப்பழங்கள் பிளக்கின்றன; மாம் பழங்கள் சிதறுகின்றன; வாழைப்பழங்கள் சிந்துகின்றன. ஏமாங்கதம் என்ற பெயர் எட்டுத் திக்கிலும் பறக்கின்றது. ஏட்டிலே –நல்ல இனிய பாட்டிலே கனிதரும் விருட்சங்கள் குலுங்கிக்கொண்டு வருகின்றது ஏமாங்கத நாடு.

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்; கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி; வருக்கைபோழ்ந்து
தேமாங்கனிசிதறி; வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதமென்று, இசையால் திசை போயதுண்டே."

சிறுபஞ்ச காவியங்களிலே சூளாமணி சிறந்தது. அந்தச் சூளாமணியிலே ஒரு நகரம் வருகிறது. அந்த நகரத்திலே வெண்ணிலா வீசுகின்ற அழகிய தவள மாடங்களைச் சற்றே நிமிர்ந்து பாருங்கள். என்ன தெரிகிறது?

"மாம்பழக் கனிகளும் மதுத்தண்டீட்டமும்
தாம்பழுத் துளசில தவளமாடமே"

எங்கேயோ சிந்தாமணியிலே கனிதரும் மரங்கள் குலுங்குகின்றன; சூளாமணியிலே நலல வெண்ணிற மாடங்கள், பழங்கள் நிறைந்து பழுக்கின்றன; கடலிலே விளைந்த முத்து, அரசிளங் கன்னிகையின் கழுத்திலே விளங்குவதுபோல.

சீவக சிந்தாமணியிலே வருகின்ற கனிதரும் மரங்கள் கொடிகள் செடிகளை—சூளாமணியிலே வருகின்ற பழங்கள் நிறைந்த மாடங்களை, அந்தக் கம்பன் என்கின்ற வம்பு திரும்பியும் பார்க்கின்றானில்லை; (வம்பு=புதுமை) நாடு நகரங்களின் சிறப்பு—அங்கேயுள்ள உயர்தர குடிகளின் ஒழுக்கம், பழங்கள் சாப்பிடுவதிலேயோ, கனிதரும்மரங்கள் செடிகள் கொடிகள் வளர்ப்பதிலேயோ தங்கவில்லை என்கின்றான் அந்தவம்பு. வாயிலிட்டு வயிற்றிலே தள்ளுகின்ற "பழங்கள்" என்ற வார்த்தையையே கம்பன் வெறுக்கின்றான். "கனிகள்" என்ற வார்த்தையையே அவன் உபயோகிக்கின்றான். கம்பன் வாயூறுகின்ற கனிகள் "செவிநுகர் கனிகள்." வாயிலிட்டு வயிற்றில தள்ளுபவைகளல்ல; செவியினால் நுகர்ந்து இருதயத்தில் இருத்துபவைகள் அந்தக் கனிகள். அந்தக் கனிகளைத்தருமரங்கள் செடிகள் கொடிகள் வெகு நூதனமானவைகள்; அங்கும் இங்கும் நடந்து, திரிபவைகள். ஔவைப்பாட்டி முதல்

'கேளும் ஜெனமே ஜய மகா ராஜாவே' என்று தொடங்குகின்ற வைசம்பாயனர் பரியந்தமானவைகள். அவைகளுக்குக் காதைகள் என்று பெயர். காதைகள் என்றால் கதைகள். ஒரு நாட்டின் வளப்பம் அந்நாட்டிலே வழங்குகின்ற நல்ல கதைகளிலேதான் தங்கியிருக்கிறது. நாட்டிலே வளருகின்ற நல்ல கதைகள், அந்த நாட்டின் நகரங்கள் நரகங்களாகாமல் சுவர்க்கங்கள் ஆகுதற்கு ஏற்ற வழிதுறைகளை வகுத்துக்காட்டும். நாட்டில் உள்ளவர்கள் நகரங்களுக்கு வரும்போது அவர்களை அறியாமலே நல்ல கதைகளும் அவர்களுடன்கூட நகரத்திற்கு வந்துவிடும். நாலு ஆறுபேர் கூடுகிற இடங்களிலெல்லாம், கதைகள், தாங்களுங்கூட இருந்து, உடலுக்கும் உள்ளத்துக்கும் உயிருக்கும் களிப்புச் செய்துவிடுகின்றன. பாட்டியின் பாயிலே, பாப்பா வாயிருந்தபோது, பக்கத்திலே வழுவிவிழுந்த கதை, அடேயப்பா! எவ்வளவுகாலம் மறைந்தோடினபோதும், எங்கிருந்தோ ஏற்ற சந்தர்ப்பங்களில் வந்துவிடுகின்றது. கதைகள் தாய்ப்பாலுடன் சேர்ந்து இரத்தத்தில் கலந்து தேகம் முழுவதும ஓடிக்கொண்டிருக்கின்றன என்றும், மிருதுவான நரம்புத் துய்களில் குடியிருக்கின்றன என்றும் பலரும் பலவிதமாகக் கதைகளைப்பற்றிக் கதைகள் சொல்லுகின்றார்கள்.

பாப்பாக் கதை, பாட்டிக்கதை, பஞ்சதந்திரக் கதை, தென்னாலிராமன் கதை, விக்கிரமாதித்தன் கதை, பாரத ராமாயணக் கதைகள், 'கேளுங்கள் நைமிசாரணிய வாசிகளே!' என்று சூத மகாமுனிவர் சொல்லத் தொடங்குகின்ற புராணக் கதைகள், வேத நெறிகளைப்பற்றிய உபநிஷதக் கதைகள்

ஆகிய இவைகள் நமது பாரதநாட்டுக் கற்பகதருக்கள். இவைகள் சொரிகின்ற செவிநுகர் கனிகளே வசன இலக்கியக் கதைகள். நாடகங்கள், காவியங்கள், பிரபந்தங்களெல்லாம் கதைகள் என்கின்ற கனிகளின் வித்துக்களிலிருந்து முளைத்தவைகள்.

பஞ்சதந்திரத்திலே இரண்டு புறாக்களின் கதை வருகின்றது. ஒன்று ஆண். மற்றது பெண். கணவனும் மனைவியும். பெண் முட்டையிட்டு அடைகாக்கிற காலத்திலே ஆண் வெளியிலேபோய் இரை தேடிக்கொண்டு வரும். ஒரு நாள் ஆண், இரை தேடப் போய்விட்டது. திடீரென்று வானம் இருண்டு மழைபொழியத் தொடங்கிவிட்டது. இடி முழக்கம் மின்னல், காற்று, மழை. ஒருகண நேரம் ஆண் புறாப் பிரிந்துவிட நேர்ந்தாலும் தன் கணவன் தன்னைப் பிரிந்து ஒருமாத காலமாகிவிட்டதென்று வருந்துகிற வழக்கம் உள்ளது அந்தப் பெண் புறா. அந்தப் பெண் புறாவுக்கு இந்த இடி இடிக்கின்ற மழைக்காலம் எப்படியிருக்கும்! குஞ்சுகளையாவது கட்டித் தழுவிக்கொண்டு சற்றே ஆறலாம் என்றால் இன்னும் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவரவில்லை. அந்தப் பெரிய காட்டிலே அடர்ந்து வளர்ந்த அந்த மரத்திலே அந்தப் பெண் புறாவைத் தேற்றுதற்கு யாரும் இல்லை. மழை சிறிதே தணிகின்றது. மரத்தின் உயர்ந்த கொம்பர் ஒன்றுக்குப் பெண் புறா வருகின்றது "இரைதேடப் புறப்பட்ட என் பிராணநாயகன் இந்த மழையில் எங்கே தவிக்கிறாரோ! யாராவது வேடர் கண்ணிவைத்து அகப்படுத்தியிருப்பார்களோ!'' என்றெல்லாம் புலம்புகின்றது பெண் புறா.

ஒரு வேடன் அந்த மழையிலே நனைந்து நடு நடுங்கிக்கொண்டு அந்த மரத்தின் அடியில் ஒதுங்கி நிற்கின்றான். அவனுடைய ஒரு கையிலே அம்பும் வில்லும் கண்ணியும் இருக்கின்றன. மற்றக் கை யிலே ஒரு குருவிக்கூடு. அந்தக் கூட்டுக்குள்ளே ஒரு புறா. அந்தப் புறா, புலம்புகின்ற பெண் புறாவை நோக்கிச்சொல்லுகின்றது. "பிராணநாயகி!புலம்பிக் கொண்டிருக்கிறதற்கு இதுசமயம் அன்று. இதோ பார்! இந்த வேடன் நமது வீட்டுக்கு விருந்தினன். மழையால் நனைந்து நடுங்குகின்றான். இவனைப் பசி வாட்டுகின்றது. குளிரைப் போக்கி இவன் பசியை ஆற்று. அது உனது தர்மம்!" –இவ்வாறு அந்தக் கூட்டுள் அகப்பட்டிருந்த ஆண் புறா மரக் கிளையி லிருந்த பெண் புறாவுக்குச் சொன்னது. பெண் புறா அந்த வார்த்தைகளைக் கேட்டது. இல்லை! இல்லை! கேட்கமுன்னமே அந்த மரத்தடியில் அந்த வேடன் ஒதுங்கி நிற்பதைக்கண்டது. கண்டது காணமுன்னமே நெருப்பு எழுப்பி அந்த வேடனைக் குளிர் காய்வித்தது. வேடன் குளிர் நீங்கிக் கொட் டாவி விடுகின்றான்.

"விருந்தினனே! சற்றே பசி தணி" என்று சொல்லிக்கொண்டு அந்த நெருப்பின் மத்தியிலே குதித்து, அந்த அருமருந்தன்ன பெண் புறா வெந்துபோகின்றது. வேடன் கண்களில் நீர் துளிக்கின்றது. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. "இந்தப் பதிவிரதா தெய்வத்தின் கணவனையா கண்ணிவைத்தேன்" என்று சலித் துக்கொண்டு ஆண் புறாவைத் திறந்துவிடுகின்றான் வேடன். "அவள் போய்விட்டாள், அவளைப் பிரிந்து எனக்கு இனி இங்கே என்ன அலுவல்; விருந்தி

னனே, குறைப்பசி கொடியது என்னையும் அருந்து'' என்று சொல்லிக்கொண்டு ஆண் புறவும் அதே அக்கினியில், வெந்து சுருளுகின்ற அந்தப் பெண் புறவின்மீதே விழுந்து, அதனை இரு சிறகுகளாலும் அணைத்து அதன் உயிரோடு தன் உயிரையும் ஒன்றுசெய்தது. அந்த ஆத்ம யாகத்தை அந்த வேடனல் கண்கொண்டு பார்க்கமுடியவில்லை. அவனுடைய முரட்டுத் தேகம் வெயிலிற்பட்ட வெண்ணெயாய்ப்போனது. யாகாக்கினியிலே நெய் சொரிபவன்போலே, அந்தப் புறக்களின் செய்ந்நன்றிக்கு அழுது அழுது, உருகி உருகி அந்த அக்கினியே கதி என்று அதிற் குதித்து, உயிர் துறந்தான் வேடன். புறக்கள் பிறகே; வேடன் முன்னே. வேடன் தேவனுய்விட்டான். சுவர்க்க லோகத்திலே கற்பகதரு நீழலிலே பழைய தம்பதிகளான புறக்களை வரவேற்று விருந்துபசாரஞ் செய்கின்றான் வேட தேவன்.

பஞ்சதந்திரந் தந்த புறக் கதையாகிய செவியால் நுகருங் கனிக்குள்ளே இரண்டு வித்துக்கள் இருக்கின்றன. ஒன்று: 'இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற் பொருட்டு' என்ற குறள் வித்து. இந்த வித்தைப் பேணினல், இதிலிருந்து நல்ல நாடகம், காவியம், இலக்கியம் முளைகொள்ளும். மற்ற வித்து வேடதேவனேடு சம்பந்தப்பட்டது. அதனை நீங்கள் கண்டு பிடியுங்கள்.

கனிகளைத் தருவன மரங்கள் கொடிகள் என்று இனியுஞ் சொல்லுவீர்களா?

"காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்."

# 3. சிவகாமி சரிதை

நள்ளிருள். நடுக்காடு. காலை மாலை நிழல்போலே நாமும் நடக்கத் தாமும் நடக்கிற காடு அந்தக் காடு. கரைதுறை திக்குத்திசை தெரியாத காடு. இருள் மயம். இடையிடையே சிறிய சிறிய ஒளிகள்; பாம்புகளின் வாயிலிருந்தும், ஆனைகளின் தந்தங்களிலிருந்தும், புலிகளின் கண்களிலிருந்தும் வருகிற ஒளிகள் அந்த ஒளிகள். இந்த ஒளிகளுக்கும், ஆகாயத்திலே கண்சிமிட்டுகின்ற சுந்தர தாரகைகளுக்கும் இடையே சந்துபேசி அங்கும் இங்கும் பந்தம் பிடிக்கின்றன மின்மினிகள். எங்கும் மௌனம் ஏகாந்தப் பெருங்ககனம். அங்கே 'மனிதன்' என்ற வார்த்தைக்கு இடமில்லை. உலகம் வேறு; இந்தக் காடு வேறு.

முற்றத் துறந்த முனிவர்கள்—உலகந்தானே விட்டுவிலகியவர்கள் – இந்த மௌன வனத்திலே தபசு செய்வார்களோ என்னவோ! எங்கோ இருந்து ஒரு குரல், அந்த அந்தகாரத்தைக் கிழித்துக்கொண்டு, மௌனத்தைக் குலையாமலே எழுகின்றது. "ஓ மகா முனிவர் திலகமே! மௌன சிகரமே! தங்கள் திருவடிகளுக்கு வணக்கம். தங்கள் திருவடி வாழட்டும். சற்றே மனம் இளகவேண்டும்; கிருபை பாலிக்கவேண்டும். தேவரீருடைய திருவாயிலிருந்து, ஒரு திருவார்த்தை வெளிவருமாயின், அந்தத் திவ்ய அமிர்தம், மகா பாவியாகிய ஒருவன் உய்தற்கு வழி செய்யும். இந்தப் பாவி பாழான அடவியிலே பாதைதப்பி அலைகிறான்; அங்கும் இங்கும் உலைகிறான்; கறங்குபோலே சுழல்கிறான். தேவரீருக்குப்

பெரிய புண்ணியமாயிருக்கும். சிறியேனுக்கு ஒரு திரு வார்த்தை அநுக்கிரகிக்கவேண்டும்.''

ஒரு உருவம் எழுகின்றது. "ஏ, மைந்தா! இந்த இடம் உலகம் பாழ்போன வெளி. இதுதான் எனது வீடு. பந்தங்கள் பாழ்போனவர்களுக்குத்தான் இங்கே சம்பந்தமுண்டு. நீ எப்படி இந்த இருளில் இங்குவந்து சேர்ந்தாய்? இந்த இருள் விடியும்வரை நீ என்னைத் தொடர்ந்து வர வல்லையானால், அதி வீரன் ஆனால், என் பிறகே வா. இருள் விடியும்; உன் வேதனைகள் மெய்ச் சலிப்புக்கள் உன்னை விட்டு அகலும். விடிந்தபிறகு நீ சேரவேண்டிய இடத்துக்குச் சென்று சேர்; வா.''

மௌனம். முனிவர் நடக்கின்றார்.

குழந்தை முனிவனுக்கு உரோமம் சிலிர்க்கின்றது. கண்களில் நீர் துளிக்கின்றது. கருவிகரணங்கள் ஸ்தம்பித்துவிட்டன. பழைய இருதயம் இறந்தது. அவனை ஏதோ இழுக்கின்றது. பெரிய முனிக்குப் பிறகே சின்ன முனி நடக்கின்றான்; ஊசியைத் தொடரும் நூல்போலக் குழந்தை முனிவன் தொடர்கின்றான். மலைகளில் ஏறுகின்றான்; குழிகளில் குதிக்கின்றான்; நதிகளில் நீந்துகின்றான்; அடவிகளில் நுழைகின்றான்; அந்த முனிவனின் அடிகளையன்றி அயலில் வேறொன்றையும் அந்த இள முனிவன் அறியான்.

தூரத்திலே ஒரு நெருப்புச்சுடர்; அது தலை வளைத்து அழைக்கின்றது. அது ஒரு தனி இடம். முனிவர் அணுகுகின்றார். நிர்மலமான விறகுகளை

அடுக்கி இன்னும் நெருப்பை எழுப்புகின்றார்; நெருப்புச் சுவாலித்து மேல் எழுகின்றது. குழந்தை முனி நாணிக் கூசி ஒதுங்கி ஒருபக்கத்தில் குந்தியிருக்கின்றான். அவன் தன்னுடைய தாமரை மலர் போன்ற ஒரு கையினாலே அழகிய தனது திருவதனத்தை ஒரு அளவுக்கு மறைத்துக்கொண்டு இருக்கின்றான். அந்தச் சிறு முனிவன் திடீரென்று பெரிய மௌன முனியாய்விட்டான். ஒன்றும் பேசுகின்றானில்லை. சுவரில எழுதிய சித்திரம்போல ஆடாமல் அசையாமல் பேசாமலிருக்கின்றான். பனி மழைபொழிகின்றது. அவன் நெருப்பை அணுகாமலிருக்கின்றான்.

"மகனே, என்ன கூச்சம்? இனி நாம் இருவேமும் ஒருவேம். நம்மில் யார் பெரியர்? யார் சிறியர்? இருவரும் ஒருவர். கிட்ட வா. நெருப்புத் தன்னைச் சேர்ந்தவருக்குக் களிப்புச் செய்யும்; சேராதவருக்குப் பனிப்புச் செய்யும். ஏன் பனியில் நடுங்குகின்றாய், அருகில் வா."

குழந்தை முனிவன் செவியில் இவை ஒன்றும் ஏறவில்லை. ஒருமுறை சொல்லி, இருமுறைசொல்லி, மூன்றாம் முறையும் ஆனது. அவன் இருந்தபடி இருந்தான். பெரிய முனிவன் மேலும் நெருப்பை எழுப்பிக் குழந்தை முனிவனை உற்று நோக்கினான்.

வேஷ இரகசியங்களெல்லாம் வெட்டவெளியான!

குஞ்சு முனி எழுந்தான். 'அன்' விகுதி 'அள்' விகுதியாயிற்று; 'அவன்' வேஷம் கலைந்து 'அவள்' ஆனாள். கொலைக்குற்றஞ் செய்தவனுடைய

இருதயம்போலே, கொல்லனது உலை முகத்துத் துருத்திபோலே, அவளுடைய நெஞ்சு படபடக்கின்றது; விம்மிப் பொருமி மூச்சுத் திணறுகின்றது ஆண்கோலத்தை அந்தப் பொருமல்—அந்த மூச்சு—அப்படியே விழுங்கிவிட்டது. பெரிய சுவாமி சுவரில் எழுதிய சுவாமியாய்விட்டார். அவளுடைய முகத்தில் பூரணசந்திரன் பிரகாசிக்கின்றது; சூற் கொண்ட மேகச் சடைக்கட்டு அவிழ்ந்து சரிந்து தாழுகின்றது; கண்களாகிய கயல்கள் ஒன்றோ டொன்று உறழ்ந்து பிறழ்கின்றன. பவளவாயிலே கொவ்வை இதழ் துடிக்கின்றது; இடையிலே மின்னல் துவளுகின்றது; கண்களில் முத்தம் துளிக்கின்றது; கைகளாகிய தாமரைகள் கூம்புகின்றன. "மன்னிக்கவேண்டும். பரிசுத்தமான இந்த ஆசிரமத்தை அசுத்தஞ்செய்த இந்த மகாபாதகியை மன்னிக்கவேண்டும்" என்று ஒரு தழுதழுத்த குரல் வருகின்றது; முனிவன் செவியில் நுழைகின்றது. அவன் செவிக்கு உயிர்வருகின்றது. அவள் வாயிலிருந்து கதை வருகின்றது.

"காவிரிப் பூம்பட்டினத்திலே ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகள்; பெண்கள் இருவர். ஆண் ஒருவன். அவனுக்கு ஒரு பிள்ளை; ஆண்பிள்ளை; ஒரே ஒரு பிள்ளை. இரண்டு பெண்களுள் ஒருத்தி முழு மலடி; மற்றவளுக்கு ஒரே ஒரு பிள்ளை; பெண்பிள்ளை; இந்தப் பாதகி. பெண்ணுக்கு நான் ஒருத்தி. ஆணுக்கு அவர் ஒருவர். ஐயோ! அவரும் நானும் தேனும் பாலும். ஒன்றாய்ப் பழகினோம்; ஒன்றாய் வாழ்ந்தோம். இருவரும் ஒருவர். பச்சைக் குழந்தைகள்.

"அந்த மலடி பெரிய பணக்காரி. கோடிக் கணக்கில் எனக்கு வைத்துவிட்டுப் போய்விட்டாள். எனக்கோ தலைகால் தெரியவில்லை. அந்தப் பாவி யின் பணம் என் கண்ணைக் கெடுத்தது. அவருடைய அருமையை மறைத்தது. அவர் என் அதிபர் என்பதை நான் மறந்தேன். அவர் குறிப்பாக உணர்த்தினர்; நான் கொள்ளவில்லை. 'வெம்புவாள் விழுவாள் பொய்யே' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டார்; அவர் போய்விட்டார். வருவார் என்று நம்பினேன். அவர் வரவில்லை; போய் விட்டார்!

"ஒருவாரம், ஒருமாதம், ஒருவருடமும் ஆகிவிட்டது! ஐயோ, அவரைக் கண்டவர்கள் கேட்டவர்கள் எவரையுமே' காணேம். நான் இனி எங்கே தரிக்க! எங்கே இருக்க! எங்கே உறங்க! உலகமெல்லாம் எனக்குச் சுடுகாடே!"

மௌன முனிவனுக்குக் கண்ணீர் கொப்பளிக்கின்றது. சரீரம் பதறுகின்றது; அடக்கமுடியவில்லை. மெல்ல எழுந்து சிறிது நடந்து ஏதோ எடுக்கச் சென்றவன்போலத் திரும்பிவந்து பழைய படி இருக்கின்ருன். நிறுத்தி நின்ற கதை தொடருகின்றது.

"சுவாமீ, பொறுத்தருளல் வேண்டும். அவர் தந்த அறிவுகொண்டு, 'அவர் உண்டு' 'எங்கும் உளர்' என்று நம்பி, இந்த உடலில் உயிரை வைத்துப் பாதுகாத்து வந்தேன்; அவரைக் காணவில்லை. அவரோ நல்லவர்; அருளுடையவர்; கிருபா சமுத்திரம் நானே நன்றிகெட்டவள்; குடிகேடி!

4

"அவர் உயிருக்குயிர்; பரமாத்மா. அவருடைய அநந்த கல்யாணகோலங்களில், ஏதோ சிற்சாயை, – சுவாமீ, மன்னிக்கவேண்டும் – தங்களிடம் இருப்பது கண்டு, என் குறைகளை முறையிட்டு மனத்துயரம் சற்றே ஆறினேன். இனி இந்த உடல் எனக்குச் சுடுகாடு. இந்த அக்கினியே கதி! தேவரீரே சாட்சி!......."

கதைக்கு இன்னும் முற்றுப்புள்ளி வரவில்லை. மௌன தவமுனிவனை அந்தக் கோலத்தில் அந்த இடத்தில் காணவில்லை. ஆனல், அதே இடத்தில் 'அவ'னே எழுந்தான்!

"சிவகாமி! யான் உனது சிதம்பரனே" என்ருன்.

அவ்வளவுதான்; இருவரும் மற்றேருருவம் ஆனர். 'எவர்தாமுன் அணைந்தவரென்றிதுகாறும் அறியேம்; இருவருமொன்ருயினரென்றே அறையுஞ் சுருதி'

'தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக் கூடலை நீ ஏகமெனக் கொள்'

# 4. மதியும் பிறையும்

ஒளவையார் சோழநாட்டுக்கு வருகின்றார். ஒரு பெரிய தெருவீதி. அவ்வீதியிலே ஒரு வீட்டுத்திண்ணை. அந்தத்திண்ணையிலே சிறிது சிரமபரிகாரஞ் செய்வதற்காக ஒளவையார் உட்கார்ந்தார். அப்போது அங்கே ஒரு பெரிய ஊர்வலம் வருகின்றது. சோழமகாராசா பவனிவருகின்றான். மகாராசாவுக்கு ஒரு பக்கத்தில் புகழேந்திப்புலவரும் மற்றப்பக்கத்தில ஒட்டக்கூத்தரும் வருகின்றார்கள். ஒட்டக்கூத்தர் வயசு கூடியவர். அல்லாமலும் மகாராசாவுக்கு உபாத்தியாயராகவும் இருந்தவர். அதனாலே அவருக்குப் பெரிய கர்வம் உண்டு. கவிஞர்களுக்கெல்லாம் தாமே சக்கரவர்த்தி என்று தம்மைத் தாமே ஒட்டக்கூத்தர் புகழ்ந்துகொள்ளுவார். இது ஒளவையாருக்குத் தெரியும். ஒளவையார் தெருத்திண்ணையிலே இருந்தபடி ஒருகாலை மடக்கிச் சோழமகாராசாவுக்கு மரியாதை செய்தார். புகழேந்தியைக் கண்டதும் மற்றக்காலையும் மடக்கி அப்புலவருக்கு மரியாதை செய்தார். அதன்பிறகு இருகால்களையும் நீட்டி ஒட்டக்கூத்தருக்குப் பெரிய அவமரியாதை செய்தார். இதனைக் குறிப்பாலுணர்ந்த ஒட்டக்கூத்தருக்குச் சிறிதும் பொறுக்க முடியவில்லை. மனங்கொதித்தார்; அழுன்றார்.

அப்பொழுது ஒளவையார் வெகு சாந்தமாக "ஓ! மகா கவீந்திரராகிய ஒட்டக்கூத்தரே, சோழமகாராசாவை விளித்து ஒரு பாட்டுப்பாடும். அப்பாட்டு ஒரு பெண் சந்திரனைக் கண்டு வருந்துவதாக அமையவேண்டும்; பாட்டின் இறுதி வரியில் சந்

திரனைக் குறிக்கும் பெயர் மூன்றுமுறை வரவேண்டும்; மூன்று வேறுபொருள் தரவேண்டும்'' என்றார். ஒட்டக்கூத்தர் பாடினார். அந்தப்பாட்டிலே சிலேடையாக ஒளவையாரை அவமானஞ் செய்ய வேண்டுமென்ற குறிப்பும் அவருக்கு இருந்தது. அந்தப்பாட்டு இது:-

''வெள்ளத்தடங்காச் சினை வாளை
வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்து மழைத்
துளியோடிறங்குஞ் சோணாடா
கள்ளக்குறும்பர் குலமறுத்த
கண்டாஅண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டப்பேதை
பெரியமதியும் இழந்தாளே''

இப்பாட்டில் முதல்மூன்று வரிகளும் சோழனைப் புகழ்ந்தவை. நான்காம் வரி ஒரு தலைவி சந்திரனைக் கண்டு வருந்தியது.

''பெருகுகின்ற வெள்ளத்துள்ளே அடங்கி வெள்ளம் போகிற வழியில் போக விரும்பாத வாளை மீன், நெல்வயலுக்கு வேலியாய் அமைந்த கமுகின் மீது பாய்ந்து, சற்றே தங்கி, அதன்பிறகு ஒரு துள்ளுத் துள்ளிக் கிளம்பி, சூல் கொண்ட முகிற்படலங்களைக் கிழித்து; மழைத்தாரை முன்னே செல்லப் பின்னே அதனைத்தொடர்ந்து பழைய உறைவிடமான வயல் வெள்ளத்துள்ளே இறங்குகின்ற,—கற்புடை மகளிர் போல வாளைமீன்களே மழையை வருவிக்கின்ற—வளங்கள் நிறைந்த நாட்டையுடைய

சோழ மகாராசாவே! பகைவர்களைக் கண்டம் செய்பவனே! நந்தகோபாலனை ஒத்தவனே!

"காதலனை நினைந்து வருந்துகின்ற அந்தப் பேதையாகிய பெண், குழந்தையாகிய பாலசந்திரன் உதயஞ்செய்து வருதலைக் கண்டு, 'நிறை' என்னுங் குணம்போய், பிறருக்குப் புத்திபுகட்டக்கூடிய பெரிய புத்தியையும் அதனைக்கண்டதனால் இழந்துவிட்டாளே! ஆ, இவள்நிலை பெரிதும் பரிதவிக்கத்தக்கது" — என்பது இப்பாடலின் கருத்து.

"புலமையிலும் வயசிலும் வெறுங் குழந்தையாகிய புகழேந்தியின் குய்யுக்திகளைக் கண்டு மயங்கி, எனது முதிர்ந்த புலமையைக் கண்டுகொள்ளாது, இந்த ஒளவைக் கிழவி, தனது பெரிய புத்திகளையெல்லாம் இழந்து 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்ற தனது வாக்குக்குத் தானே இலக்கியமாயினள்" என்ற ஒரு இகழ்ச்சிக் குறிப்பையும் இறுதி வரியில் தொனிக்கச் செய்து அதனால் களிப்புக் கொண்டு, அங்கே குழுமிநின்றவர்களை நோக்கினர் ஒட்டக்கூத்தர்.

அதேசமயத்தில் "ஒட்டா, ஒரு மதி கெட்டாய்!" என்றார் ஒளவையார். இறுதிவரியிலே சந்திரனின் பெயரை மூன்று வேறு பொருளில் மூன்று முறை வைக்கவேண்டியவர், சந்திரனின் பெயராகிய மதியை இரண்டு வேறு பொருளில் இரண்டுமுறைதான் வைத்தார். ஒளவையாரை ஏசவேண்டுமென்ற ஆவலினாலே, இன்னுமொருமுறை இன்னுமொரு பொருளில் வைக்க மறந்துபோனார். மதிகெட்டுப்போனார்.

ஔவையார் புகழேந்தியைப் பார்த்தார். அவர்பாடு கின்றார். அவர் பாட்டு இது:-

"பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்த தென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண்டெறியுந் தமிழ் நாடா
கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே ராஜ குலதிலகா
வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே"

"சேறு பொருந்திய வயலிலே உழுகின்ற உழவர்கள், (தாகசாந்தி செய்வதற்கு ஒரு உபாயஞ் செய்கின்றார்கள்) 'குரங்குகள் அயலிலேஉள்ள பலாக்களின் கனிகளைப்பறித்துப் பாழ்செய்கின்றன'என்று சாட்டுச் சொல்லிக்கொண்டு, வயலிலேயுள்ள சங்குகளினாலே குரங்குகளுக்கு எறிகின்றார்கள்; அப்படி எறிய, குரங்குகள் பழிக்குப் பழிவாங்க எண்ணிப் பருவமான நல்ல செவ்விளநீர்களைப் பறித்து உழவர்கள் மேலே எறிகின்றன. இப்படிப்பட்ட வளங்கள் நிறைந்த தமிழ் வழங்கும் நாட்டுக்கு அரசனாகிய சோழமகாராசாவே! பகைவர்களாகிய கொங்க நாட்டார்களுக்கு யுத்தத்தில் சுவர்க்கங் கொடுத்த அரசே! ராஜகுல திலகமே,!

"இந்தப் பெண்ணுடைய வேல்போன்ற கண்கள், பிரிந்தவர்களை வருத்துகின்ற கறுகண்மையுடைய பாலசந்திரனுக்கும், கரும்புக்கு இறைவனாகிய மன்மதனுக்கும் மெலிவு அடைந்து, நீரைச் சொரியா நிற்கும். பாவம் இவள்நிலை இரங்கத்தக்கது!

தமிழ் என்றால் இனிமை. குரங்குகள் பறித்து வீசிய இளநீர் உழவர்களின் தாக தாபத்தைப் போக்கி அவர்களுக்கு நல்ல 'தமிழ்' செய்தவாறு போல, புகழேந்திப் புலவர் நான்காவது வரியில், மூன்று பொருளில் வழங்கிய மூன்று 'பிறை'களும் ஒரு மதிகெட்ட ஒட்டக்கூத்தரின் கோப தாபங்களைப் போக்கி அவருக்கு நல்ல 'தமிழ்' செய்தன, (தமிழ் = இனிமை)

* * * *

ஒளவையாரையும் இரு புலவர்களையும் சந்தித்தோம். 'வெள்ளத்தடங்காச் சினைவாளை,' 'பங்கப் பழனத்துழு முழவர்' என்ற பாடல்கள் தனிப்பாடலில் உள்ளவைகள். இவற்றைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துப் புலவர் ஒருவருடைய பாடலையும் அறிமுகம் செய்து வைக்கிறேன். பாட்டு இது:

**" வானப் பிறையையும் வானப்புலியையும் மையல் செய்யும்**
**தேனப் பிறையையுந் தென்றலையுங் கண்டு சில்லரிக்கண்**
**மீனப் பிறைக்கும் விழிவேலை மேவிலர் வேடனிடும்**
**ஊனப் பிறைச்சிக் குகந்தார் மறைசையி லுத்தமரே."**

இந்தப் பாட்டில், வரிதோறும் முதற் சீரையடுத்து நான்கு பிறைகள் ஒன்றுக்கு நேரே ஒன்றாக, வெவ்வேறு பொருளில் வந்திருக்கின்றன. — எவருடைய நிபந்தனையுமின்றி அநாயாசமாகவே வந்திருக்கின்றன. 'மறைசை' என்கின்ற வேதாரணியத்திலே எழுந்தருளியிருக்கின்ற சிவபிரான்மீது காதல் கொண்ட ஒரு பெண்ணின் இரங்கத்தக்க நிலையை இப்பாடல் எடுத்துக் கூறுகின்றது.

" வானத்தில் உதித்த பிறைச்சந்திரனையும், புலிபோன்ற தறுகண்மையுடைய வாடைக் காற்றையும், மயக்கத்தைச் செய்கின்ற தேன் பொருந்திய அம்பாகிய மலர்களையுடைய மன்மதனையும், தென்றற் காற்றையும் கண்டு; இந்தப் பெண்ணினுடைய சிலவாகிய செவ்வரி பரந்த கண்களாகிய மீன்கள் நீரைச் சொரியா நிற்கும். இங்ஙனம் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கின்ற வேல்போன்ற விழிகளை உடையவளாகிய பெண்ணை; கண்ணப்பராகிய வேடுவர் நிவேதித்த ஊன் அப்பிய இறைச்சியை அமுது கொண்டு மகிழ்ந்தவரும், மறைசை என்கின்ற வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும் உத்தமருமாகிய வேதாரணியேசுரர், இன்னுந்தான் சென்று அணைந்திலர். அழுது அழுது கண்ணீர் ஆறுகின்ற இந்தப் பெண்ணுக்குச் சற்றும் இரங்காத இந்த மறைக்காடர் திருவுள்ளத்தின் திண்மைதான் என்னே!

நான்கு பிறைகளை, ஒரே வரிசையில், நான்கு வேறு பொருளில் தந்து, இனிமையான 'வானப் பிறை' என்ற பாடலைப் பாடிய நமது யாழ்ப்பாணத்துப் புலவர் யாரென்பது உங்களுக்குத் தெரியுமா? அவர்தான் சின்னத்தம்பிப் புலவர்.

# 5. இலங்கை வளம்

மாகாரின் மின்கொடி மடக்கினர் அடக்கி
மீகாரம் எங்கணும் நறுந்துகள் விளக்கி
ஆகாய கங்கையினை அங்கையினின் அள்ளிப்
பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம்.

இது, கம்பராமாயணம், சுந்தர காண்டம், ஊர் தேடு படலத்தில் மூன்றும் செய்யுள்.

'சருக்கரை விளைகின்ற இனிய வசனங்களை வசனிக்கின்ற மகளிர்கள், பெரிய மேகங்களிற் படர்ந்த மின்கொடிகளை வலித்து மடக்கிக் கட்டி, அவைகளினாலே உப்பரிகைகளிற் பரவி இருக்கின்ற மகரந்தம் முதலிய வாசனைத் துகள்களைப் போக்கி, விளக்கஞ்செய்து பெருக்கிப்—பக்கத்தே ஓடுகின்ற அருவிகளை அகங்கைகளில் முகந்து நீர்தெளிக்கின்ற மாளிகைகள்' இலங்கை மாநகரில் மலிந்துள்ளன என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் ஆஞ்சநேயரின் கண்கொண்டு வருணிக்கின்றார்.

அப்புத்தளை வீதிகளில் உலாவி, நாவலப்பிட்டி வழியாகக், குயின்ஸ் பெரித் தோட்டத்துக்குப் போய்ப், பிறகு கண்டிக்கு வந்து சில தினந்தங்கி மலைவளங்கண்டு களிக்கின்றவர்கள்—ஐயாயிரம் அடிகளுக்குமேலே, மலை உச்சிகளில் உள்ள மாளிகைகளிலே, பட்டப்பகலிலே கண்ணாடிக் கதவுகளை அடைத்து, மின்சார தீபங்களை ஏற்றச் 'சாளரந் தோறும் தோன்றும் சந்திர உதயங்கள்' முகிற் படலங்களின் ஊடே ஊடே தோன்றி மறைவதைக்

மாகார்-பெரிய மேகம். மீகாரம்—மீக்கிருகம்; மேல் வீடு.

கண்கொட்டாது கண்டவர்கள் — கண் நிறையக் கண்டவர்கள், நமது மலைநாட்டு மாளிகைகளைக் கம்பர் வருணித்தது போதாதென்று குறை சொல்லுவதற்கு முன்வரலாம்.

சீதை இலங்கையிலே பிறந்தவள்; இங்கேயே சிறைவந்தவள் ஆஞ்சநேயர் அவளைத்தேடிக் கடல் தாண்டி வந்தவர்; ஸ்ரீராமன் அணைபோட்டு வந்தவன். இவர்கள் இலங்கைக்கு வரும்போது, இவர்கள் சார்பிற் கம்பரும் இலங்கையை இடையிடையே நோக்கியதுண்டு. கம்பருக்கு இலங்கைக்கு வருதற்கும், வந்து மலைநாட்டு மாளிகைகளைத் தரிசிப்பதற்கும் நல்ல சந்தர்ப்பம் கொடுத்து வைக்கவில்லை. இந்த நிலையிற் கம்பரைக் குறைசொல்லாமல், இவ்வளவாவது சொன்னதற்கு நிறை சொல்ல வேண்டும்.

நமது நாட்டுக் கவிஞர்பிரான் சின்னத்தம்பிப் புலவர் மலைநாட்டு வளங்களை—மேகமண்டலத்தை அளாவுகின்ற மாடமாளிகைகளை—நேரிற் கண்டு களித்தவர். நாம் அவரிடம் போனால்,

**மஞ்சளாவிய மாடங்கள் தோறும்**
**மயில்கள் போல்மட வார்கணஞ் சூழும்**
**அஞ்ச ரோருகப் பள்ளியின் மீமிசை**
**அன்ன வன்னக் குழாம்விளை யாடும்**
**துஞ்சு மேதி சுருக்களைச் சீறச்**
**சுருக்க ளோடிப் பலாக்கனி கீறி**
**இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்**
**ஈழ மண்டல நாடெங்கள் நாடே**

என்று, தமது பறாளாய் விநாயகர் பள்ளில் எடுத்துப் படித்து நமக்குத் திருப்தி அளிப்பார்.

நாங்களும் மலைகளில் மெல்ல மெல்ல ஏறிச், சின்னத்தம்பிப் புலவருடைய மஞ்சு அளாவிய மாடங்களிலே, மாகாரின் மின்கொடிகளை மடக்கி அடக்கிய மீக்கிருகங்களிலே பாகாய செஞ்சொலவர்களாகிய மயில்கள்போல் மடவார்களுக்கு மத்தியிலே வீற்றிருந்துகொண்டு, நாற்புறமும் நோக்கி இலங்கை வளம் கண்டு, எட்டியமட்டில் ஒரு சிறிது நுகருவோம்; அநுபவிப்போம்.

அதோ மகாவலிகங்கை பொங்கி ஓடுகின்றது. பேராதனைத் தோட்டத்தை நோக்குங்கள். அதன் அருகிலே மகாவலிகங்கைக் கரையிலே, தன்னந் தனியே ஒருவர் நிற்கின்றார்.

அவர் யாரோ?

தங்கமயமானதோற்றம்; களங்கமில்லாத மனம்; அகத்தின் அழகு முகத்திற் பிரகாசிக்கின்றது; தங்கத் தகட்டில் வெள்ளிக் கம்பிகளைப் பதித்தாற்போல, அவருடைய தாடி மெல்லிய காற்றுக்கு அசைந்து சோபிக்கின்றது. செந்தாமரை மலர் வெள்ளை அன்னத்தைத் தேடி அடைவது போல, அவருடைய சிவந்த கை —தளிர்போன்ற விரல்கள், இடையிடையே தாடியைத் தேடி உளர்ந்து கொடுக்கின்றன. அவர் காவி தரிக்கவில்லை. தூயவெண் துகில் போர்த்தி இருக்கின்றார். கையில் தண்டு கமண்டலம் இல்லை; காகிதமும் எழுதுகோலும் அழகு செய்கின்றன.

அவர் யாரோ?

சற்றே அணுகுவோம். ஓகோ! அறிமுகமானவர்கள்; நமது நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர்கள்!

*புலவர் அவர்கள் காட்டுவதைக் காண்போம். சொலலுவதைக் கேட்போம்; கங்கையைப்போலக் கவிதை பொங்கிவருகின்றது.*

சீரான எங்நாடு மெப்பதியு மூரும்
சேர்வான தாவரமும் மாமரமுங் காவும்
பேரான கனிமரமும் பெருமரமுந் தாவில்
பெட்பாரும் பெண்ணைகளும் வாழையொடு மேவி
நேராக ஓரிடத்து நிலையாகக் காண
நிலமடந்தை வைத்ததென நின்றுபய னுதவும்
பேராத ஊைப்புதிய நந்தவன மகவைப்
பேணியமு தூட்டிமகா வலிகங்கை பெருகும்.

*புலவரவர்கள் மாணிக்க கங்கையை நோக்கிச் செல்லுகின்றார்கள். நாங்களும் அவர்களைத் தொடருவோம்.*

அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயஎன அருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே.

*இப்பொழுது வாய்க்குள்ளே 'பெரியவனை மாயவனை' என்ற சிலப்பதிகாரப் பாட்டு வரலாம்.* அது மாமன் பாட்டு; இது மருகன் பாட்டு. அதற்கு இது; இதற்கு அது. இதராவிதரம்.

உண்ட செந்தமிழ்ச் சைவ நூலமு
தோங்க நல்லைவந் தருளு நாவலன்
கண்ட னப்பிர சங்க மாமெனக்
கதிரை மாமலை அருவி காலுமே.

*இனி, அப்புத்தளைப் பாதையாலே போய்க் கண்டி நகரைத் தரிசிப்போம்.*

மலைவளத்தைக் காண்பதற்கு மனங்கொண்ட விலங்கை
மாதேவிக் காகமல ரயனிதனை வகுத்தான்
நிலைவளரு மிந்நகரை யெடுத்துரைக்க வென்றால்
நெடுமுடியா யிரமுடைய படவரவு வேண்டும்.

*அதோ கொழும்புமாநகர் தோன்றுகின்றது.*

கலைப்பட்டினம் கரைப்பட்டினம்
கலப்பட்டினம் பெருமை
தலைப்பட்டினம் வரைப்பட்டிடாத்
தலைப்பட்டினம் கொழும்பு.

*இனி, யாழ்ப்பாணம் புறப்படுவோம். பஸ்வண்டியிற் புறப்படுவோம்; காடுகளிற் பல காட்சிகளைக் கண்டு களிக்கலாம்.*

சரிந்த வேங்கை முரிந்த கோங்கு
தகர்ந்த சாந்து விழுந்த வேய்
இரிந்த மிருகம் எழுந்த பறவை
இழிந்த அருவி கழிந்தவே.

மங்கலந் திகழ் மாப்பிள்ளை மார்வர
மாமன் பக்கம் வரவெதிர் கொள்ளல்போற்
பொங்கும் வெள்ளப் புதுமண நீர்வரப்
புரளு மீனிரை போயெதிர் கொள்ளுமே.

*இவைகள் கலிங்கத்துப் பரணிகள் அல்ல. கலிங்கக் கூழட்ட சயங்கொண்டான் வேறு;* 'கூடிப் பனங்கட்டிக் கூழ்குடி'த்த சயங்கொண்டான் வேறு. *இருவர் சயங்கொண்டார்.*

*அநுராசபுரக் காடுவருகிறது. பெண்கள் கவனம்!*

வண்ணானின் மொழிகேட்டு
வனம் விடுத்த சீதைதனை

இந்நாளுந் தேடுதல்போல்
இருங்குரங்கு நெருங்கிடுமே.

மான்குளத்திலே ஒரு சிறு புதினம்! இல்லை! இல்லை!

காமர்நெடுங் காட்டினிலே
காணுமொரு மாபுதினம்
மாமரைகள் ஒலிகேட்டுத்
*தாமரைகள் ஆயினவே.

நிறுத்துங்கள் பஸ்வண்டியை.

முன்னவன்செங் கைத்தனுவிற்
பாரதத்தைப் பொறித்த
முறிகண்டி வாரணத்தின்
முளரியடி பணிவாம்.

பொழுதுபடுவதற்குமுன் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்துவிடுவோம். அப்பாலே உங்களைச் சந்திக்க முடியாது. இடையிலே சொல்லிவைக்கிறேன்:— நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உங்கள் கிராமங்களில உள்ள பள்ளிக்கூடங்களுக்குப் போய்,

இலங்கைவளம் கோளாத
செவியென்ன செவியே
இரும்பாலே செம்பாலே
செய்திட்ட செவியே

என்று தாளம் பிசகாமற் பாடவேண்டும்; மறந்து போகக்கூடாது.

பனை தெரிகிறது.

கோணிலைகள் மாறிமழை வாரிவறந் தாலும்
கொடியமிடி வந்துமிக வேவருத்தி னாலும்
தாணிழ லளித்துயர் கலாநிலைய மேபோல்
தந்துபல வேறுபொருள் தாங்குபனை யோங்கும்

*தா = மரை தாவுகின்றமரை

*யாழ்ப்பாணம் வந்துவிட்டது.*

**எண்சா ணுடம்புக்குச் சென்னி சிறந்திடும்**
**என்றே யுரைப்ப ரதுபோலப்**
**பொன்சே ரிலங்கைச் சிரமென வேவரும்**
**புண்ணிய மோங்கிடும் யாழ்ப்பாணம்.**

*வாருங்கள், நல்லைக் கந்தசுவாமி கோவிலுக்குப் போவோம்.*

**முன்னம் புவனேக வாகு மணிநல்லை**
**முன்னி வகுத்திடும் வேற்கோட்டம்**
**மன்னு முயிர்கட் கிருவகை நோய்கட்கும்**
**மருந்து கொடுக்கும் அருட்கோட்டம்.**

*எங்கள் பிரயாணத்தில் ஒரு பெருந்தவறு செய்துவிட்டோம். இலங்கைமாதேவிக்கு இரு விழிகள் திருக்கேதீச்சரமும், திருக்கோணமலையும். அந்த இரு பரிசுத்த தலங்களையும் தரிசித்தன்றி வீடு சேர்வதில்லை!*

**மூன்று வயசிலே மந்திரவாசகம்**
**முன்னம் மொழிந்தவன் சொன்னபதி**
**தோன்றுமுக் கோண மலையுட னேகேது**
**சூழ்ந்து வலஞ்செய்கே தீச்சரமே.**

*திருக்கோணமலையை வலஞ்செய்ய முடியாது. கடல் திரை மோதுகின்ற ஆழத்தில் உள்ள கற்பாறை மீது தேங்காயை வீசுங்கள்.*

*பிரயாணத்திலுல் உங்கள் உடம்பு அலுத்துப் போய்விட்டது. இலங்காதேவி — எங்கள் இயற்கை அன்னை — ஏழு கிணறுகளில் வெந்நீர் வைத்துக் கொண்டிருக்கின்றுள். ஏழு கிணறுகளிலும் முழுகுங்கள்; முழுகிக் களியுங்கள்; அலுப்புத் தீருங்கள்.*

காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று
கவிபாடிப் பரிசுபெறுன் மனம்போல ஒன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம்போல ஒன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம்போல ஒன்று
நீதிபெறு வேழைதுயர் மனம்போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம்போல ஒன்று
காதுமழுக் காறுடையான் மனம்போல ஒன்று
கனலேறு மெழுநீர்கள் உண்டுகன்னி யாயில்.

*வெந்நீர் முழுக்கு ஆயிற்று. உடல் பூரிக்கின்றது. இனி,*

*நமது உள்ளமும் உணர்ச்சியும் தெவிட்டாது தித்திக்க.*

ஆடிப் பிறப்பொடு கத்தரித் தோட்டமும்
ஆக்கி அளித்த புலவர்பிரான்
தேடக் கிடையாத தென்னிலங்கை வளன்
தேன்சொரி யுந்தமிழ் மாந்துதுமே.

# 6. கவி கவியாகிறான்.

கம்பருடைய மகன் அம்பிகாபதி. கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடுமல்லவா? அம்பிகாபதியின் புலமையைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அம்பிகாபதியும் சோழ மகா ராஜாவின் புத்திரியும் பரஸ்பரங் காதலுடையவர்களாயிருந்தார்கள். அதனை அரசன் ஒருவாறு அறிந்துவிட்டான், மந்திராலோசனைகூடச் செய்யவில்லை. அம்பிகாபதியைச் சிரச்சேதஞ் செய்யும்படி தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதனைக் கம்பர் அறிந்தார். அவருக்கு மனம் சகிக்கவில்லை அரசனை எவ்வளவுக்குப் பணிந்து கேட்கக்கூடுமோ, அவ்வளவுக்கெல்லாம பணிந்து கேட்டார். மன்னிப்புக் கிடைக்கவில்லை, கவித்துவ சக்தியத்தனையும் பிரயோகிககப்பட்டது. கம்பர் தாம் கவிச்சக்கரவர்த்தி என்பதையும் மறந்துபோனார். புத்திர சோகம் யாரைத்தான் விட்டது!

அரசனுக்குக் கம்பருடைய முகத்தைப் பார்க்கவே முடியவில்லை அவனுடைய மனம் ஒரு சிறிது நெகிழ்ந்தது. ஆயினும் சிந்திக்கத்தொடங்கினான். ஒருவாறு மனம் ஒரு முடிவுக்கு வந்தது. அம்பிகாபதி பெண்பால் கலவாமல் நூறு பாட்டுப் பாடக்கூடுமானால் அவனுடைய மரண தண்டனையை விலக்கிவிடுவதேயல்லாமல், தன்னுடைய புத்திரியைக் கல்யாணஞ்செய்தும் வைப்பதாகப் பெருமூச்சோடு சொன்னான்.

கம்பர் கவிச்சக்கரவர்த்தியாய்விட்டார். அவருடைய ஆனந்தக் கூத்துக்கு அளவில்லை, அம்பிகா

பதிக்கு அதற்குமேலே. இந்தச் சம்பவங்களையெல்லாம் திரை மறைவிலே கேட்டுக்கொண்டிருந்த அரசிளங் குமரிக்கு ஆனந்தம் அணைகடந்துவிட்டது.

அம்பிகாபதி பாடுகிருன். அவளுடைய காதல் திரையைப் பீறிப் பாய்கிறது. அவள் விரல்மடித் தெண்ணுகிருள். அவன் மிகு வேகமாகப் பாடுகிருன். அவள் அதிலும் வேகமாக எண்ணுகிருள். அந்தோ விதியே! ஒரு எண் தவறிவிட்டது. காதலுக்குக் கண்மாத்திரமா, கணக்குமில்லை. அவள் அவனை முந்திவிட்டாள். அவன் தொண்ணூற்ருென்பது பாட்டுப் பாடி முடித்தான். அவள் நூறு என்று எண்ணி முடித்தாள். அவளுக்கு அப்பால் எண்ணுகிற வேலை இல்லை. அவளைக் காதல் விழுங்கி விட்டது அவள் தன்னை அறியாமலே எழுந்து சற்றே தலையைநிமிர்த்தி அவனை எட்டிப்பார்த்தாள்.

அவளுடைய முகம், கவிதாலோகத்தை ஊடுருவிச் செல்லுகின்ற அவனுடைய கெம்பீரமான பார்வைக் கெதிர்ப்பட்டது. நடந்த பழைய சம்பவங்களை எப்படி ஞாபகஞ்செய்ய முடியும்! அவனுடைய நிலை தன்னை மறந்த நிலை யோகநிலை கவிதாயோகம். அவளுடைய முகச் சாயல், அவனுடைய இருதயமாகிய தூய பளிங்கில் அப்படியே படிந்தது. அது அவன், வாயினின்றும் 'சற்றே' என்று தொடங்கி, 'தலையலங்காரம் புறப்பட்டதே' என்று முடிந்த ஒரு பாட்டாகப் பிரதி விம்பித்தது. இது தான் நூரும் பாட்டு.

கத்திமுனையிலும், கம்பருடைய மகன் கம்பருடைய மகனுகவேயிருந்தான்.

* * *

ஒருநாள் நல்ல மத்தியானம் கும்பகோணத்திலே ஒரு சத்திரத்திலே காளமேகப் புலவர் சாப்

பிட்டுக்கொண்டிருந்தார். அவருக்கெதிரில், ஒரு முன் குடுமி வைத்த பிராமணன்—சோழ தேசத்தவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கவில்லை—சோற்ருேடு யுத்தஞ்செய்து கொண்டிருந்தான். பரிசாரகர்கள் சோறுபடைத்த படியே நின்ருர்கள். அவன் சாப்பிட்டபடியே இருந்தான். அந்த மகாயுத்தத்தில் அவனுடைய முன் குடுமி அவிழ்ந்து, சோற்றில் வீழ்ந்து மூடிக்கொண் டது. அவன் இடது கையால் குலைந்த குடுமியை உதறினபடியே யுத்தத்தையும் நடாத்தினன். எதி ரில் சாப்பிட்டுக்கொண்டிருந்த காளமேகப் புலவ ரின் சாப்பாட்டில் எச்சிற் சோறு தாராளமாகத் தெறித்தது.

காளமேகம் இருண்டது. புலவர் உருத்திரமூர்த் தியின் அவதாரம் எடுத்தார்.

**"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்**
**பொருக்குவர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்**
**கோட்டானே நாயே குரங்கே யுனையொருத்தி**
**போட்டாளே வேலையற்றுப் போய்"**

என்ற பாசுரம் பாய்ந்தது.

கடும்பசி வேளையில், கடுங்கோபநேரத்திலுங் காளமேகம் காளமேகமாகவேயிருந்தது.

* * *

"கம்பர் கதைசொல்லுதல் முதலிய விஷயத் திற் குற்றமில்லை. பாதாதிகேச வர்ணனை, நாட்டு வர்ணனை, கோபுரவர்ணனை, மதில்வர்ணனை, இவை களல்லவா காவியங்களைச் சிறப்பிப்பன. இந்த விஷயங்களில் எங்களுக்குங் கம்பருக்கும் என்ன வித்தியாசம்?" என்று சோழ மகாராஜாவின் ஆஸ் தானப் புலவர்கள் கம்பரில்லாத ஒரு சமயத்திற் பேசிக்கொண்டார்கள். இதனையறிந்த சோழ மகா

ராஜா புலவர்களனைவரையும் தத்தங் காவியங்களு டன் சபைக்கு வருமாறு ஒருநாள் கட்டளையிட்டார். அக்கட்டளைப்படி புலவர்களெல்லாரும் தாந்தாம் பாடிய காவியங்களுடன் வந்து சேர்ந்தார்கள். கம் பரும் வந்து சேர்ந்தார்.

சோழமகாராஜா புலவர்களை விளித்து, உங் கள் காவியங்களில் சிறந்த பகுதிகளை—காவியங்க ளைக் காவியங்களாக வைத்திருப்பனவற்றை—இவை யென்று வரையறுத்துச் சொல்லவேண்டுமென்று ஒரு கேள்வி கேட்டார். புலவர்களுக்குத் தலை கால் தெரியவில்லை. அளவில்லாத சந்தோஷம். விடை முன்னமே ஆயத்தமான வினை வருமானால் எவர் கள் எந்தப் பரீட்சைதான் எடுக்கமாட்டார்கள். இறுதியிலிருந்த—ஒரு காலத்தும் எழுந்து பேசியறி யாத ஒரு புலவர் திடீரென்றெழுந்து 'பாதாதிகேச வர்ணனை, அகழிவர்ணனை...........' என்று ஒரு பெரிய அட்டவணையை மூச்சுவிடாமற் படித்தார். சோழ மகாராஜா கையையமைத்து அவரை இருத்தி விட்டுப் "புலவரவர்கள் கூறிய வர்ணனைகளுள் முதலி லுள்ள பாதாதிகேச வர்ணனையை எடுத்துக்கொள் ளுவோம்; அதில் உங்களுக்குக் கைவந்த அவயவங் களைப்பற்றிய வர்ணனைகளை, உங்கள் காவியங்களில் எடுத்துக்காட்டி வியாக்கியானஞ் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார்.

சோழமகாராஜா வாய்மூடமுன் ஒட்டக்கூத்தர் எழுந்தார். அவர் தமது காவியத்தில் பெண்களின் அவயவம் ஒன்றுக்கு முந்நூறு உபமானங்காட்டி வருணித்த வர்ணனையொன்றைப் படித்துக்காட்டி வியாக்கியானஞ் செய்தார். அப்பால் மற்றொரு புல வர் பல்லுக்குப் பதினறு உபமானங் காட்டினர்.

வேறொருவர் மூக்குக்கு மூப்பத்திரண்டு உபமானஞ் சொன்னார். இப்படியே புலவர்களெல்லாரும் மனனப் பிரசங்கஞ்செய்து முடித்த பிள்ளைகள்போலத், தத்தம் வர்ணனைகளைப் படித்து வியாக்கியானஞ் செய்து முடித்துவிட்டு அப்பால ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தார்கள்.

இந்தச் சமாச்சாரத்தைப்பற்றி ஔவையாருக்கும் புகழேந்திக்கும் ஒன்றுமே தெரியாது. அவர்கள் மிகவும் பிந்தித்தான் வந்தார்கள். அப்பொழுது தான் கம்பர் எழுந்தார். அதற்கிடையில் “ஒரு வார்த்தை” என்று சொல்லிக்கொண்டு ஒட்டக்கூத்தர் குறுக்கிட்டார். சபையிலே ஒரு பெரிய அமைதி உண்டானது.

“பெண்களின் அவயவ வர்ணனைகளைப்பற்றிக் கேட்டுக் கேட்டுச் சபையிலுள்ளவர்கள் அலுத்துப் போனார்கள். பழகப்பழகப் பாலும் புளிக்கும் என் பார்கள். கம்பர் கவிச்சக்கரவர்த்தியா யிருக்கின்றாரே, அவர் ஆண்பாலாரின் அவயவத்தை வர்ணித்திருந்தால் அதைப்படித்து வியாக்கியானஞ் செய்வதே நன்று. பெண்பாலாரின் அவயவ வர்ணனை—அவர்களுள்ளுஞ் சீதாபிராட்டியின் அவயவ வர்ணனை வேண்டவே வேண்டாம். அதுதான் எல்லாருமறிந்தது. ஆண்பாலாருள்ளும் ஸ்ரீராமனுடைய முகம், கை, கால், தோள் இவற்றைப்பற்றிய வர்ணனையானல் வேண்டாம், வேண்டாம். அவற்றைப் பற்றிய வர்ணனைகளை ஆழ்வார்களின் பாசுரங்களிற் கேட்டுக்கேட்டுக் காதடைத்துவிட்டது. ஸ்ரீராமனுடைய மார்பு, முழந்தாட்பொருத்து, மூகக்குத் துவாரம், இரைக்குழல், சிறுகுடல் இவற்றைப்பற்றிய வர்ணனையானலாகட்டும். இனி வருங்காலத்

துக் கேற்றது. சுகாதார சம்பந்தமானது'' என்று தமது சிற்றுரையை ஒருவாறுமுடித்தார். சபையிற் பெருங் கூச்சல். ஆம்! ஆம்!! என்று கையுயர்த்தி அநுவதித்தார்கள் புலவர்கள். சோழ மகாராஜா மௌனஞ் சாதித்தார்.

புலவர்களினுபவாரம் அடங்கின பின்பு கம்பர் புன்சிரிப்போடு சபையிலுள்ளவர்களை நோக்கி "ஒட்டக்கூத்தர் அவர்கள் கூறியது முற்றிலுஞ் சரியே. அவர்கள் எடுத்துக்காட்டிய விஷயங்களுள், முதலிலுள்ள ஸ்ரீ ராமனுடைய மார்பைப்பற்றிய வர்ணனையைப் படித்து வியாக்கியானஞ் செய்கின்றேன்'' என்று சொல்லி இராமாயணத்திலே உருக்காட்டு படலத்தில் சீதாபிராட்டிக்கு அநுமான் கூறியதாயுள்ள ஸ்ரீ ராமனுடைய மார்பைப்பற்றிய வர்ணனைப்பாட்டைப் படிக்க வாரம்பித்தார்.

**"பொருவரு மரகதப் பொலங்கொண் மால்வரை**
**வெருவுற விரிந்துயர் விலங்கலாகத்தைப்**
**பிரிவற நோற்றன ளென்னிற் பின்னையத்''**

என்ற மூன்றடியையும் படித்துவிட்டார். நான்காமடி தொடங்குமுன், சபையிலே பெரிய கூக்குரல், உண்டாய்விட்டது. கம்பர் ஒருவித சலனமுமின்றி நிறைகுடம்போல அமைதியாக நின்றார்.

"இதுதானே பழைய பல்லவி'' என்றார் ஒரு புலவர்.

'திருவுறை மார்பினைச் செப்பவேண்டுமோ' என்று நான்காமடியையும் முடித்துவிடுகிறதுதானே என்றார் மற்றொரு புலவர்.

பாவமோர் கோடி புரியினு மொன்றும்
பரிவினிற் றருமமொன் றியற்றி
னேவரும் வியப்பக் கோடியாய் மல்கு
மின்னதோர் பெற்றியை நாடித்
தேவர்கண் முனிவர் தம்பதம் வெறுத்துச்
சிவனருச் சனைபுரிந் தங்கண்
மேவினர் தவஞ்செய் திருத்தலாற் காஞ்சி
வியனகர்ப் பெருமையார் விரிப்பார்

என்ற பாட்டைப் படித்து—இறுதியடியின் இறுதிப் பாகத்தை இரண்டாம் முறையும் படித்து, இப்படித்தானே கந்தபுராணத்திற் கச்சியப்பரும் பாடியிருக்கிறார் என்றார் வேறொரு ஆராய்ச்சிப் புலவர். என்ன புதுக்காரியஞ் செய்துவிட்டார்— நாலு பத்து உபமானம் சொல்லியிருக்கிறாரா என்றார் உவமைப் புலவர். ஆடாமல் அசையாமல் நல்லபிள்ளையாக்கிருந்தார் ஒட்டக்கூத்தப்புலவர்.

கம்பர், புலவர்களாரவாரஞ் செய்தபடியாலோ, வேறெக் காரணத்தினலோ நான்காமடியையே படித்துக்காட்டாமல முதன் மூன்றடிக்கும் வியாக்கியானந் தொடங்கினர். உரையாசிரியர் ஒருவரும் ஏதோ ஒருவிதமாக அந்தச் சபையில் நுழைந்துவிட்டார். அவர் "வேண்டாம்! உரை வேண்டாம். வெளிப்படை! 'ஒப்பில்லாத அழகிய பெரிய மரகத மலை யஞ்சும்படி யகன் றுயர்ந்ததும், மலைபோல அசைவில்லாததுமான ஸ்ரீராமனுடையமார்பைப்பிரியாமல் எப்பொழுதும் வாழும்படி (இலக்குமி) தவஞ் செய்தாளேயானல்" என்பதுதானே உரை; 'பின்னையத்' என்பதை அடுத்த அடியோடு சேர்த்துக் கொள்ளுவோம்'' என்றார். சபையிலுள்ளவர்களும்

ஆம்! ஆம்! உரை வெளிப்படை; புதுமையொன்றுமில்லை. அடுத்த அடி வரட்டும்' என்றார்கள்.

கம்பர் சிறிதுநேரம் மௌனமாக அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவர்கள் தங்கள் கண்களாகிய பாணங்களை அவருடைய வாய்க்குட் செலுத்தினார்கள். அவர் மிக ஆறுதலாக, '**திருவினிற் றிருவுளார் யாவர் தெய்வமே**' என்ற நான்காம் அடியை வெளியிட்டார்.

சோழமகாராஜா சிங்காசனத்தினின்றும் குதித்துக் கம்பரைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். ஔவைக் கிழவி இருந்தவிருக்கையிற் குடுகுடுத்தாள். புகழேந்திப்புலவர் அடுத்த அடிக்குத் தாம் வியாக்கியானஞ் செய்வதாக எழுந்து நின்றார். ஒட்டக்கூத்தர் தலையைத் தூங்கப் போட்டுவிட்டார். மற்றைப் புலவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். அங்கேயிருந்த உரையாசிரியர் கண்டறியாததைக்கண்டு களிக்கூத்தாடினார். சோழ மகாராஜாவின் வேண்டுகோளின்படி கம்பர் சிங்காசனத்தில் எழுந்தருளினார். எல்லாருங் கம்பரையும் புகழேந்தியையும் மாறிமாறிப் பார்த்தார்கள்.

"ஸ்ரீராமனுடைய மார்பைப் பிரியாமல் இருக்குமாறு இலக்குமி தவஞ்செய்தாளேயானால் என்ற பொருளைச் சாதாரண கவிகள் எடுத்துக்கொண்டால், இச்சபையிலுள்ள ஒரு புலவர் 'திருவுறை மார்பினைச் செப்பவேண்டுமோ' என்று நான்காமடியை முடித்துக் காட்டியவாறுபோல, 'ஸ்ரீராமனுடைய மார்பின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ' என்றுதான் பின்னடியிற் பொருளை முடிப்பார்கள். கம்பர் சாதாரண கவிகளின் வருக்கத்தைச் சேரா

தவர். இப்படியான சந்தர்ப்பங்களிலேதான், கம்பரையும் சாதாரண கவிகளையும் பிரித்தறிகின்றோம்.

கம்பர் முதலில் எடுத்துக்கொண்ட பொருளை நோக்கினால், சாதாரண கவிகள் செல்லுகிற வழியிற் செல்லுவதாகவே தோன்றுகின்றது. ஆனல், இங்கே காட்டிய 'பொருவரும்' என்ற செய்யுளின் நான்காமடியின் பொருளை நோக்கினல், அவர் தம்மைப் பின்றொடர்ந்து வந்த கவிகளையெல்லாம் ஏமாற்றிவிட்டு, முன் ஒருகாலும் ஒருவரும் போயறியாத புதுவழியிற்றிரும்பி, 'தாம் புலவர்' என்ற பிறவிக்குணத்தைக் காட்டிச் செல்வது நன்கு தெரிகின்றது.

சாதாரண கவிகள் எல்லாம் 'மார்பின் பெருமையைத்தான் நான்காமடியிற் சொலலுவார் சொல்லுவார்' என்று தொடர்ந்தார்கள். கம்பருக்கோ சொந்தமான குணம் உண்டாய் விட்டது. 'மகாலக்குமி ஸ்ரீராமனுடைய மார்பைப் பிரியாமலிருக்குமாறு தவஞ்செய்தால்' மகாலக்குமிக்குப் பெருமையா? ஸ்ரீராமனுடைய மார்புக்குப் பெருமையா? என்ற வினைகள் கம்பருடைய இருதயத்தில் எழுந்து போராடின.

ஸ்ரீராமனுடைய மார்புக்குப் பெருமையென்று சொல்லுவதுதான் பழைமை வழி.

'மகாலக்குமிக்குப் பெருமை' என்று சொல்வது கவிச்சக்கரவர்த்திகள் செல்லும் மார்க்கம்; கம்பர் கண்ட நெறி.

மகாலக்ஷ்மி ஸ்ரீராமனுடைய 'ஆகத்தைப் பிரிவற நோற்றனள்' என்னில் 'அவள் மகா பாக்கிய சாலிதான் அவளிலும்பார்க்கப் பாக்கியசாலிகள் இருக்கமுடியாது' என்ற பொருள் 'அத்திருவினில் திருவுளார் யாவர்' என்பதனாற் கூறப்பட்டது. மகாலக்ஷ்மிக்கு இதைவிட மகா பாக்கியம் முன் வந்ததுமில்லை, இனி வரப்போவதுமில்லையாதலின் 'பின்னை' என்ற அடை கொடுக்கப்பட்டது. 'தெய்வமே' என்பது விளிப்பெயர்; அநுமான் சீதாபிராட்டியை விளித்தது.

தம் புலமையைக் காட்டுதற்கேலாத—பழம் புலவர்களெல்லாம் எடுத்தாண்ட—பலரும் பலகாலும் பயின்ற—பழைய விஷயத்திலுங்கூடக் கம்பர் கம்பராகவேயிருந்தார்.

எந்த இடத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் கவிகள் கவிகளாகவே யிருக்கின்றார்கள்!

# 7. ஈழநாட்டுப் புலவர்.

ஈழநாட்டுப் புலவர்களைப்பற்றிக் கேட்டால், அரசகேசரியிலிருந்து தொடங்குவதுதான் வழககம். நான் அந்த வழக்கத்தைக் கையாள விரும்ப வில்லை. அரசகேசரி யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து அரசு செய்த பரராசசேகர மகாராசாவின் மருகர்; வடமொழியில் காளிதாச மகாகவி இயற்றிய இரகுவம்சத்தைத் தமிழிற் பெயர்த்துப் பாடியிருக்கின்றார். பாடல்கள் வெகு கடினமானவை. பண்டிதர்களையே மலையச் செய்பவை. அரசகேசரி ஒரு பெரிய மகா வித்துவான். கோப்பாயிலிருந்தவர் சபாபதி நாவலர். அவரியற்றிய திராவிடப் பிரகாசிகை, வசன உருவமேயாயினும இரகுவம்சம்போன்று மிகக் கடினமானது. சபாபதி நாவலரும் அரச கேசரிபோலவே ஒரு பெரிய மகா வித்துவான். இந்தப் பெரிய மகா வித்துவான்களைப் புலவர் வரிசையில் எடுத்துச் சொல்ல நான் விரும்ப வில்லை. கவித்துவ சாமர்த்தியம் வாய்ந்தவர்களாய் இனித்த கவிகள் செய்தவர்களையே புலவர் வரிசையில் வைத்துக்கொள்ள விரும்புகிறேன். வித்துவான்களைப்பற்றிச் சொல்லுதற்கு வேறொரு வித்துவ வரிசையை வைத்துக்கொள்ளலாம்.

நீர்வேலியில் வாழ்ந்தவர் சங்கர பண்டிதர். அவருக்கு முன்னமே திருநெல்வேலியில உள்ளவர் ஞானப்பிரகாச முனிவர். இவர்கள் தமிழிலேயன்றிச் சம்ஸ்கிருதத்திலே மகா மேதைகள். தருக்க கோடரிகள்; இவர்களையும் இவர்கள் வழியைப் பின்பற்றியவர்களையும் சொல்லுதற்குப் பண்டிதர்கள் என்று மற்றொரு வரிசையை எடுத்துக்கொள்ளலாம்.

வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை நாவலரின் மருகர். இலக்கிய இரசனைக்கு ஈடும் எடுப்பும் இல்லாதவர். அவர் இலக்கிய இரசத்தைச் சொட்டிக் கொண்டிருந்தார் என்று சொல்லுதல் தகாது; தாரை தாரையாகப் பொழிந்துகொண்டிருந்தார் என்றே சொல்லவேண்டும். உரைநயம் சொல்லுகின்ற உரையாசிரியர்கள் வகுப்பிலேதான் அவரையும் அவர் வழிவந்தவர்களையும் வைத்துச் சொல்லலாம். சமீபத்தில் வாழ்ந்துபோன மகாலிங்கசிவம் கற்பனைசக்திக்கு ஊற்றான ஒரு இனித்த உபாத்தியாயர். அவரைப்பற்றிச் சொல்லுதற்கு அவருக்கு என்று ஒரு தனித்த இடம் வேண்டும். சுவாமி விபுலாநந்தர் கவித்துவம்வாய்ந்த இனிய புலவரேயாயினும், அவருடைய விசேஷ ஆற்றல்கள்பற்றி அவருக்கு வேறு இடங்கொடுக்கவேண்டும். தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையரின் கூரிய விவேகம், புலோலிக் கதிரைவேற்பிள்ளையின் மகா திறமை தனித்தனிப் பெருமைக்கு உரியவை. இன்னும் எத்தனையோ மதி நுட்பம்வாய்ந்தவர்கள் தமிழ்ப்பணி செய்தவர்கள் இருக்கின்றார்கள். ஆறுமுக நாவலரின் தனிப்பெருமை பிரசித்தமானது.

இங்கே பெயர் குறித்துச் சொன்னவர்களும், குறிப்பிடாமல் உணர வைத்தவர்களும் ஆகிய எல்லாரும் ஈழமண்டலத்தின் அறிவுக் கண்கள்; தவப் புதல்வர்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் தமிழ் மாணவ மாணவிகள் தெரிந்திருக்கவேண்டும். புலவர்கள் என்றால் அறிஞர்கள் என்று கருத்துச் சொல்லலாம். அக்கருத்தில் இவர்கள் எல்லாம் புலவர்களே. ஆனால், புலவர் என்ற சொல்லை அக்கருத்தில் உபயோகிக்கவில்லையென்று முன்னமே

குறிப்பிட்டிருக்கிறேன். பாட்டுப் பாடுகிறவர்களைப் புலவர் என்று வழங்குவதை வழக்கிலே காணலாம். சினிமாப் பாடல்கள்போன்ற நன்மை தீமை விசாரியாத வசீகரமான பாடல்கள் பண்ணுகிறவர்களையும் சாதாரணமான உலகம் புலவர்கள் என்கின்றது. அக்கருத்திலும் அச்சொல்லை நான் உபயோகிக்க விரும்பவில்லை. நல்லறிஞர்களாய் நன்மைக்குப் பாதகம் இல்லாத இனிய கவிகள் புனைந்தவர்களையே புலவர்கள் என்று இங்கே எடுத்துக்காட்ட முயலுகின்றேன். தமிழ் அறிஞர்களின் பெயர்களை நாம மறந்துவிடக்கூடாது. இப்பெயர்களை மனத்தில் இருத்திக்கொண்டால், பிறகு வளர, வளரப் பெரிய பயன் உண்டாகும். இவ்வளவில் நிறுத்தி இனிப் புலவர்களிடம் செல்லுவோம்.

ஈழமண்டலத்திலே நல்ல பேரறிஞராய்க் கவித்துவ சாமார்த்தியத்தில் தலைசிறந்தவர் சின்னத்தம்பிப் புலவர். இவர் காலத்தினுலும் முற்பட்டவர். இவருக்கு அடுத்தபடியில் வைத்து எண்ணுதற்குரிய புலவர் முத்துக்குமார கவிராஜசேகரர். இவர் தமிழைப் பாதுகாத்த சி. வை. தாமோதரம்பிள்ளையின் உபாத்தியாயர்; தமிழ் வளர்த்த சுன்னுகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப் புலவரின் பாட்டனுர். முத்துக்குமார கவிராஜசேகரருக்கு அடுத்தபடியில் சொல்லக்கூடியவர் இருபாலைச் சேனுதிராய முதலியார். இவர் ஆறுமுக நாவலரின் உபாத்தியாயர். அடுத்து உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் வரத்தக்கவர். இந்த வரிசை இன்னும் வளரலாம். கத்தரித்தோட்டத்து வெருளியும், ஆடிப்பிறப்புக் கொழுக்கட்டையும் இன்றைக்குங் குழந்தைகள் வாயில் தவழுகின்றன; இனிக்கின்றன. 'அதிரவரு மாணிக்க கங்

கை'யையும், 'வண்ணானின் மொழிகேட்டு வனம் விடுத்த சீதையை, இந்நாளுந் தேடுகின்ற குரங்கு' களையும் வடதேசத்து முதிர்ந்த அறிஞர்களும் புகழ் கின்றார்கள். இவைகளைப் பாடிய நவாலியூர் திரு சோமசுந்தரப் புலவர் சில நாட்களுக்கு முன்பும் நமது மத்தியில் பாடிக்கொண்டிருந்தார்கள். புலவர் பரம்பரையை இவ்வளவில் நிறுத்தி, இன்னும் இந்தப் பரமபரை முளைகொள்ளவேண்டுமென்று ஒரு வாழ்த்துச் சொல்லிவிட்டு, முதலில் வைத்துப் பேசிய சின்னத்தம்பிப் புலவரிடம் போவோம்.

சின்னத்தம்பிப் புலவரின் தந்தையார் ஒரு வித்துவான். பெயர் வில்லவராய முதலியார். பர ராச சேகரனின் வம்சத்தில் உள்ளவர். ஒல்லாந் தர் காலத்திலிருந்தவர். ஒல்லாந்த அரசாங்கத்தில் உத்தியோகமும் வகித்தவர். இக்காரணங்களினாலே வில்லவராய முதலியார் பெருஞ் செல்வாக்குடன் வாழ்ந்துவந்தார்.முதலியாரின் செல்வாக்குக்குத்தக்க வாறு புதல்வராகிய சின்னத்தம்பியார் இளமையில் நடந்துகொள்ளவில்லை. படிப்பிலே கவனஞ்செலுத் தாமல, முழுக்கவனத்தையும் விளையாட்டிலே செலவு செய்தார். இது முதலியாருக்குப் பெரிய மனவருத் தம். உத்தியோக முயற்சியினால் புதல்வர்மேல் கவ னம் எடுக்க முடியவில்லை. புதல்வனார் முதலியார் கண்ணிற்படாமல் விளையாட்டிற் காலங்கழித்து வந் தார். தாயாரின் இணக்கமும் இவருக்கு உண்டு. வயசு ஏழு. ஆயிற்று.

ஒருநாள் வடதேசத்து வித்துவானொருவர், வில் லவராய முதலியார் வீட்டை விசாரித்துக்கொண்டு வந்தார். தெருவிலே சிறுவர்கள் விளையாடிக்

கொண்டு நின்றார்கள். இலக்கணத் தமிழிலே 'முதலியார் வீடு யாதோ' என்று வடதேச வித்துவான் சிறுவர்களை வினவினர். ஒரு சிறுவன் தலைநிமிர்ந்து விளையாட்டாக

**'பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்**
**நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை**
**வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக**
**வாசலிடைக் கொன்றை மரம்'**

என்று ஒரு பாட்டால விடை சொன்னன். வில்லவராய முதலியாருடைய வீட்டு வாசலிலே ஒரு கொன்றை மரம், அவ்வாசலைத் தங்கமயமாக்கிக் கொண்டு, நல்ல நிழலைச்செய்து நிற்கின்றது;—இது பாட்டின் கருத்து.

வந்த வித்துவான் திகைத்துப்போனர். பாடலைப் பாடஞ் செய்துகொண்டே, முதலியாரிடம் போய் இந்த வியப்பைச் சொன்னர். முதலியாரின் மனைவியார் அப்பாடல் பாடியது தம் மகனைத் தானிருக்கவேண்டுமென்று கூறி, 'ஈன்றபொழுதிற் பெரிது உவந்தார்'. முதலியாரோ "போ! போ! உன் மகனவது வெண்பாப் பாடுகிறதாவது! யாரோ பாடிவைத்த பழம் பாடலை வேறுயாரோ சிறுவன் படித்துக்காட்டியிருக்கலாம்" என்று மழுப்பிவிட்டார். மகனுடைய படிப்பில் கவனம வைப்பதில்லை என்று மனைவியார் மீது முதலியாருக்குச் சிறு கோபமும் உண்டு. என்றாலும், 'குலவித்தை கல்லாமலும் வரலாமே' என்று ஒரு கருத்தும் உள்ளுக்குள்ளே முதலியாருக்கு இருந்தது; வெளிக்காட்டவில்லை. சில வருஷங்கள் கழிந்தன.

ஒருநாள் முதலியார் கல்வளை என்ற தலத்தில் எழுந்தருளிய விநாயகப் பெருமான்மீது ஒரு

யமக அந்தாதி பாட எண்ணி, முதலில் காப்புச் செய்யுள் பாடத்தொடங்கினர். காப்புச் செய்யுளில் முதல் இரண்டு வரி எழுதிவிட்டார். அப்பால் ஓட வில்லை. பாட்டைப் பூர்த்திசெய்யாமலே ஏட்டையும் எழுத்தாணியையும் இறப்பிற் சொருகிவிட்டு, முதலியார் வெளியிலே உலாவப் போய்விட்டார்.

சமயம்பார்த்துச் சாப்பிட வருகின்ற சின்னத் தம்பியார் தாயாரிடம் வந்து சாப்பிடுவிட்டுச், சற்றே புகையிலை வாய்க்குள் இட்டுக்கொள்ளும் பொருட்டுத், தந்தையார் புகையிலை சொருகுகிற இறப்பைப் பரிசோதனை செய்துகொண்டு வந்தார். புகையிலைக்குமுன் ஏடும், எழுத்தாணியும் எதிர்ப் பட்டன. ஏட்டை எடுத்துப் பார்த்தார். பாட் டொன்று பூர்த்தியாகாமல் இரண்டு வரி மாத்திரம் எழுதப்பட்டிருந்தது. உடனே மற்ற இரண்டு வரி யையும் பாடிப் பூர்த்திசெய்து, பழையபடி சொருகி விட்டுச் சின்னத்தம்பியார் போய்விட்டார். சம்ப வம் யாருக்குந் தெரியாது. உலாவப்போன முதலி யார் மற்ற இரண்டு வரிகளையும் ஆயத்தம்செய்து கொண்டு, சற்றே வேகமாக வந்தார். ஏட்டை எடுத் தார். பாட்டுப் பூர்த்தியாயிருந்தது. தாம் நினைத்துக் கொண்டுவந்த வரிகளிலும், பூர்த்தியாயிருந்த வரி கள் மிக நன்றாயிருந்தன. அது தமது அருமை மக னுடைய வேலையாய்த்தானிருக்கலாம் என்று முத லியாருக்குப் பெரு மகிழ்ச்சி. என்றாலும். அதனை நிச்சயம்செய்யும்பொருட்டு, 'சின்னத்தம்பி இந்தப் பக்கம் வந்தானோ' என்று தாழ்ந்த அன்புக் குர லில் மனைவியாரைக் கேட்டார். மனைவியார் வழக்க மான சந்தேகத்தினால், புகையிலை எடுத்ததற்கு மக

னைத் தண்டித்தற்குப் போலும் என்றெண்ணிக் 'கண்டதார் கேட்டதார்' என்று மறுத்துவிட்டார். முதலியாருக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. நடந்ததைச் சொல்லி, ஏட்டையுங்காட்டி, "அவன் இந்தப்பக்கம் வந்திருக்கவேண்டும்; ஒளிக் காமற் சொல்" என்று மன்றாடினார். காரியத்தை அறிந்ததும், 'ஓம், ஓம்' என்று மனைவியார் கூத்தா டினார். முதலியார் கண்ணீர்விட்டு அழுதுவிட்டார். ஆனந்த அழுகை. இருவருந் தெருவிற் புறப்பட் டார்கள். சின்னத்தம்பி வழக்கம்போல் ஓடி மறைய வில்லை. 'புலவர் சிகாமணியே, வாடா கண்ணே!' என்று இருவருங் கட்டித்தழுவி முத்தமிட்டார்கள். முதலியார் ஏட்டையும் எழுத்தாணியையும் சின்னத் தம்பிப் புலவர் கையில் ஒப்பித்து, நீயே நூலைப் பூர்த்தி செய்யென்று வேண்டிக்கொண்டார். சின் னத்தம்பிப் புலவர் தந்தையார் வேண்டுதலைச் சிர மேற்கொண்டு, இன்னும் ஒரு காப்புச் செய்யுள் பாடி, இரு காப்புக்களுடன் கல்வளை யமக அந்தாதி என்னும் அந்தப் பிரபந்தத்தைப் பாடி முடித்தார். அதன் பிறகு அவர் பாடிய பிரபந்தம் மறைசையந் தாதி. ஈழமண்டலப் பாடல்களுள்ளே வடதேச வித்துவான்களெல்லாம் மனமொத்து மதிக்கும் பிர பந்தம் இது. இதனைப் பதினைந்து வயசிற் பாடினார் என்று சொல்லுகிறார்கள். 'கரவை வேலன் கோவை' என்ற பிரபந்தமும் இவர் பாடியதென்று சொல் லப்படுகிறது.

# 8. பறாளாய் விநாயகர் பள்ளு.

'ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றுமின்றுங் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே'

இந்தப் பாட்டு முக்கூடற் பள்ளில் உள்ளது; வெகு பிரசித்தமானது. நாளைக்கு ஆற்றிலே வெள்ளம் கரைபுரண்டு பெருகப்போகின்றது இது நிச்சயம். அதற்கான குறிகள் எல்லாம் தோன்றுகின்றன. மலையாளப்பக்கத்திலும ஈழக்கரையிலும் பளிச்சுப் பளிச்சென்று மின்னுகிறது. காற்றுச் சுழன்று சுழன்று அடிக்கிறது. தவளைகள் கத்துகின்றன. இனி இதற்குமேலே என்ன வேண்டும். மழை எங்கேயோ பொழிகின்றது. எங்கே என்றுதான் தெரியவில்லை. மலையாளப் பக்கத்துலே பெய்யலாம்; இல்லையேல் ஈழநாட்டிலே சொரியலாம்.

ஈழநாட்டிலேதான் மழை வெளுத்து வாங்கினது. அங்கே சின்னத்தம்பிப் புலவர் இருந்தார். முக்கூடற்பள்ளுமன்னனுக்கு அவருடைய பறாளாய் விநாயகர் பள்ளிலே, 'சோ' என மாரி பொழிந்தது. அந்த மாரி மழையிலே நனைந்து கொஞ்சங் கொடுகுவோம் வாருங்கள். சுழிபுரப் பக்கத்திலிருந்து, மழை வருகின்றது; வந்துவிட்டது.

கருமயிலாடக் குயிலினம் வாடக்
கவியினம் ஓடக் கரடி புல்வாய்
பொருபுலி யாளித் திரள் மரைசாரற்
புறமுழை பதறிக் *தெ[illegible]கிடவே.

* சில புத்தகங்களில் 'கிடுகிடவே' என்றிருப்பது தவறு.

யகுகுழை தவளக் குலவரை தகரத்
தடதிகி ரியின்முத் துதிர்தரவே
சொரிமல ரகிலப் பலமர முறியச்
சோவென மாரி பொழிந்ததுவே.

மயில்கள் ஆடுகின்றன; குயில்கள் வாடுகின்றன. குரங்குகள் ஓடுகின்றன. கரடி முதலிய விலங்குகள் கொடுகுகின்றன. குலமலைகள் தகருகின்றன. மூங்கில்கள் முத்து உதிருகின்றன. மரங்கள் முரிந்து கொறுங்குகின்றன. 'சோ' என்று சொல்லும்படி மாரி பொழிகின்றது.

'சுழித்துத் திரட்டி வெருட்டி யுருட்டித்
துள்ளி வெள்ளம் பரந்ததே'

எங்கும் வெள்ளக்காடு. வேளாண்மை செழித்தது. இனி என்ன குறை என்று சொல்லிக்கொண்டு, 'குடும்பன்' என்ற பள்ளன் கமக்காரனாகிய ஆண்டையிடம் வருகின்றான். ஆண்டைக்குச் சந்தோஷம் சொல்லி உபகாரம் பெற்றுக்கொண்டு போகிறான். அவன் போக, வருகிறாள் மூத்த பள்ளி. குடும்பனுக்கு இரு குடும்பம். ஒருத்தி ஈழமண்டலத்தாள், மற்றவள் சோழமண்டலத்தாள். இவள் இளைய பள்ளி. ஈழமண்டலத்தாள் மூத்த பள்ளி.

சிந்தைமதிக் கெட்டான் செழித்தபண்ணை யாண்டவனுக்
கிந்தவகை பள்ளன் இயம்புமொழி யைக்கேட்டு
வந்தகுல மூத்தாள் வறிதுநகை யுந்தோற்ற
முந்துகுடும் பன்சரிதை முதலிக்கத் தொடங்கினளே.

ஆண்டைக்குப் பள்ளன் சொன்னவைகளையெல்லாங் கேட்டு மூத்த பள்ளி சிரித்துக்கொண்டு வருகின்றாள். கோபச் சிரிப்பு. பெரிய முறைப்பாட்டோடு வந்திருக்கின்றாள். இளைய பள்ளி கால்

வைத்த பிறகு, குடும்பன் நடபடிக்கைகளையெல்லாம் சொல்லி மூதலிக்கத் தொடங்குகிறாள்.

பண்புநீதி யறியாத தூக்குணிப்
பள்ளன் செய்கருமங்களைக் கேளும்
உண்ப துங்குடிப் புங்களிப் புங் கண்
உறக்க மும்இளை யாள்குடி லோடே
எண் பொருந்துமென் புத்தியுங் கேளான்
யானும் பின்னை உரைப்பதும் விட்டேன்
பெண் பிறந்தது நான்மட்டுமோ விந்தப்
பேச்சை யார்க்கினி விள்ளுவே னாண்டே

'ஆண்டே, மனிதப்பண்பும் நீதியும் இல்லாத படு தூக்குணியான சோம்பேறிப் பள்ளனின் நடபடிக்கைகளை ஒருக்கால் கேளும். அந்தத் தூக்குணி உண்பன தின்பனவும் ஆடல் பாடல் உறக்கம் எல்லாம் அவள் குடிலிலேதான். என் வயசென்ன! அநுபவம் என்ன! இப்படியிருந்தும் அவன் என் புத்திமதிகளைக் கேட்கின்றானா! எத்தனை நாளைக்கு என்று இடித்திடித்துச் சொல்லுகிறது; நான் அவனோடு பேசுவதேயில்லை. பிரபு, நான் மாத்திரந்தானா பெண்ணாய்ப் பிறந்து இப்படிக் கஷ்டப்படவேணடியவள்! — ஆண்டைக்குச் சொல்லாமல் என் குறைமுறைகளை வேறு யாருக்குத்தான் சொல்ல வைத்திருக்கிறேன்?'—இப்படியெல்லாம் மூத்த பள்ளி தன் குறைகளைச் சொல்லியும் ஆண்டையின் செவியில் அவைகள் ஏறவில்லை. காரியம் வாய்க்கவில்லை. அவள் வந்தவழியே போகின்றாள். போய் அடுத்தநாள் வருகின்றாள். முதனாள் முறைப்பாட்டிற் சிறிது மாற்றஞ் செய்து

கொண்டு வருகின்றாள். ஆண்டையை வணங்கிச் சொல்லுகின்றாள்:

**கட்டுநீர் வயற்செய்கையுந் தீண்டான்**
**கலகப்பள்ளி மயல்வலைப் பூண்டான்**
**பட்டியின் மாட்டை எட்டியும் பாரான்**
**பழைய தாரமென் றென்னையுஞ் சேரான்**
**சட்டைக் காரியை விட்டுப் பிரியான்**
**சற்றே பிரிந்தாலும் இங்குந் தரியான்**
**பெட்டிச் சோற்றுக்குங் கள்ளுக்கும் நெல்லெல்லாம்**
**பெட்டியா லள்ளிக் கொட்டினு னுண்டே.**

'ஆண்டே அவன் வயற்பக்கம போகிறதில்லை ...'

வந்துவிட்டது கோபம் ஆண்டைக்கு. நல்லசமயம்!

'ஆண்டே அந்த எடுபிடிகாரியின் மாயவலையில் அவன் சிக்கிக்கொண்டான். கட்டின மாடு கட்டினதுதான்; அவிழ்த்தது அவிழ்த்ததுதான். அவன் அந்தப்பக்கமே போவதில்லை. பழைய தாரம் என்று என்னையும் சேரான். என்னைத்தானே மறந்துவிட்டான். சட்டைக்காரியை விட்டுப்பிரியான் — சதா அவள் குடிலிலேதான் இருக்கிறான். எடுப்புச் சோற்றுக்கும் கள்ளுக்குந்தான் ஆண்டையின் நெல்லுத் தொலைகிறது!'

மூத்த பள்ளி மூட்டினாள். தன்னுடைய கொள்ளிகளையும் இடையிடையே தள்ளினாள். ஆண்டைக்குக் கோபம் மூண்டது. பள்ளனுக்கு விலங்கு பூட்டிக் கசையடி கொடுத்தார் ஆண்டை.

**பள்ளனிரு காலினுக்கு விலங்கு பூணப்**
**பண்ணுவித்தாள் என்றிளைய பள்ளி காண**

எள்ளளவு மிரக்கமென்ப திலேயோ ஆண்டைக்
கென்ன பழி என்றிரங்கிக் குழைந்துபோனாள்.

இளைய பள்ளி 'இது அநியாயம் அநியாயம்' என்று மூத்த பள்ளியைத் திட்டிக்கொண்டு, ஆண்டையையும் மனத்துள் வைதுகொண்டு, அழுது அழுது மனங் குழைந்துகொண்டே தன் குடிலுக்குப்போகின்றாள். இளைய பள்ளி அழுதுகொண்டு போக,

கள்ளவழி யாலீழப் பள்ளி போந்து
கள்ளும்நல்ல கொழுத்தமறிக் கறியுங் கூட்டித்
துள்ளியுள்ள அகந்தையினாற் காலிற் பூண்ட
தொழுவிலங்குப் பள்ளனுக்குச் சோறிட்டாளே.

மூத்த பள்ளி ஒன்றுமறியாதவள்போல ஒரு கள்ள வழியாலே கட்டுப்பட்ட பள்ளனிடம் போய், அவனுக்கு நல்ல கள்ளும் கொழுத்த மறிக் கறியும் சோறும் கொடுத்துத் தன் அருமைகாட்டி உறவு கொண்டாடுகின்றாள். கள்ளமே தெரியாத அந்தப் பள்ளனுக்கு உள்ளங்காலிலிருந்து உச்சிவரை உருக்கம் பிறந்துவிட்டது. அவன் விம்மல் பொருமலோடே மூத்த பள்ளிக்குச் சொல்லுகின்றான்:

பட்டநெஞ்சில் அடாதன செய்தார்
படாததெல்லாம் படுவார்கள் என்கை
கெட்டியாயறிந் தேனினி நீயிட்ட
கீற்றையுங்கட வேனொருக் கால்லும்
தொட்டகோபந் தவிர்கணக் காம்படி
சொல்லுவேனுங்க ளாண்டைக்குச் சொல்லித்
தட்டுகாற்றனை நீக்குவித் தேயென்னைத்
தாங்கிக்கொள்ளீழ மண்டலப் பள்ளீ.

'பட்ட நெஞ்சில் அடாதன செய்தார் படாததெல்

லாம் படுவார்கள் என்கை கெட்டியாயறிந்தேன்— அடியாத மாடு படியாது. எனக்கு நல்ல பாடம் வந்துவிட்டது. நீ இட்ட கீற்றையும் கடவேன் ஒருக் காலும். தொட்ட கோபந்தவிர். உன் ஆண்டை யின் நெல்லுக் கணக்குக்களையெல்லாம் தப்பாமல் ஒப்பிக்கிறேன். ஈழமண்டலப் பள்ளி! அடியே, ஆண்டையைக் கொஞ்சம் இளகப்பண்ணி, என்னை இந்த விலங்கிலிருந்து விடுவித்திடடீ!'

குடும்பன் விம்முகிறான். ஆகட்டும் என்று சொல் லிக்கொண்டு அவள் போகின்றாள்; ஆண்டையிடம் போகின்றாள். மற்றொரு நெகிழ்ந்த இராகத்தில் முறைப்பாடு நடக்கின்றது. ஆண்டை அதிசயக் குறியுடன் நோக்குகின்றார்.

**கண்ணிலேகரந் தீண்டிவிட் டாலந்தக்**
**கைவிரல்தறிப் பார்களு முண்டோ**

'கண்ணிலேதவறிக் கீறிவிட்டதென்று கைவிரலைத் தறிக்கிறதா! ஆர் என்று பாருங்கள் ஆண்டே! அவன் ஆர்; நான் ஆர்!'

**வண்ணமான முலைவி ழுந்தாலந்த**
**வயிறுதாங்கக் கடனல்ல வோதான்**

முலைவேறு வயிறு வேறு!

**அண்ணல்வாரி உலகத்தி லேயடி**
**யாதமாடு படியாத தென்கை**
**திண்ணம்திண்ணம் சிறியோர்செயும் பிழை**
**சீரியோர்பொறுக் கக்கடன் ஆண்டே**
**ஒறுத்ததாற்பய னென்பொறுத் தாருக்கு**
**உலகமுள்ளள வும்புக ழென்றே**
**மறுத்தவிர் ந்திடு வள்ளுவ னார்செய்த**
**மான வெள்ளைக் குறளறியீரோ**

ஆண்டே,

**ஒறுத்தார்க்கொரு நாளையின்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்**

*சுவாமீ, கோபித்ததுபோதும். இந்த எளிய பள்ளன் இனி ஒருபோதும் பிழைசெய்யான். நான் பிணைநிற்கின்றேன். ஆண்டையின் கணக்குக்களை ஒப்பிப்பான்.*

**செறுத்த காவலில் வைத்திடும் பள்ளனைச்**
**சேர்த்த காற்றளை மாற்றுவீ ராண்டே'**

*ஆண்டை இளகுகின்றார். குடும்பன் விடுதலை அடைகின்றான் இளைய பள்ளியும் வந்து சேருகின்றாள். மூவரும் ஒன்று கூடுகின்றார்கள், பழைய கோபதாபங்களை மறக்கின்றார்கள். சுழிபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற விநாயகப் பெருமானை ஒருங்குசேர்ந்து பிரார்த்திக்கின்றார்கள்.*

**சுத்தர்பணிந் தேத்துஞ் சுழிபுரத்து வீற்றிருக்கும்**
**அத்த பரஞ்சோதி அண்ணலே—கைத்தலத்துச்**
**சூலந் திரித்துமுனந் தோன்றால காலமெனக்**
**காலன் வரும்போது கா.**

# 9. கம்பரில் 'பாலர் பாடசாலை'

மாலை நேரம் பள்ளியிலிருந்து சின்னஞ் சிறுவர்கள் வருகின்றார்கள். பச்சைப் பாலர்கள். மிக மிகப் பச்சையான பாலன் முன்னுக்கு வருகின்றான். அந்தப் பச்சைக்குப் பெயர் இராமன். இராமனுந் தம்பிமாரும் பள்ளியிலிருந்து வருகின்றார்கள்.

"வீரனும் இளைஞரும் வெறிபொழில் களின்வாய்
ஈரமொ டுறைதரும் முனிவர ரிடைபோய்ச்
சோர்பொழு தணிநகர் துறுகுவர் எதிர்வார்"

வீரன் இராமன். இளைஞர் தம்பிமார். அவர்களுடைய பள்ளிக்கூடம் காட்டுப் பள்ளிக்கூடம். நகரத்தைச் சூழ்ந்திருக்கிறது நாடு. நாட்டுக்கப்பாலே காடு. காடுகளுக்குள்ளே நல்ல மரச் சோலைகளுக்குக் கீழேதான் பள்ளிக்கூடம். பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் 'ஈரமொடுறைதரும் முனிவர்'. நெஞ்சிலே ஈரமுள்ள—அன்பு கசிந்து ஒழுகுகின்ற—வசிட்டர் முதலிய முனி சிரேஷ்டர்கள்தாம் இராமன் போன்றவர்களைப் படிப்பிக்கின்றவர்கள். இராமனுந் தம்பிமாரும் நகரம் கடந்து, நாடுகடந்து நடந்துபோய்க் காட்டுப் பள்ளியில் படித்துவிட்டு, மாலைநேரத்தில் நகரை நோக்கி வருகின்றார்கள். வழியிலே நாட்டிலே உள்ள குடியான சனங்கள் 'எதிர்வார்'. —இந்தக் குழந்தைகளாகிய பச்சைப் பாலன்களை எதிர்கொள்ளுபவர்கள்போல எதிரே வருவார்கள். வேறு வழியிற் செல்லுபவர் கூட, வேறு அலுவல்களில் ஈடுபட்டிருப்பவர்கூட அந்தப் பரிசுத்த பாத்திரங்களான பாலர்களைக் கண்டதும்,

கன்றுகளை நோக்கி வருகின்ற பசுக்கள்போலே அக்குழந்தைகளை எதிர்வார்; அந்தக் குழந்தைகளை நோக்கிக்கொண்டு எதிர்வருவதில் அவர்களுக்குப் பெரிய ஆசை; ஒருமுறை சென்றவர்கள், இன்னும் ஒருமுறை எதிர்செல்லும் ஆசையால், வேறொரு வழியால் வந்து எதிர்வார். எதிர் வருகிறவர்கள் அத்தனைபேரும்,

**'கார்வர அலர்பயிர் பொருவுவர் களியால்'**

கார் காலம்வரத் தளிர்த்துக் களிக்கின்ற நெற்பயிர் போலே, அகமும் முகமும் ஒருங்கு மலர்ந்து களிகொள்ளுகின்றார்கள்.

**'எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்**
**முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா**
**எதுவினை; இடரிலை; இனிதுநும் மனையும்;**
**மதிதரு குமரரும் வலியர் கொல்; எனவே'**

எதிரில் வருகின்ற குடிசனங்கள், எத்தனைமுறை திரும்பித் திரும்பி வந்தாலும், எமதுடை இறைவன்—எங்கள் இராமன், சூரியோதயத்தைக் கண்ட தாமரைமலர்போலே முகம் மலர்ந்து, பிரகாசிக்கின்றான். கருணையாகிய இனித்த தேன் கனிந்து அவன் முக மலரினினின்றும் ஒழுகுகின்றது. 'எப்படி முயற்சிகள்! சேமந்தானே? வீட்டுப்பக்கமும் நல்ல சௌக்கியமே? மதிக்கத்தக்க புத்தி கூரிய உங்கள் புதல்வர்கள், கல்வியிலும் ஆண்மையிலும் மிக்க சாமர்த்தியவான்களாயிருப்பார்களே!' என்றெல்லாம் சுக நலம் விசாரிக்கின்றான். இப்படி விசாரிக்கின்றவன் யார்? குழந்தையாகிய இராமன்; இளவரசு. எப்படிப்பட்டவர்களை விசாரிக்கின்றான்? பெண்களும் ஆண்களுமான சாதாரண குடிசனங்களை விசாரிக்கின்றான். எந்

தச் சந்தர்ப்பத்தில் விசாரிக்கின்றான்? பள்ளியி லிருந்து வரும்போது சனங்களைச் சந்திக்குந்தோ றும் சந்திக்குந்தோறும் விசாரிக்கின்றான். இனி அந்தச் சனங்களைப் பாருங்கள்:

**அஃது ஐய நினைஎமதரசென உடையோம்**
**இஃது ஒரு பொருளல; எம துயிருடன்ஏழ்**
**மகிதலம் முழுதையும் உறுக இம் மலரோன்**
**உகுபகல் அளவென உரைநனி பகர்வார்.**

'அப்பனே, நீதான் எங்களுக்கு இராசா. எங்க ளுக்கு என்ன குறை! இனிமேல் நீ அடிக்கடி எங் கள் சுகங்களை விசாரிக்கவேண்டாம். நாங்கள் நித் திய சுக சீவிகளாய் வாழ்ந்துவருகின்றோம். அது கிடக்கட்டும். நாங்கள் எங்கள் உயிரையும் ஏழு உல கங்களையும் உன்னுடைய பாதங்களுக்கே அர்ப்ப ணஞ்செய்கின்றோம். கற்பகாலம்வரை நீ எங்களை ஆண்டு அரசபுரிவாயாக!' என்று உரையாடுவார் கள் அந்தச் சனங்கள். அம்மட்டோ!

**ஏழையர் அனைவரும் அவர்தட முலைதோய்**
**கேழ்கிளர் மதுகையர் கிளைகளும் இளையார்**
**வாழியர் எனஅவர் மனன்உறு கடவுட்**
**டாழ்குவர் கௌசலை தயரதன் எனவே**

பெண்கள் ஆண்கள் யாவரும், 'இந்த அரசிளங் குழந்தைகள் நீடுவாழவேண்டும்; நமது குலதெய்வங் கள் திருவருள் பொழியவேண்டும்' என்றெல்லாம் வாழ்த்துகின்றார்கள்; பிரார்த்திக்கின்றார்கள். பெற் றோராகிய கௌசலையும் தசரதனும் அந்தக் குழந் தைகளை இட்டு எப்படிப் பிரார்த்திப்பார்களோ, அப்படிப் பிரார்த்திக்கின்றார்கள் குடிசனங்கள்.

குடி சனங்களின் வாழ்த்திலே குழந்தைகள் வளர் பிறைபோலே வளர்ந்து வருகின்றார்கள்.

அவர்களுடைய ஆத்மா, மரநீழலிலே வசிட்ட முனிவரின் கல்விப் போதனையில் விருத்தியடைகின்றது. வில்வித்தைகள் மல்வித்தைகள்கூட அவர்களுக்குச் சொல்லி வைக்கிறார் வசிட்டர்.

வசிட்டருடைய பல்கலைக்கழக மாணவனாகிய இராமனுக்கு ஒருநாள் பரீட்சை ஆரம்பிக்கின்றது. வாய்மொழிப் பரீட்சை. அவனுடைய சிறியதாய் கைகேசி. அவள் சொல்லுகின்றாள்: "ஏ, ராமா! நீ காட்டை ஆள், உன் தம்பி பரதன் நாட்டை ஆளட்டும். இது உன் அப்பாவின் விருப்பம்".

"அம்மா! அப்பாவின் விருப்பம் என்றும் தாங்கள் சொல்லவேண்டுமா? தாங்கள் காலாலே காட்டுவதை யான் தலையாலே செய்யேனா! என் பின்னவன் பெற்ற செல்வம் யான் பெற்ற செல்வம் அல்லவா!" என்கின்றான் இராமன். பரதனை நினைத்து அவனுக்கு மகிழ்ச்சி பொங்குகின்றது. தாய் சொற்படி காட்டுக்குப் புறப்படுகின்றான். சீதையும் இலக்குமணனுந் தொடர்கின்றார்கள். பரீட்சையில் பூரண வெற்றி அடைகின்றான் இராமன்.

இந்தப் பரீட்சைக்கு முன்னமே ஒரு பெரிய பரீட்சையில் இராமன் தேறியிருக்கின்றான். அது நாடு நகரங்களிலே உள்ளவர்களுக்குத் தெரியாது. காட்டிலே நடந்தது. விசுவாமித்திரரின் வேள்வியைக் காவல்செய்தற்குப் போனபோது நடந்தது. விசுவாமித்திரர் இராம லட்சுமணர்களை அழைத்துக்கொண்டு காட்டுக்குள் பிரவேசிக்கின்றான். தாடகை ஆலகால விஷம்போல வாயைத் திறந்துகொண்டு வருகின்றாள். விசுவாமித்திரருக்குப் பெரிய நடுக்கம். "இராமா! உனது பாணந்தான் உயிர்களுக்குத் தஞ்

சம்" என்கின்றார் விசுவாமித்திரர். இராமனுக்கோ அம்பிலே தொடக் கை கூசுகின்றது. தாடகை கொடியவள்; ஆனாலும்,

**பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்.**

'இவள் ஒரு பெண்ணாயிற்றே; இவள் மேலே யோசனையின்றித் திடீரென்று அனுக்குண்டுப் பிரயோகம் செய்யலாமா' என்று சற்றே தாமதித்தான் அந்த இராமன்.

"அடே ராமா,

**ஆறிநின்றது அறன்; நன்று"**

என்று விசுவாமித்திரரே இராமனைப் பாராட்டுகின்றார். அவன் தாமதித்தது—சிந்தித்தது — தர்மம் ஆயிற்று. அவனுக்கு இந்தத் தர்மம் எங்கு இருந்து வந்தது? எந்தக் கலாசாலைப் படிப்பிலிருந்து வந்தது? சற்றே சிந்தியுங்கள்.

இராவணன் சீதையைக் களவு செய்தவன். யுத்தத்திலே படைகளை இழந்து வெறுங் கையோடு வெட்கித் தலைகுனிந்து இராமன் எதிரில் நிற்கின்றான். இராமன் ஒரே ஒரு பாணத்தால் அவனைக் கொன்று ஒழிக்கலாம். ஆனால் அந்த இராமன், "ஏ; இராவணா! தவித்த முயல் அடிப்பது தர்மம் அன்று. இன்று போய்ப் போருக்கு நாளை வா!" என்கின்றான். இந்த வார்த்தை இராமனுக்கு எப்படி வந்தது? யோசியுங்கள்.

# 10. கம்பன் செய்த வம்பு

"ஏ, வம்பு!' என்று அழைத்தால், புலவர்கள் நிறைந்த சபைமத்தியிலிருந்து எழுந்து 'ஏன்' என்று சொல்லிக்கொண்டு தலையை நீட்டுவான் கம்பன்" என்று ஒருமுறை ஒருவகைச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே அன்றைய கதையை ஆரம்பித்தார் உரையாசிரியர் ஸ்ரீமத் ம. க. வேற்பிள்ளை. அவர் கம்பராமாயண இரசனைக்கென்றே பிறந்தவர். நாவலர் மருகரும் வித்துவசிரோமணியுமான பொன்னம்பலபிள்ளையினுடைய உத்தம மாணக்கர் இந்த உரையாசிரியர். படித்த பரம்பரையில் வந்த இவர், கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனை 'வம்பு' என்று எப்படிச் சொல்லலாம் என்று நான் அப்பொழுது எண்ணினேன். ஏதுங் கேட்பதற்கு எனக்குத் தைரியம் உண்டாகவில்லை இது முப்பது வருடத்துக்குமுன் நடந்த சம்பவம். பிறகு அந்தச் சம்பவத்தைச் சிந்திக்கச் சிந்திக்கக் 'கம்பன் ஒரு பெரிய வம்பு'தான் என்று எனக்கும் ஒரு அளவில் தோன்றுகின்றது. 'வம்பு' என்ற வார்த்தைக்குப் 'புதுமை' என்ற பொருள் வழங்குகின்றது. சங்க காலத்துக்குப் பிறகு வந்த பெரும்பாலான புலவர்களை உற்றுநோக்கினல், கம்பன் வேறு சாதி 'வம்பு' என்றுதான் தோன்றும்.

இராம சரிதத்தை மூன்று வேறு முனிவர்கள் மூன்று வேறு நோக்கில் வடமொழியிலே மூன்று இராமாயணம் செய்திருக்கின்றார்கள். வசிட்டர் செய்தது அத்தியாத்ம இராமாயணம. போதாயனர் செய்தது போதாயன இராமாயணம், வான்மீகி

செய்தது வான்மீகி இராமாயணம். வான்மீகந்தான் முந்தியது.

> 'தேவ பாடையில் இக்கதை செய்தவர்
> மூவர்; ஆனவர் தம்முளும் முந்திய
> நாவி னுர்உரை யின்படி நான்தமிழ்ப்
> பாவி னுல்இது உணர்த்திய பண்பரோ'

தேவ பாடை: வடமொழி. முந்திய நாவினுர்: வான்மீகி. 'அவர் வாக்கின்படி அப்படியே அட்சரந் தவருமல் நான் தமிழ்ப்படுத்துகின்றேன்' என்று சத்தியம் பண்ணுகின்றுன் கம்பன்.

> 'வாங்கரும் பாதநான்கும் வகுத்தவான் மீகியென்பான்
> தீங்கவி செவிகளாரத் தேவரும்பருகச் செய்தான்
> ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம்மாந்தி
> மூங்கையான் பேசலுற்ருன் என்னயான் பேசலுற்றேன்'

'வான்மீகியின் நான்கடிப் பாடல்களைத் தேவர்கள் கூடப் பருகுகின்ருர்கள். அந்த வடமொழிப் பாட்டுக்களுக்கு எதிரிலே என் பாட்டு ஊமைப் பாட்டு' என்று தன் பாட்டை இகழ்ந்துகொள்ளுகிருன் கம்பன்.

> நெய்தில் நொய்யசொல் நூற்றலுற் றேனெனே!
> வைத வைவின் மராமரம் ஏழ்துளே
> எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
> செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே.

'வான்மீகியின் அமிர்த வாக்குக்கள் வழங்குகின்ற இந்த நாட்டிலே, எளிதினும் எளிய சொற்களினுலே, வெட்கமில்லாமல் நானும் சில பாடல்கள் பாடிவிட்டேன். என் அறியாமை இருந்தபடி என்னே!' என்று தன்னேத்தானே நொந்து பெருமூச்சுக்கூட விடுகின்ருன் கம்பன்.

வான்மீகி இராமாயணம் தமிழில் மொழி பெயர்த்து வந்திருக்கிறது. மொழிபெயர்ப்பையும் கம்பனையும் ஒப்பிட்டுப்பார்த்தால் பொறுத்த இடங்களில் வான்மீகி மேற்கே நடந்தால், வான்மீகியை வானத்தில் வைத்துப் பாராட்டுகின்ற இந்த வம்பன் கிழக்கே நடக்கின்றான். இப்படிப்பட்டவனை 'வம்பு' என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்லுவது!

'தந்தையின் கட்டளைப்படி நீ காட்டுக்குப்போக வேண்டும்' என்கின்றாள் வான்மீகியிலே கைகேசி. 'அதுமுடியாது; அப்படியானால், அப்பா எனக்கு நேரே சொல்லட்டும்' என்கின்றான் இராமன். கதை வளர்கின்றது. இருவருக்கும் பெரிய வாக்குவாதம். 'உனக்கு என்னிடம் எள்ளளவும் அன்பில்லை. இந்த இரகசியம் எனக்கு இளமைதொட்டுத் தெரியும்' என்று கைகேசியை நிந்திக்கின்றான் இராமன், அந்த வான்மீகியிலே.

இந்தப் பொறுத்த இடத்தை அப்படியே கைகழுவிவிட்டு,

**'எந்தையே ஏவ நீரே உரைசெய இயைவ துண்டேல்**
**உய்ந்தனன் அடியேன் என்னிற் பிறந்தவர் உளரோவாழி'**

**'மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ என்**
**பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ'**

"தாயே! என் அருமைத் தந்தை எனக்கு ஒரு கட்டளை இட, அதனைத் தாங்கள் எனக்கு வந்து சொல்லுகிறதானால், அதைவிட வேறு என்ன பாக்கியம் இருக்கிறது! அருமை அன்னையே எனக்கு ஒன்று சொல்லுவதானால், அதனை மன்னன் கட்டளை என்று தாங்கள் சொலலவேண்டும்! தாங்கள்

தாங்கள் அடியினாலே காட்டுவதனை நான் முடியினாலே செய்யமாட்டேனா! தங்கள் பெருமையை இழுக்குவதொன்றை என் செவிகள் சகிக்குமா? என் அரும்பெறல் தம்பி பரதனுக்கு ஒரு பாக்கியம் கிட்டுமானால், அது எனக்குக் கிடைத்த பாக்கியமல்லவா! அவன்தானே நான்; நான்தானே அவன்!" என்கின்றான் இராமன், அந்தக் கம்பனின் வம்பிலே.

அரசிழந்த இராமன் காட்டுக்குப் போகிறான். அவனுடைய அருமையான முகம் கரிந்து நாவற்பழம் போலே ஆயிருக்கிறது வான்மீகியிலே. ஆனால் அதை இந்த வம்பு எப்படிச் சொல்லுகிறானென்று பாருங்கள்:

**'ஒப்பதே முன்பு பின்பு அவ் வாசகம் உரைக்கக்கேட்ட**
**அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா'**

'பரதன் நாட்டை ஆளட்டும்; நீ போய்க்காட்டை ஆள்' என்ற அந்த அருமை வாசகத்தைக் கேட்ட போது, முடிதுறந்து போகிற இராமனுடைய முகம் அப்பொழுதலர்ந்த செந்தாமரையினைத் தோற்கடித்துவிட்டது; முன்பின் எப்பொழுதாயினும் அவனுடைய முகம் அப்படி மலரவில்லை என்கிறான் கம்பன். எப்படியிருக்கிறது வம்பு. கம்பன் செய்த இராமாயணத்தைக் 'கம்பன் செய்த வம்பு' என்று தான் சொல்லவேண்டும்.

இந்தியா தேசத்திலே எத்தனையோ இராமாயணங்கள் எத்தனையோ மொழிகளில் அந்த அந்த மொழிகளில் வல்ல கவிஞர்களால் செய்யப்பட்டிருக்கின்றன; நன்கு கொண்டாடப்படுகின்றன. இந்

தக் கம்பன் செய்த வம்பு எந்த இராமாயணத்தோடும் ஒத்துப்போவதாயில்லை. துளசி இராமாயணத்தை உருகி உருகிக் கண்ணீர் இறைத்து இறைத்துப் பாராயணம் செய்கின்றார்கள் இந்திக்காரர்கள். துளசியின் பாலகாண்டம் தமிழிலும் வந்திருக்கிறது. துளசியிலே இராமனைக்கொண்டு வில்லு வளைப்பிப்பதிலும், கல்லிலே நார் உரிப்பது சுலபம். இராமன் அந்தப் பொல்லாத வில்லை வளைத்துத் தொலைத்துத் தாலியைக்கட்டிவிடவேண்டுமென்று, விசுவாமித்திரரும் சீதையும் நேர்ந்த நேர்த்திகடன்கள்—பிரார்த்தனைகளுக்கு அளவே இல்லை; சீதை அழுதும்விட்டாள். கம்பன் இந்த வில்லுவளைப்பில் ஒரு அரைக்கண நாடகம் நடத்தியிருக்கிறான். சகுந்தலை நாடகம் அதற்குத் திரை போடக்கூடக் காணாது.

'புனைந்தசடைமுடி துளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்,

விசுவாமித்திரர் தமது சிரசையசைக்காமலே சடைமுடியை மாத்திரம் ஒரு அசைப்பு அசைத்துச் சிங்கேறுபோலிருந்த இராமனை ஒரு பார்வை பார்க்கின்றார். அவ்வளவுதான் ;

**பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி**
**எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தான்.**

விசுவாமித்திரருடைய பார்வையாகிய நெய்யாகுதியைத் தொடர்ந்துகொண்டே அக்கினிக் கொழுந்து சுவாலித்தெழுந்தாற்போல இராமன் எழுந்தான். அவ்வாறெழுந்த அவன்,

**மாக மடங்கலும் மால்விடை யும்பொன்**
**னாகமும் நாகமும் நாண நடந்தான்.**

அந்தப் பெரிய சபையிலே எவரும் எந்தக்காலத்

திலும் நடவாத ஒரு கெம்பீர நடையில் அந்த வில்லை நோக்கி நடக்கின்றான்.

**தேடரு மாமணி சீதை யெனும்பொற்**
**சூடக வால்வளை சூட்டிட நீட்டும்**
**ஏடவிழ் மாலையி தென்ன எடுத்தான்.**

இராவணன் முதலிய வீராதி வீரர்களையெல்லாம ஏப்பம் செய்துவிட்டுக்கிடந்த அந்த வில்லைச், சீதாபிராட்டிக்குச் சூட்டுதற்கு ஒரு முல்லை அரும்பு மாலையை எடுப்பதுபோலப் பராமுகமாக, வெகு அநாயாசமாகவே எடுத்தான்; ஆனால் வெகு வேகமாக எடுத்தான்.

**தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்**
**மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார்**
**கடுப்பினில் யாரும றிந்திலர் கையால்**
**எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.**

அங்கேயிருந்தவர்கள் இமைக்காமல் இமைகளைத் தடுத்து வைத்துக்கொண்டேயிருக்கின்றார்கள். இன்னும் ஒரு கணம் ஆகவில்லை—அதற்கு எவ்வளவோ நேரம் இருக்கிறது. இராமன் வில்லை எடுத்தான். அவ்வளவுதான். அப்பால் என்ன நடந்தது என்று எவருக்குமே தெரியாது. ஆனால், இற்றது கேட்டார். இடிமுழக்கமொன்று செவியைச் செவிடுபடுத்தியது. வில்லுந் துண்டு துண்டானது!

திரைவிழுகிறது. கம்ப நாடகம் முடிந்தது. துளசி எங்கே! இந்த வம்பு எங்கே!

துளசி முதலியவர்களுக்கு வேறாகக் கம்பர் வம்பு செய்யட்டும். வான்மீகிக்குக்கூட மாறாயிருக்கட்டும். வான்மீகிக்கு மாறாயிருந்து

கொண்டே, 'நான் சொல்வதெல்லாம் அட்சரந் தப்பாமல் வான்மீகியின்படி' என்று சொல்லுகிற வம்புதான் பெரிய சிக்கலைத் தருகின்றது. ஏன் அப்படிச் சொல்லவேண்டும்? நான் வான்மீகிக்கு எதிர் என்று நேருக்குநேர் சொல்லிவிடலாமே! ஏனிந்த வம்பு?

'கம்பர்ஒரு வம்புஞ் செய்யவில்லை' என்று ஒருவர் சொல்லுகின்றார். 'புதுமை ஒன்றுமே செய்யவில்லை. வான்மீகத்தை இடையிலே எத்தனையோபேர் கதை பண்ணுகிறவர்கள் தம் மனம் போனவாறு பாழ் பண்ணிவிட்டார்கள். இராமன் முதலிய பாத்திரங்களை வான்மீகி எப்படிச் சிருட்டி செய்திருப்பார் என்று, தமது அபார கற்பனாசக்தியினாலே கண்டு கவிதை செய்ததுதான் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் செய்த வம்பு. உண்மையிலே அதிலே ஒரு வம்புமில்லை. அது பழையது; சத்தியமானது. சற் பாத்திரங்களிற் கட்டி நடத்தும் படு பொய்களை அப்படியே சேதிக்கும் செந்நாக் கவிஞன் கம்பன். வான்மீகியை உள்ளவாறு தந்தவன் கம்பன்' என் கின்றார் அவர்.

**'கழுந்தர்ஆயுன கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே**
**அழுந்தவாளிகள் தொடுசிலை ராகவ அபிநவ கவிநாதன்**
**விழுந்த ஞாயிறு எழுவதன் முன்மறை வேதிய ருடனாராய்ந்**
**தெழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே'**

இராக்காலங்களிலே வடமொழி இராமாயணங்களை ஆராய்ந்து உண்மை வான்மீகியைக் கண்டுபிடித்துப், பகற்காலங்களிலே, ஒரு பகலுக்கு எழுநூறு பாட்டாகப் பாடப்பட்டது கம்பராமாயணம். கம்ப

ருக்கு இங்கே வழங்கிய பெயர், இராகவ அபிநவ கவிநாதன். இராமன்மீது அபிநவ கவி செய்தவன் என்று பொருள். அபிநவம்: புதுமை; வம்பு. கம்பர் மேற்காட்டியவாறு வம்பு செய்து, உண்மை வான் மீகியைக் கண்டதேயல்லாமல், வேறும் எத்தனையோ துறைகளில் ஏற்றவாறு வம்பு செய்திருக்கின்றார். காகங் கூடுகட்டுவதுபோலக் கவி கட்டுகிறது கம்ப ருக்கு இல்லை. அவர் கட்டுவதெல்லாம் வம்பு.

# 11. சொற் சித்திரம்

**செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

இனிக்கின்ற கதைகள், தித்திக்கின்ற இலக்கியங்கள், கருத்தைச் சிமிட்டுகின்ற சொல்லோவியங்கள் ஆகிய செவிநுகர் கனிகள், இடையீடின்றிக் கிடைக்குமானல், வயிறு ஒரு பண்டமன்று; உணவு மறதியாய்ப் போய்விடும். செவிநுகர் கனிகள் கிடையாத சமயங்களிலே, ஓய்வு நேரங்களிலே சிறிது சிறிது வயிற்றையும் பார்த்துக்கொள்ளவேண்டும் 'கதைகளை இனிக்கிறதற்கு, இலக்கியங்களை இருந்து தித்திக்கிறதற்கு, கருத்துக்களை அவிழ்க்கிறதற்கு வயிற்றின் உதவியும் ஒரு அளவுக்கு வேண்டுந்தானே' என்கின்ற இந்தத் திருக்குறளின் அருமந்த கருத்துக்கு இனி இந்த உலகத்திலே இடமில்லைப் போலும்!

விஞ்ஞானம் கதித்த இந்த இயந்திர உலகத்திலே மனிதன் வெறும் இயந்திரமாய்விட்டான்; நாயாய் அலைகிறன்; பேயாய்த் திரிகிறன். எண் சாணுடம்புக்கும் வயிறே பிரதானமாய்விட்டது. உணவுப் பிரச்சினை சிக்கனப் பிரச்சினை முதலியன இன்றைய பேச்சாய்விட்டன. இனி வருங்கால மனிதனுக்குச் சிரிப்பு வராது; அது கொட்டாவியாய் மாறிவிடும்போலே தெரிகிறது.

இந்த நாட்டை எடுத்துக்கொள்ளுவோம்; தூரத்துக்குப் போகவேண்டாம். சென்ற நூற்றாண்டை எட்டிப்பார்ப்போம்; அப்பொழுது இந்நாட்டவர்

கள் இப்படிக் கொட்டாவி விட்டுக்கொண்டு கொள்ளிவாய்ப்பேய் மாதிரி அலையவில்லை.

மகாப் பிரபு ஆகிய வைத்தியலிங்கச் செட்டியார் தாபித்த வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலின், வசந்தமண்டபத்திலே, ஆறுமுக நாவலருடைய மருகரும், வித்துவசிரோமணியும், இலக்கிய இரசிக சிகாமணியுமான பொன்னம்பலபிள்ளை, தேன் ஒழுக ஒழுகப் புராணத்துக்குப் பயன்விரிக்கின்றார்; கம்பராமாயணத்திலிருந்து கனிகளை வாரிச் சொரிகின்றார்; மண்டபம் முழுதும் நெருங்கியிருந்த செவிகள் நுகர்கின்றன. ஊசிவிழுந்தால் கேட்கும்.

பொன்னம்பலபிள்ளை கோயில் வசந்த மண்டபத்திலிருப்பார். அங்கேயில்லையேல் தீர்த்தக்கரையிலே காணலாம்; வீட்டுத் திண்ணைகளிலே மாணவர்கள் மத்தியிலே இருப்பார். மரநிழல்களில் பள்ளி வைப்பார். ஊர்நடுவிலே உலாவித் திரிகின்ற பயன்தரும் மரம் அவர்.

திருமாலின் திருக்கரத்தில் இருக்கும் சங்குக்குப் 'பாஞ்சசந்யம்' என்று பெயர். அதனை ஆயிரம் வலம்புரி சூழ்ந்திருக்கும்; அந்த வலம்புரிகளை அளவில்லாத இடம்புரிகள் சூழ்த்திருக்கும் என்று வருணிப்பார்கள்.

பொன்னம்பலபிள்ளை ஒரு தேன் குடம். அதை இரசிகர்களாகிய எறும்புக்கூட்டங்கள் சதாசூழ்ந்து கொண்டேயிருக்கும். வித்துவான்கள், மாணாக்கர்கள் தொடர்ந்துகொண்டிருப்பார்கள். இந்த வைபவத்தில் பிரபுக்களும் பிறரும் தம்மை மறந்து கலந்துகொண்டிருப்பார்கள்; பொன்னம்பலபிள்

ளைக்குக் கடன் கொடுத்து வாங்குதற்கு வருகின்றவர்கள் அவரைக் கடன் கேட்காமலே, அவர் வழங்கும் கனிகளைச் செவிகளால் நுகர்ந்துகொண்டு திரும்பி விடுகின்றார்கள்; அவரை எவனும் துணிந்து கொடுத்த கடனைக் கேட்டதில்லை. அந்த இடத்தில் அவர் முன்னிலையில், அது—அந்தக் கடன்—ஒரு பொருள் அல்ல.

பொன்னம்பலபிள்ளையின் முன்னிலையில் கலைஞர்கள் வந்து வந்து குழுமுவார்கள்; ஏற்ற ஏற்ற முறையில் வரிசையறிந்து மதிப்புக் கொடுப்பார் பொன்னம்பலபிள்ளை. கொடுக்கும் மதிப்புப் பல் கலைக்கழகம் கொடுக்கும் மதிப்பிலும் மேலானது. பல கலைத்துறையிலும் அவர் முன்னிலையில் வித்தியா விநோதங்கள் நடைபெறும்.

வண்ணுண்டஞ் செட்டியார் என்றொருவர். வடதேசத்தவர்; பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரின் முன்னோர்; மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர். இருபது அந்தாதிக்குமேலே அவருக்கு மனப்பாடம். அந்த அந்தாதிகளுக்குள்ளே பல இயமக அந்தாதிகள். 'இயமகம்' என்றால் பாட்டின் அடிதோறும் முதலாம் எழுத்து முதல் பல எழுத்துக்கள் ஒன்றாயிருக்கும்; பொருள் வேறு வேறாயிருக்கும். 'தலைவிதிவசம்' என்று பாட்டுத் தொடங்கினால், நாலு வரியிலும் தொடக்கத்தில் நாலு 'தலைவிதிவசம்' வரும்; நாலு வேறு வகையாகப் பிரித்துப் பொருள் சொல்லவேண்டும்; பொருளுக்கேற்பச் சொற்களைப் பிரிப்பதிற் பெரிய பயிற்சி வேண்டும். இந்தச் செட்டியார் இதில் மகா சாமார்த்தியவான். அவர் சாதாரணமாகப் பேசும்

வார்த்தைகளே பல பொருள்பட்டுச் சிலேடையா யிருக்கும்.

இந்தச் சிலேடைச் செட்டியாருக்குப் பிற்காலத் திலே கண் பார்வையில்லை; கண்ணின் சக்தியும் அவருக்குச் செவியில் இருந்தது. இந்த வன்றொண் டர், நமசிவாயத் தம்பிரான், இராமசாமிப்பிள்ளை என்கின்ற மூவர்கள் முதன்முதல் திருவாவடுதுறை யிலே மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் படித்தவர்கள்; பிறகு சிதம்பரத்திலே நாவலரிடம் படித்தவர்கள். இந்த மூவரும் பிற்காலத்திலே வெகு பிரபலஸ்தர் கள். இராமசாமிப்பிள்ளை இராமநாதபுரம் இராசா வுக்குச் சமஸ்தான வித்துவானும் மந்திரியுமாயிருந்த வர். நமசிவாயத்தம்பிரான் ஆதீனத்தில் சின்னப் பட்டமாயிருந்தவர். வன்றொண்டர் பெரிய இரசிகர். பொன்னம்பலபிள்ளையைப்பற்றிக் கேள்விப்பட்டு நாவலரோடு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். வந்த முதன்முதல் பொன்னம்பலபிள்ளை இராமாயண வியாக்கியானம்செய்துகொண்டிருந்தபோது, இந்தக் குருட்டு வன்றொண்டர் மெல்ல மெல்ல இடம்பெயர்ந்து அவரைக் கட்டித் தழுவ முயற்சிசெய்தவர். இவர் ஒருநாள் பொன்னம்பலபிள்ளையிடம் வந்திருந்தார். எத்தனையோ திரிபு இயமக அந்தாதிகள் பாடினவ ரானஉடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரும் அங்கே வந் திருந்தார். வித்துவான்கள் வந்து மொய்த்துவிட்டார் கள். வன்றொண்டருக்கும் சிவசம்புப் புலவருக்கும் இடையில் சொற்போர் ஒன்றைத் தொடக்கிவிட் டார்கள். போர் மூண்டது. வன்றொண்டர் ஒரு அந்தாதிப் பாட்டைப் பதச் சேதஞ் செய்யாமல், அஃதாவது சொற்களைக் கருத்துக்கு இசையப் பிரி

யாமல் படிப்பார். சிவசம்புப் புலவர் சொற்களைக் கருத்துக்கு ஏற்கப் பிரித்துப் பயன் சொல்லுவார். பிறகு புலவர் சொற்களைப் பிரிக்காமல் படிக்கச், செட்டியார் பிரித்துப் பயன் சொல்லுவார். மிகக் கடினமான வேலை. நெருப்பு எழும்ப நடந்துகொண்டிருக்கிறது. வெற்றி தோல்வி சொல்லமுடியாமல் நடக்கின்றது. சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய பழமலை அந்தாதியிலே ஒரு பாட்டு:

**'மேருக் குவடு நிகர்தோட் பழமலை மேவுதிருத்**
**தேருக் குவடு வசமாடுமாடத் தெருவி னிற்போய்**
**நீருக் குவடு விழியெழின் மாய்ந்தெதிர் நின்றுநம**
**தூருக் குவடு விளைத்தனளே யின்றெழிவறவே'**

இந்தப் பாட்டை வன்றொண்டர் படித்தார். பழமலை என்று விருத்தாசலத்துக்குப் பெயர். விருத்தாசலத்திலுள்ள சிவபெருமானின் தேர்த் திருவிழாவுக்கு ஒரு தலைவி போய், அப்பெருமான் மேல் காதல்கொண்டு, இந்த ஊருக்குப் பெரிய வடுவை உண்டாக்கிவிட்டாள் என்பது பாட்டின் பொழிப்பு. சிவசம்புப் புலவர் பொழிப்பைச் சொல்லிவிட்டுச் சொற்களைப் பிரித்துப் பயன் சொல்லிவருகின்றார்.

**மேருக்குவடு நிகர்தோள்—மேரு மலைபோன்ற தோள்களையுடைய,**

**பழமலைமேவு திருத்தேருக்கு—பழமலையாகிய விருத்தாசல சுவாமியின் அழகிய தேர்த் திருவிழாவுக்கு,**

'வடுவசமாடு மாடத் தெருவினிற் போய்' என்பது அடுத்த தொடர்; எப்படிப் பிரிப்பது? புலவர் சற்றே தயங்கினார். வித்துவசபை ஏங்கியது. ஒரு கணத்தில் கண்டுபிடித்துவிட்டார் புலவர்.

(தேருக்கு+உவள்+துவசம்—தேருக்குவடுவசம்.)

தேருக்கு — தேர்த் திருவிழாவுக்கு,

உவள்—உந்தத் தலைவி,

துவசம் ஆடும் மாடத் தெருவினிற் போய்—கொடியாடுகின்ற மாடமுள்ள வீதியிலே போய்,

நீர் உக்கு—கண்ணீர்விட்டு,

விழி எழின் மாய்ந்து—கண்ணழகு கெட்டு,

நமது ஊருக்கு ஒழிவற வடு இன்றுவிளைத்தனள்—நமது ஊருக்கு நீங்காத வடுவை இன்றைய தினம் விளைத்தாள்.

*என்று உரையை நடத்தினர் சிவசம்புப் புலவர். அப்பொழுதுதான் யாழ்ப்பாண வித்துவான்களுக்கு உடலில் உயிர் வந்தது. வன்றொண்டர் சிவசம்புப் புலவரைக் கட்டித்தழுவினர். பொன்னம்பலபிள்ளை இருவரையும் புகழ்ந்து பாராட்டினர்.*

*எப்படியிருக்கிறது, சென்ற நூற்றாண்டுப் பொழுது போக்கு!*

# 12. யாழ்ப்பாணத்தில் இரு கவிராயர்கள்.

'அன்னநடை பிடியினடை அழகுநடை
அல்லவென அகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்ற தமிழ்ப் பாவையாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் நாவலன்றன் னழியாநல்
ஒழுக்கநடை வாழி வாழி'

இந்த உயிர் துடிக்கிற பாட்டு நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் பாடியது. பெண்களின் அழகிய நடையை அன்னநடை, பிடியினடை என்றெல்லாம் புலவர்கள் வருணித்துவந்தார்கள். தமிழ் மகளுக்கு அந்த நடையொன்றும் பிடிக்கவில்லை. அவள் அந்த நடைகளையெல்லாம் வெறுத்து அகற்றிவிட்டு, முதிர்ந்த புலவர்களிடம் போய், பதினெட்டாம் நூற்றாண்டு முடிந்து, பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கம்வரை செய்யுள் நடையையே உவந்து பயின்றுகொண்டிருந்தாள். செய்யுள் நடையிலே முழுகித் திளைத்துக்கொண்டிருந்த தமிழ் மகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆறுமுக நாவலர் கண்டு, 'ஓ, தமிழ் மகளே! இனி வழங்கும் நடை வசனநடை; அதுதான் உனக்கு ஏற்ற வன்னநடை' என்று புத்திமதி கூறித், தமது நல்லொழுக்க நடைபோன்ற, ஆற்றொழுக்கு நடையை, அந்தத் தமிழ் மகளுக்கு நன்கு பயிற்றி வைத்தார். அவள் பயின்ற வசன நடைக்கு ஆசான் அவர். அந்த உயிர்ப் பாடலின் கருத்து இது.

சின்னத்தம்பிப் புலவருக்குப் பிறகு, பதினெட்டாம் நூற்ருண்டுப் பிற்பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்ருண்டுத் தொடக்கத்திலும் யாழ்ப்பாணத்தின் இரு கண்ணேபோன்று, தமிழ் மகளுக்குச் சிறந்த செய்யுணடை பயிற்றி வைத்தவர்கள் இரு பெருங் கவிராயர்கள். ஒருவர் முத்துக்குமார கவிராசசேகரர்; மற்றவர் சேஞதிராய முதலியார். ஏறக்குறைய இருவரும் ஒரு காலத்தவர்கள்.

**நீடிய சீர்பெறு தாமோ தரமன்ன நீள்புவியில்**
**வாடிய சூழ்கள் மழைமுகங் கண்டென்ன மாண்புறநீ**
**பாடிய செய்யுளைப் பார்த்தின்ப வாரி படிந்தனன் யான்**
**கோடி புலவர்கள் கூடினும் நின்புகழ் கூறரிதே.**

இந்தப் பாடல் வேதநாயகம்பிள்ளையின் பாடல்; வேதநாயகம்பிள்ளை, டாக்டர் சுவாமிநாதையரின் குருவாகிய மகா வித்துவான் மீஞட்சிசுந்தரம்பிள்ளையால், பிரபந்தங்கள் செய்து புகழ்ந்து பாராட்டப் பட்டவர்; பிரபு; நிறைந்த கல்விமான்; பழுத்த புலவர். அவர், சி. வை. தாமோதரம்பிள்ளையைப் புகழ்ந்து பாடிய பாடல் மேற்காட்டிய பாடல். தமிழுக்கு உயிரும் பிரமாணமுமான தொல்காப்பிய இலக்கணத்தை, 'செல்துளைத்த துளையன்றி மெய்ப் புள்ளி வரவாத சென்ஞள் ஏட்டிருந்து'—அஃதாவது, கறையான் துளைத்த புள்ளிகளே மலிந்த ஏட்டுப் பிரதிகளிலிருந்து,—அச்சிட்டுப், புத்தகமாக்கித் தமிழுக்கு உயிர்தந்த பரமோபகாரி தாமோதரம் பிள்ளை. சென்னைச் சர்வகலாசாலை முதன் முதல் நடத்திய பீ. ஏ. (B. A.) பரீட்சையில் முதன் முதல் சித்தியெய்தியவர் தாமோதரம்பிள்ளை. அவர் ஒரு நீதிபதி. ஆங்கிலமயமாய்ப் போகவேண்டிய தாமோ

தரம்பிள்ளையைத் தமிழ்மயமாக்கித் தமிழ்த் தாதா ஆகச் செய்தவர் முத்துக்குமார கவிராசசேகரர்; தாமோதரம்பிள்ளையின் தமிழ்க் குரு.

சுன்னுகத்திலே மிகப் பிரசித்திபெற்று விளங்கிய வித்துவசிரோரத்தினம் ஆகிய குமாரசாமிப் புலவரவர்களுடைய தந்தையார் அம்பலவாணபிள்ளை. அவருடைய தந்தையார் சின்னத்தம்பிப்பிள்ளை. அவருடைய தமையனுர் முத்துக்குமார கவிராச சேகரர்.

சேனுதிராய முதலியார் இருபாலையிலே செல்வாக்குள்ள உயர் குடியிற் பிறந்தவர்; அக்கால அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்தவர்; ஆறுமுக நாவலருக்குத் தமிழ் ஆசிரியர்; பெரிய கவிராயர்.

சுன்னுகத்திலே முத்துக்குமார கவிராயர்; இருபாலையிலே சேனுதிராய கவிராயர். அவருக்கு மாவிட்டபுரத்துக் கந்தசுவாமி குலதெய்வம். இவருக்கு நல்லூர்க் கந்தசுவாமி குலதெய்வம். விசேட உற்சவங்களுக்கு இவர் அங்கே போவார். அவர் இங்கே வருவார். இருவரும் நண்பர்கள். கங்கையும் காவிரியும்போலே சந்திப்பார்கள். பிரபுக்கள், இரசிகர்கள், வித்துவான்கள் எல்லோரும் அந்த அருமந்த சங்கமத்தைத் தப்பாது கண்டு களிப்பார்கள்.

மாவிட்டபுரத்திலே திருவிழா; வேட்டைத் திருவிழா. கந்தசுவாமி தாவிப்பாய்கின்ற குதிரையில் பவனிவருகின்ருர். கவிராயர்கள் கண்டு மகிழ்கின்ருர்கள். கவிராயர்களைச் சூழ்ந்து களிக்கின்ருர்கள் புவிராயர்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே 'உமது சுவாமியின் பவனியை வர்ணித்துப் பாடும்' என்

இன்றூர் சேனுதிராய கவிராயர், முத்துக்குமார கவி ராச மேகம் பொழிகின்றது.

முடிவி லாதுறை சுன்னுகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவில் மீதுவந்
தடைய வோர் பெண்கொடி காமத் தாளசைந்
தானைக் கோட்டை வெளிகட்டுடை விட்டாள்
உடுவிலான் வரப் பன்னுலையான் மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்தில்
தடைவிடா தணை யென்றுப லாலிகண்
சாரவந்தனள் ஓரிள வாலையே

வித்துவான்கள் துள்ளிக் குதிக்கின்றூர்கள். மற்றவர்கள் யாழ்ப்பாணத்து ஊர்ப் பேர்களைக் கேட்டு மகிழ்கின்றூர்கள்; பொருள் விளங்கவில்லை. சேனுதிராய கவிராயர் விளக்குகின்றூர்.

சுன்னுகம் என்பதைச் சுல்+நாகம் என்று பிரிக்கலாம். சுல்—வெள்ளி. நாகம்—மலை. சுன்னுகம்—வெள்ளிமலை, 'வழி'யென்றூல் பிள்ளை. முடிவிலாதுறை சுன்னுகத்தான் வழி—ஆதியும் அந்தமுமில்லாத வெள்ளி மலையாகிய கைலாசத்தில் இருக்கின்ற சிவபெருமானுடைய பிள்ளையாகிய கந்தசுவாமி, முந்தித் தாவு அடிக் கொக்குவில் மீது வந்து அடைய,—(கொக்கு என்றூல் குதிரை, முந்தித் தாவுகின்ற (அடி—கால்) கால்களையுடைய குதிரை வாகனத்தில் பவனிவர, ஓர் பெண்கொடி காமத்தாள்—ஒரு பெண்கொடி, (தலைவி) காதல் கொண்டவளாய், அசைந்து ஆனைக்கோட்டை வெளிகட்டு உடைவிட்டாள்—தன் நிலைகுலைந்து, மார்பில் கட்டிய வஸ்திரத்தையும் நெகிழவிட்டாள், உடுவிலான் வர—அந்தச்சமயத்திலே, (உடு—நட்சத்திரம். இல்—மனைவி) நட்சத்திரத்தை மனைவியாகக் கொண்ட சந்திரன் உதயம் ஆனுன். பன்னுலையான்

மிக உருத்தனன் — (பன் ஆலை--கரும்பு) கரும்பு வில்லை யுடைய மன்மதன் கோபித்தான். ஓர் இளவாலை— அந்த ஒப்பற்ற இளம் பெண்; கந்தசுவாமியைக் காதலித்தவள். கடம்பு உற்ற மல் ஆகத்தில் — கடம் பணிந்த மல்யுத்தம் செய்கின்ற மார்போடு; நடை விடாது அணையென்று—இடையீடு இன்றி அணைத்த ருளவேண்டுமென்று; பல ஆலி—பல நீர்த்துளி; கண் சார வந்தனள்—கண்ணினின்றும் சொரிய, கந்த சுவாமிக்கு எதிரே, திருவடியே சரணமென்று, வீதி யிலே பவனியை எதிர்கொண்டாள். இது பாட்டின் உரை விளக்கம். 'ஆதியுமந்தமுமில்லா' என்ற திருவா சகத்தேன், முடிவிலாதுறை என்ற இந்தப் பாட் டில் சொட்டியது. இரசிகர்கள் என்ற வண்டுகளின் வெறி தலைக்கு மீறியது.

அந்தக் காலத்திலே கும்பமாசத்திலேதான் நல் லூர்க் கொடியேற்றம். கும்பமாசம் மாசிமாதம். அவர் இங்கே வருகிறார். இரு கவிராயர்களும் நல்லூரிலே சந்திக்கிறார்கள். இரசிகர்களாகிய மதுகரங்கள் கவிராயர்களாகிய இரட்டை மலர்களைச் சூழுகின் றன. கொடியேறுகின்றது. 'உமது சுவாமியைப் பாடும்' என்கின்றார் முத்துக்குமார கவிராயர். சேனாதிராய கவிராயர் பொழிகின்றார்:

'திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
இருபாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ரம்மானை
இருபாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க அம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்க அம்மானை

முத்துக்குமார கவிராயர் விளக்குகின்றார்:

'திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேற் பெருமா னார் இருபாலையிலே குயத்தியரோடு சம்பந்தம்

வைத்திருக்கிறார். அப்படியானால் 'சட்டி குடம் சாறு வைக்கத்தருவாரோ' என்று கேட்கலாம் குயவ சம்பந்தம் வைத்தவர் சட்டி குடம் சாறுவைக்கத்தரத் தானே வேண்டும்! 'தருவார்' என்றுங் கருத்துத் தோன்றலாம். அது வெளிக்கருத்து. அது கிடக்கட்டும்.

குயத்தியர் பெண்கள். இருபாலைக் குயத்தியர் இரண்டு இளம் பெண்கள்-வள்ளி, தெய்வநாயகிகள்; திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார், இருபாலைக் குயத்தியரோடு இன்பமுற்றார் அம்மானை. அது உண்மைதானே! இருபாலைக் குயத்தியரோடின்பமுற்றார் ஆமாயின், தருவாரோ சட்டி குடஞ் சாறுவைக்க அம்மானை. குடம்—கும்பமாதம், மாசிமாதம். சட்டி என்பது ஒரு திதி. சாறு—திருவிழா. கும்பமாதத்திலே சட்டித் திதியிலே திருவிழாத் தொடங்க (கொடியேற்றம்செய்ய) தருவார் காண் சட்டிகுடம் சாறு வைக்க அம்மானை —கிருபாநிதியாகிய கந்தசுவாமி அனுக்கிரகிப்பார். இது உரை விளக்கம்.

இந்த இரு கவிராயர்களிலும் எவர் உயர்ந்தவர் என்று சொல்லமுடியுமா? 'இவருக்கு அவர்; அவருக்கு இவர்' என்றுதான் சொல்லலாம். இருவரும் யாழ்ப்பாணத்தின் இரு கண்கள்.

---

# 13. கவிஞர்கள்.

கவிதைகள் புத்தக உருவத்திலும் பத்திரிகைகளிலும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன; கவிதை விமர்சனங்களும் நடக்கின்றன. மேலைத் தேசத்திலே ஒருவர் ஒன்றுசெய்தால் அதற்கு நூறு விமர்சனம் வந்துவிடுமென்றும், இங்கே அவ்வளவு தூரம் அந்தத் துறை விரியவில்லையென்றும் ஒரு விமர்சகர் அழுகின்றார்; பாவம்! அவர் இனிக் கண்ணீர் வடிக்கவேண்டாம். தினசரிப் பத்திரிகைகளிற் கூட ஒரு பகுதி, கவிதை விமர்சனத்துக்கென்றே ஒதுக்கப்படுகின்றது. விமர்சனம் இதோ பெருகி விடும். பயம் வேண்டாம். ஆனால் உண்மைக் கவிதை ஏனைய வரிசையிலிருந்து உயிர் தப்புமோ என்று தான் அச்சம் வருகின்றது. கவிதைப் பெருக்கும் விமர்சனப் போக்கும் மாற்றுயர்ந்த பொன்னையும் காக்காய்ப் பொன்னையும் ஒன்றுசெய்து விடுமோ என்றுதான் எச்சரிக்கை எடுக்கவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

> "கவிகள், அஃதாவது கவிஞர்கள் உண்மையைச் சிந்தித்துக்கொண்டு சொல்வதில்லை; உண்மைக்கும் அவர்களுக்கும் வெகு தூரம். ஆனால் உண்மைபோலச் சொல்லிவிடுவார்கள். அவர்களால் நாட்டுக்குப் பெருந் தீமை உண்டாகிறது. அவர்களை அரசாங்கம் நாடுகடத்த வேண்டும்"

என்று ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னமே, கிரேக்க தேசத்துப் பேரறிஞரான 'பிளேற்றோ' ஒரு பெரிய எச்சரிக்கை செய்திருக்கிறார். பிளேற்

ரேவின் எச்சரிக்கை நவீன விமர்சகர் சிலருக்குப் பெரிய தலையிடியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது.

விமர்சகர்கள் பேரறிஞரான பிளேற்றோவைத் திட்டி வீண்பழி சுமக்காமல் கவிதையையும் கவிஞர் களையும் வரிசைசெய்து, தராதரங்கள் ஆராய்ந்து பிளேற்றோ வெறுக்குங் கவிகளைக் கண்டுபிடிப்ப தில் தமது விமர்சனத் துறையை விரிப்பது நன்று என்று தோன்றுகிறது.

தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர் "நாம் எண்ணுகின்ற கேட்கின்ற கருத்துக்களை அப்படியே கொள்ளாமல், அக்கருத்துக்களை முதலில் ஐயுற்றுப் பின் ஆராய்ந்து தெளிந்து, மெய்யான மூலக் கருத்தை அறியவேண்டும்" என்று உண்மைக் கருத்தைக் காண்பதற்கு ஒரு சட்டம் வகுத்திருக்கிறார்.

'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு'

'ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து'

என்பன உண்மையைக்காண வகுத்த வழிகள்.

ஒரு வீரன் தயைகாட்டாமல் பகையைக் கொன்று குவிக்கலாம். அது பேராண்மை. ஆனல் பகைவனுக்கு நினையாப்பிரகாரம் ஒரு இடையூறு நேர்ந்தால்; உடனே அந்த வீரன் தன் பகைவனுக்கு உபகாரியாய் மாறவேண்டும் அது பேராண்மையாகிய வீரத்தின் சிகரமாயிருக்கும்.

'பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு'

உபகாரியாய் மாறுதல், 'பேராண்மை' என்ற வாளின் கூராயிருக்கும் என்றும் சொல்லலாம். வீரத்தைப்பற்றிய இந்த உண்மை திருவள்ளுவ நாயனாரின் தெய்வப் புலமையிற் கண்டது. இப்படியான அநேக உண்மைகள், இமாசலத்திலே மருந்துப் பூண்டுகள் பரவியிருப்பதுபோலத், திருக்குறளாகிய பாற் சமுத்திரத்தில் அங்கும் இங்கும் பரவிக்கிடக்கின்றன. அது அது கைவந்தவர்கள்—அதில் அதில் ஈடுபட்டுள்ளவர்கள்—அதை அதைத் தம் வல்லமைக்கேற்பப் பயன்படுத்திக்கொள்ளுகின்றார்கள்.

கம்பர் வள்ளுவர் கண்ட வீரசிகரமான அமிர்த தாரையில் ஈடுபாடுற்று, அந்த வீரதீர அமிர்த தாரையை ஒரு சற்பாத்திரத்தில் ஏந்தி எடுத்து, வெகு பக்குவம்செய்து, அந்த உண்மையை ஒரு அமிர்த சஞ்சீவியாக்கி இந்த உலகுக்கு வழங்கியிருக்கிறார். அந்த அமிர்த சஞ்சீவிதான் பின் வரும் பாட்டு :

**ஆளையாவுனக் கமைந்தன மாருத மறைந்த**
**பூளையாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு**
**நாளைவாவென நல்கினன் நாகிளங் கமுகில்**
**வாளைதாவுறு கோசல நாடுடை வள்ளல்.**

தன்மனை வாழ்வுக்குக் கேடுசூழ்ந்த மகாதுரோகியும் பராக்கிரமசாலியுமான இராவணன் நிராயுத பாணியாய், இருபது கைகளுந் தொங்க, பத்துத் தலைகளுங் குனிந்து நாணி எதிரில் நிற்கின்றான். அவனைக் கொன்று குவிக்க நல்ல சமயம். ஸ்ரீராமன் வீரத்துக்கு மறுச் செய்யவில்லை. உடனே உபகாரியாய்மாறி, "இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா"

என்று அவனுக்கு உயிர்ப்பிச்சை வழங்கி, வீரசிகரத்தில் வள்ளலாய் விளங்குகின்றான். வள்ளுவர் கண்ட உண்மையைச் சற்பாத்திரமாகிய ஸ்ரீராமனில் வைத்துப் புனைந்து சொல்வது, தகும் தகும் என்று ஒப்புக் கொள்கின்றது புலமை உலகம். அதனாலே கம்பர் சாதாரண கவி வர்க்கத்தைச் சேராமல் கவிச் சக்கரவர்த்தியாகின்றார். கம்பர் தாமே ஒரு உண்மையைக் காணாமலிருக்கலாம். ஆனால், வள்ளுவர் போன்ற மகான்கள் கண்ட உண்மையை வியந்து பயன்படுத்தி யிருக்கிறார். பயன்செய்த பெருமை கம்பருக்குண்டு.

மூலிகைகளைக் கண்ட சித்தர்கள் பெரியவர்கள். அம்மூலிகைகளின் அருமை அறிந்து பயன்படுத்துகின்ற சித்த வைத்தியர்கள் அடுத்தபடியில் வைத்துப்பெரியவர்கள்.

அவ்வாறே, திருவள்ளுவரும், சங்கத்துச் சான்றோர்களான புலவர்களும் பெரிய உண்மைகளைக் கண்ட மிகப்பெரியவர்கள். அவ்வுண்மைகளில் ஒரோவொன்றைப் பயன்படுத்துகின்ற கவிச் சக்கரவர்த்திகள் அடுத்தபடியில் வைத்துப் பெரியவர்கள்.

புலவர்களுக்கு அடுக்கக் கவிச் சக்கரவர்த்திகள். அவர்களுக்கடுக்கச் சாதாரண கவிஞர்கள் இருக்கின்றார்கள். வள்ளுவர் கண்ட உண்மையைக் கம்பர் கண்டு வியந்து புனைந்தார். அப்படி ஆற்றல் சாதாரண கவிஞர்களுக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால், தமது அறிவின் எல்லைக்குள் அகப்பட்ட சாதாரண கருத்துக்களை இயற்கை அழகுகளை சனங்களை வசீகரிக்கத்தக்க வகையில் சொல்லுகிற ஒரு சாமர்த்தியம் இவர்களுக்கு இயல்பாகவேயுண்டு.

மஞ்சள் குளித்து முகமினுக்கி நல்ல
மாயப் பொடிபூசி நிற்குநிலை
கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ
கண்ணீர் உகுக்குமோ ஆர் அறிவார்.

இது ஒரு கவிஞரின் கற்பனை சாமர்த்தியம். சூரியகாந்திப் புஷ்பம் முகம் மலர்து மஞ்சள் மகரந்தம் தோய்ந்து, சூரியன் செல்லுந்திக்கை நோக்கித் தவம் கிடக்கின்றது. இந்தக் கள்ளத் தவத்தைச் சூரியனின் உண்மைக் காதலியாகிய கமலமலர் கண்டாலோ! சிரிக்குமோ! அழுமோ!

வண்ணானின் மொழி கேட்டு வனம்விடுத்த சீதைதனை
இந்நாளுந் தேடுதல்போல் இருங்குரங்கு நெருங்கிடுமே

இது மற்றொரு கற்பனை. அழகிகள் காட்டுவழிகளிற் சென்றால், அங்குள்ள குரங்குகள் நெருங்கி எட்டிப் பார்க்கின்றன. வண்ணானொருவனின் வார்த்தையை நம்பி, இந்த இராமன் சீதையைக் காடுகாட்டின கொடூரம், இன்னும் குரங்குச் சந்ததிகளை வருத்திக்கொண்டிருக்கிறது போலும்.

பள்ளு நாடகங்கள், குறவஞ்சிகள் எத்தனையோ வகையான நாட்டுப் பாடல்கள், பரணிகள் என்றிவைகள் சாதாரண கவிஞர்களின் கவிதா சாமர்த்தியங்கள். இவைகள் பெரிய இலட்சிய உண்மைகளைக்-குறிக்கோள்களைச்— சாதிக்காவிட்டாலும், மனிதனுக்கு ஒருவகைக் களிப்பை ஊட்டி, நல்ல அமைதியைப் பண்பாட்டை வருவிக்கின்றன. அன்றி, அவனைப் பெரிய உண்மைகளைக் கொள்ளுதற்கேற்ற கொள்கலமும் ஆக்குகின்றன. சாதாரண கவிஞர்கள், மூற்றத்தை அழகு செய்கின்ற

பூந்தோட்டம் போன்றவர்கள். இவர்களும் ஒரு நாட்டின் அழகுச் செல்வங்களே.

கவிஞர்கள்; அவர்களுக்கு மேலே கவிச் சக்கரவர்த்திகள்; அவர்களுக்குமேலே சான்றோர்களான புலவர்கள். இவர்களைப் பிளேற்றோ நிந்திக்கவும் இல்லை; நாடுகடத்தவும் இல்லை. பிளேற்றோ சீறிப்பாய்கின்ற கவிஞர்கள், மேலே காட்டப்பட்ட முத்திறத்தவர்களும் அல்லாதவர்கள். அவர்கள் கவிதை வெறியர்கள். பாடாமலிருக்க மாட்டாதவர்கள். பாடுகிற பைத்தியம் உள்ளவர்கள். பாவம்! அவர்கள் நன்றாகப்பாடலாம். அவர்களை யாருந் தடைசெய்யமாட்டார்கள். அவர்களுக்குச் சனநாயக உலகத்தில் பெரிய செல்வாக்கும் இருக்கின்றது. அவர்கள் ஓயாமற் பாடலாம். ஆனால், அவர்கள் தயைசெய்து தம் அறிவின் எல்லையுள் அடங்கி நின்று பாடவேண்டும். ஒரு பட்சியைப் பாடலாம். மரஞ் செடிகளைப் பாடலாம். காலை மாலைகளை வர்ணிக்கலாம். கடற்கரை குளக்கரை மற்றும் சோலைகள் குளங்கள் யாவற்றையும் அவர்கள் சொந்தம் ஆக்கிகொள்ளலாம். பிளேற்றோ தடுக்கமாட்டார். ஆனால், கவிதை வெறியர்கள் அவ்வளவில் அடங்குவார்களா? தங்கள் தலைக்கு அப்பாற்பட்ட விஷயம், தங்களுக்குள் அடங்கின விஷயம் என்ற பேதம் கவிதை வெறியர்களுக்கு இல்லை. அவர்களுக்கு எல்லாம் அபேதமே. கடவுள், வண்ணாத்திப்பூச்சி, காதல், சமயம், தத்துவம், அரசியல் எல்லாம் அவர்கள் பாடிவிடுவார்கள். பாமரசனங்கள் கூடுமிடம் அவர்களின் கவியரங்கமாயிருக்கும். சனநாயக அரசியலின் வேரை அசைத்து விடுவார்கள். அது தான் பிளேற்றோவுக்குக் கோபம். ஒரு பொறுப்

புள்ள சிறு உத்தியோகத்தைக் கூட ஒரு நிமிஷ நேரம் வகிக்கமுடியாத கவிதை வெறியர்கள், அர சாங்கத்துக்குப் புத்தி பாடுகிறார்களே, அவர்களை நாடுகடத்தாமல் வேறென்ன செய்வது!' என்கிறார் பிளேற்றோ. பிளேற்றோவில் என்ன குற்றம்!

இன்னும் ஒருபகுதியார் பாட்டுப் பாடுகிறவர் கள் இருக்கிறார்கள். அவர்கள் கடிய கொடிய வித் துவான்கள். அவர்களுடைய கருத்துக்களைப் பிளேற் றோ மதிக்கலாம். ஆனால் கருத்துப் புலப்படுவதில்லை. சிறிது நாட்பட்டால் பாடிய அவர்களுக்கே கருத் துக் கலங்கிப் போகின்றது. இப்படிப்பட்ட பாடல் களை அச்சிட்டுப் பரப்பாமல் விடுவது புண்ணியம். வித்துவான்கள் தங்கள் கருத்துக்களை வசன நடை யில் சொல்லிவிடலாமே என்று கவிதா சாமர்த்தியம் வாய்ந்தவரான மகாலிங்கசிவம் அடிக்கடி சொல் வது உண்டு. கவித்துவம் அற்ற கவிதைகளைக் காணக் கேட்க அவரால் முடிவதில்லை; கூசுவார்.

இப்பொழுது வித்துவத் திறமை கவித்துவம் இரண்டும் சூனியமான மற்றொரு பகுதியாரும் பாட முயற்சிக்கின்றார்கள். அவர்களுக்குப் பணப்பஞ் சத்திலும் சொற்பஞ்சம் மகாமோசம்.

பச்சைக் குழந்தைகளின் செவியையும் நாவை யும், அந்தச் சொற்பஞ்சப் பாடல்கள்—ஓசைகெட்ட பாடல்கள் கெடுத்தே விடும். சொல்லும் சொல்லும் பொருந்தும் பொருத்துப், பாலும் பாலும் பொருந் தும் பொருத்தாயிருக்கவேண்டும். ஓசையைப் பாட் டிற் கட்டக்கூடாது. பாட்டிலிருந்து ஓசை வரவேண்

டும். "இசைந்த ஏறுங் கரியுரிபோர்வையும்" என்ற திருப்புகழைப் படித்துப்பார்க்க மேற்காட்டியஇரண்டும் புலனாகும். இரண்டுங் கெட்டபாடல்களைப் பாடாமலிருக்க வேண்டுமென்று அரசாங்கம் கடுஞ் சட்டம் விதிக்கவேண்டும்.

ஆறு பகுதியான பாட்டுக்காரர்கள் இக்கட்டுரையிற் பேசப்பட்டிருக்கின்றார்கள். ஆறாவது பகுதியினர் வெகு மோசமானவர்கள். ஐந்தாவது பகுதியினர் கவித்துவம் இல்லாதவர்கள். நாலாவது பகுதினர் மகாகவித்துவ சாமர்த்தியம் உள்ளவர்கள். ஆனால், நாட்டில் வைத்துக்கொள்ள முடியாதவர்கள். மற்றையவர்கள் படிப்படியே உயர்ந்தவர்கள். சங்கத்துச் சான்றோர்கள் 'பொய்யடிமையில்லாத புலவர்கள்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் பாராட்டப்பட்டிருக்கின்றார்கள்.

# 14. வாழ்க்கையின் மூன்று படிகள்

திருவள்ளுவ நாயனாரை ஒருவர் தினந்தோறும் சென்று வழிபட்டு வந்தார்.

நாயனார் ஒருநாள் அவரைப்பார்த்து என்ன வேண்டுமென்று கேட்டார்.

அவர், "சுவாமி! நான் இந்த உலகத்திலே சகல பாக்கியங்களும் பெற்று நல்வாழ்வு வாழவேண்டும். அதுதான் என்னுடைய பெரிய விருப்பம். அதற்குரிய உபாயத்தை அனுக்கிரகிக்கவேண்டும்" என்று வேண்டினார்.

திருவள்ளுவர், "நீ சுயநலமுள்ளவனாயிரு. உனக்குச் சகல பாக்கியங்களும் சித்திக்கும்" என்றார். அந்த மனிதர் அதைக் கேட்டுக்கொண்டே வீட்டுக்குப்போனார்; சிந்திக்கத் தொடங்கினார். அவருக்கு அந்த உபதேசம் விளங்கவில்லை. அதில் அவருக்குத் திருப்தி பிறக்கவில்லை. பெரியவர்களெல்லாம் 'சுயநலம் கூடவே கூடாது' என்று போதிக்கிறார்கள். 'இவன் ஒரு சுயநலக்காரன்' என்றால் மகா கெட்டவன் என்று சனங்கள் பேசுகின்றார்கள். இப்படியிருக்க நாயனாரோ 'நீ சுயநலமுள்ளவனாயிரு' என்கின்றாரே, என்று மன வேதனைப்பட்டுக்கொண்டு, மறுபடியும் அந்தமனிதர் நாயனாரை அணுகி "சுவாமி, சுயநலத்தை உலகம் பழிக்கின்றது. உங்கள் நூலை வானளாவப் புகழுகின்றது. தங்கள் நூலில் எங்கேயாவது சுயநலத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறீர்களா? அதனை விளங்க வைக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்"

ஒருவன் 'தன்னைத்தான் காதலன்' ஆயிருக்க வேண்டும். தன்னிலேதான் பற்றுள்ளவனுயிருக்க வேண்டும். அஃதாவது சுயநலமுள்ளவனு யிருக்க வேண்டும். சுயநலமாவது தன் கருமத்திற் கண்ணுங் கருத்துமாயிருத்தல். 'தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்.'—எவன் தன்கருமத்திற் கண்ணுங் கருத்துமாயிருக்கின்ருனே, அவனே தவம் செய்பவன்; தவத்தி. 'மற்றல்லார் அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.'—தன் கருமம் செய்யாது, சுயநலமின்றிப் பிற கருமம் செய்கிறவர்கள் எல்லாம் அவஞ்செய்கிறவர்கள்; மகா ஆசைக்காரர்கள்.

'தன்னைத்தான் காதலன்' சுயநலக்காரன். அவன் உண்மையிலே சுயநலக்காரன். ஆனல்'எனைத் தொன்றும் துன்னற்க தீவினைப்பால்'—எத்துணைச் சிறியதொரு தீமையையும் பிறருக்குச் செய்யமாட்டான். பிறருக்கு ஒருவன் தீமை செய்தால் அது தனக்கு நட்டம். பிறருக்கு ஒருவன் நன்மை செய்வது தனது நயத்துக்காகவே. அயல் வீட்டுப் பிள்ளைக்கு ஒருபிடி அன்னம் கொடுத்தால், தன்பிள்ளைக்கு ஒருபிடி தசை வளருமென்று காரியந்தெரிந்த நல்ல தாய் சொல்லுவாள்.

ஆபிரகாம் லிங்கன் ஒருகடையில் கூலிக்கு வியாபாரம் செய்கின்ருன். நடுராத்திரி. திருவிழாவிலிருந்து பல கிராமத்துச் சனங்களும் தத்தம் கிராமத்துக்குப் போகின்ருர்கள். ஒரு குடுகுடு கிழவியும் திருவிழாப் பார்த்துவிட்டுத் தன் கிராமத்துக்குப் போகின்ருள். ஆபிரகாம் லிங்கன் கடையிற் கதவு அடைத்துவிட்டான். உள்ளே விளக்கு எரிகிறது. நித்திரை தூங்கிக்கொண்டிருக்கிருன். கிழவி கதவைத் தட்டித் தேயிலை கேட்கிருள். ஒரு துவார

வழியால் காசை நீட்டுகிறாள். நித்திரைத் தூக்கத்தோடு காசை வாங்கி வைத்துவிட்டுத் தேயிலை நிறுத்துக்கொடுக்கிறான் ஆபிரகாம்லிங்கன். பிறகுபடுத்து நித்திரையாகிறான். விடிந்து எழுந்து, கடையை ஒழுங்கு செய்கிறான். கிழவி கொடுத்த பணம் ஒரு இடத்திலிருக்கிறது. அது ஒரு இறாத்தல் தேயிலையின் விலை. ஆனால் தராசுத்தட்டில் அரை இறாத்தல் படி இருக்கிறது. ஆபிரகாம் லிங்கன் திகைத்தான். "ஐயோ பாவம்! கிழவியிடம் ஒரு இறாத்தலுக்குப் பணம் பற்றிக்கொண்டு, அரை இறாத்தலல்லவா நித்திரைத் தூக்கத்தில் நிறுத்துக்கொடுத்துவிட்டேன்" என்று ஏங்கினான். உடனே அரை இறாத்தல் தேயிலை நிறுத்தெடுத்தான். வெளியிற் கிளம்பினான். "இராத்திரியிலே தேயிலை வாங்கின கிழவி யார்" என்று கேட்டுக் கேட்டுக் கிராமம் கிராமமாக ஓடினான். கிழவியைக் கண்டுபிடித்து விட்டான். அமிர்தத்தைக் கண்ட தேவர்களுக்கு வந்த சந்தோஷம் அவன் சந்தோஷம். கிழவியிடம் கொடுத்து மன்னிப்புக் கேட்டான் ஆபிரகாம் லிங்கன். கிழவி தெய்வத்தை நோக்கிக் கண்ணீர் பொழிந்து, ஆசீர்வதித்தாள். அந்தக் கிழவியின் கண் காணவே "தன்னைத்தான் காதலன்" ஆன ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க பிரசாதிபதியானான்.

திருவள்ளுவ நாயனரிடம் சுயநல உபதேசம் பெற்ற அந்தமனிதர் ஆபிரகாம் லிங்கன் போலவே பிறருக்குத் தீமை வராமல் வாழ்க்கை நடாத்திப் பெரிய அந்தஸ்தை அடைந்தார். அவருக்கு வயசும் அறுபதை அடுத்தது. அவர் ஒருநாள் திருவள்ளுவரிடம் போய் மற்றொரு கேள்வி கேட்டார், "சுவாமி, நான் பிறருக்குத் தீமைசெய்யாமலிருந்து, சகல பாக்

கியங்களையும் தங்கள் அருளால் அனுபவிக்கின்றேன். இப்படியே மறுமையிலும் அனுபவிக்கிறதற்கு வழி உண்டா? அநுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார் அந்த மனிதர்.

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்"

"அற்றார் அழி பசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

செல்வம் ஓரிடத்திலே தங்காது. "செல்வம்" என்றுதான் சதா சொல்லிக்கொண்டிருக்கும். அப்படிப்பட்ட செல்வத்தை ஒருவன் பெற்றால், அவசரம் அவசரமாக அது புறப்படுமுன்னமே நிலையான காரியங்களைச் செய்துவைத்து விடவேண்டும். இது முதற் குறளின் கருத்து.

"மானங் குலம் கல்வி முதலிய பத்தையும் அழிக்கிற பண்டம் பசி. அப்படிப்பட்ட பசியைப் போக்கி வறியவர்களுடைய எரிகிற வயிற்றுக்குள்ளே நமது சம்பாத்தியத்தைக் கொட்டி விட்டால், அது யாகாக்கினியிலே அவி சொரிந்ததற்குச் சமமாயிருக்கும். வறியவர்களின் வயிறுதான் நலல சேமநிதி வங்கி. அதிலே பொருளைப் போட்டு வைத்தால் அது இம்மையிலும் மறுமையிலும் வந்து உதவும். இது மற்றக் குறளின் கருத்து.

அந்தமனிதர் இந்த இரு குறளுபதேசத்தையுங் கேட்டுக் கொண்டு வீட்டுக்குப் போகின்றார். போகிற வழியிலே ஒரு பாகவதர் கதைபண்ணிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது அவர் சொன்னகதை இது:

"ஒரு ஈயாப்பத்தன் இருந்தான். அவன் எச்சிற் கையாலேகாகந் துரத்தாதவன். அவன் வீட்டில்

எறும்பு ஊருவதில்லை. அங்கே எறும்பு எடுக்கத்தக்க படி அவன் பொருளை வைத்திருப்பதில்லை. கண்ணை இமை காப்பதுபோலே அவன் பொருளிலே கவனம். அப்படிப்பட்ட அந்த உலோபிக்கு மரணகாலம் வந்துவிட்டது. தானங் கொடுக்கிறார்கள். தானத்துக்குப் பசுவேண்டும். உள்ள பசுக்களுக்குள்ளே ஒரு வயசுபோன பசுவைக் கொடுக்கும்படி அந்த உலோபி வெகு கஷ்டப்பட்டு அந்த மரணநேரத்தில் உத்தரவிட்டான். அது நடக்கமாட்டாத கிழட்டுப் பசு. பிராமணன் தானத்தில் கொடுப்பதை மறுக்கக்கூடாது. என்ன செய்வது, ஏற்றுக்கொண்டான். அதை மெள்ள மெள்ளத் தள்ளிக்கொண்டு வெளியே புறப்பட மூன்றேமுக்கால் நாழிகை கழிந்தது. பிராமணனுக்கு வெகு சிரமம். அவ்வளவில் பசுவும் செத்துப்போனது. அடுத்து உலோபியும் செத்துப்போனான். யமகணங்களுக்கும் தேவகணங்களுக்கும் போர்மூண்டது. தேவகணங்கள் உலோபியைப் பறித்துக் கொண்டு போய்ச் சுவர்க்க உலகத்திலே கற்பதரு நிழலிலே இருத்தினார்கள். உலோபிக்கு இது வெகு ஆச்சரியமாயிருந்தது. விசாரித்தான். 'உன்னுடைய கிழவிப்பசு மூன்றே முக்கால் நாழிகை பிராமணன்வசம் இருந்தது. அவ்வளவும் நீ சுவர்க்க அதிபதி. அப்பால் சதாகாலம் நரகத்துக்குச் சக்கரவர்த்தி' என்றார்கள். உலோபி அப்படியா காரியம் என்று அறிந்து கொண்டு, உடனே அங்கேயுள்ள பிராமணர்களை அழைத்து, அங்குள்ள காமதேனுக்களையுங் கன்றுகளையுந் தானம் செய்துவிட்டான். மூன்றேமுக்கால் நாழிகைக்கிடையிற் செய்து முடித்து விட்டான். பிறகு யமகணங்கள் அங்கே வந்து அவனை

எட்டிப்பார்த்து வெட்கிப்போனார்கள். அவன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். அவன் சுவர்க்கத்துக்கு இந்திரனாய்விட்டான். நிலையாத செல்வத்திலே நிலைத்த செல்வத்தைப் பெற்றுவிட்டான். இனியும் அவன் புண்ணியமே செய்வான்.''

இது கதாப்பிரசங்கி சொன்ன கதை. திருவள்ளுவரின் மாணவருக்கு அந்த இரண்டு குறளுக்கும் பொருத்தமான கதையாயிருந்தது அந்தக் கதை. அவர் பெரிய புண்ணியங்களைச் செய்யத்தொடங்கினார்; செய்தார்.

முன் பிறருக்குத் தீமை வராமல் வாழ்க்கை நடத்தினவர், இப்பொழுது மற்றவர்களுக்கு நன்மையுஞ் செய்யத் தொடங்கி விட்டார், இம்மையிலே போல மறுமையிலும் நல்வாழ்வு வாழ்தற்காக.

இப்படிச் சில காலம் சென்றது. அந்த மனிதருடைய மனத்திலே மீண்டும் சில பெரிய சந்தேகங்கள் தலைதூக்கின. வழக்கம் போல் அவர் திருவள்ளுவரிடம் போனார்.

அப்பொழுது திருவள்ளுவர் அந்த மனிதரைப் பார்த்துச் சொல்லுகிறார்:

“ஒருவன் தன் நன்மைக்காகப் பிறருக்குத்தீமை செய்யாமலிருப்பான்; தன் நன்மைக்காகப் பிறருக்கு நன்மைகூடச்செய்வான். ஆனால், தான் இரங்கிய ஒரு ஏழை திடீரென்று பணக்காரனாய் நல்வாழ்வு வாழ அதைப்பார்த்துச் சகிக்கமாட்டான். எரிச்சல் வந்துவிடும். அதற்கு வஞ்சகம் என்றும் பெயர். அது மனசுக்கு ஒரு மறு; மாசு. அந்த எரிச்சலாகிய மாசு போக்கப்பட வேண்டும். பிறருக்கு நன்மை செய்வது மாத்திரம் போதாது'' என்றார்.

மணிமேகலையில் ஒரு ஆபுத்திரன் வருகின்றான். அவனிடம் ஒரு அமுதசுரபியிருந்தது. அதில் உணவுப் பண்டங்கள் பெருகிக்கொண்டிருக்கும். உணவுகளை உயிர்களுக்கு வழங்கி மகிழுவான். ஒரு காலத்தில் மழைபெய்து நாடு செழித்துச் செல்வம் பெருகியதால், ஒருவரும் அவனுடைய கொடையை விரும்பவில்லை. அவனுக்குப் பெரிய துக்கம் வந்துவிட்டது. செல்வம் பெருகி உயிர்கள் நல்வாழ்வு வாழ்வதை அவன் மகிழவில்லை.

நாம் நம் நல்வாழ்வுக்காகப் பிறர்க்குத் தீமைசெய்யாதிருப்போம்; பிறர்க்கு நன்மைகூடச் செய்வோம். அதுவேறு. எல்லாரும் வாழவேண்டும் என்று எண்ணுவதும் பிறர் நல்வாழ்க்கையை மகிழ்வதும் வேறு.

எல்லாரும் வாழவேண்டும்; 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்கின்ற நிலை எளிதில் கைகூடுவது அன்று. பிறர் நன்றாயிருப்பதை நம் மனம் சகியாது எரிந்து கொண்டேயிருக்கும். ஒரு கோடி பிறப்பில் செய்யும் முயற்சிகூட மன எரிச்சலை—மாசை—வஞ்சகத்தைப் போக்குதற்குப் போதாது.

பெரிய இருடிகளும் முனிவர்களுங்கூட எரிச்சல் தம்மிடம் இருப்பதைக்கண்டு நாணுகின்றார்கள்; ஏங்குகின்றார்கள்; அதனைப் போக்கத்தவங்கிடக்கின்றார்கள்.

எவன் 'எல்லாரும் வாழவேண்டும் என்கின்ற மனநிலை எனக்கு வரவில்லையே' என்று என்றைக்கு ஏங்குகின்றானோ, அவன் அன்றைக்குச் சமயி ஆகின்றான்.

# 15. நகைப் பூங்கொத்து

என் உயிரினும் இனிய தோழி! யான் சொல் வதைக் கேள்! யாம் பண்டு மணல்நிறைந்த தெருவில் சிற்றில் புனைந்தும், சிறு சோறட்டும் விளையாடுங்கால் அவற்றைக் காலாற் சிதைத்தும், யாங் கூந்தலிற் புனைந்த மாலைகளைக் கையாலறுத்தும், யாம் விளையாடிய வரிந்து புனைந்த பந்தை எடுத்துக்கொண்டோடியும், மனம் நோவத்தக்க அளவிறந்த குறும்புகளைச் செய்யும் அந்தச் சிறியனாகிய 'பட்டி'யை நீ அறிவாயன்றே.

அம்ம! அவன் இந்நாளிற் செய்த ஒரு செயலை நீ அறியாயோ? என் அன்னை அறிவித்திலள் போலும். அதனை உற்றுக் கேள்! அண்மையில் ஒருநாள் என் அன்னையும் யானும் எமது வீட்டுத் தலைவாய்தலிற் பேசிக்கொண்டிருந்தோம். நல்ல மத்தியானம்.

அப்போது "வீட்டுள் இருப்பவர்களே! வீட்டுள் இருப்பவர்களே!" என்று, வரண்ட மிருதுவான ஒரு குரல் கேட்டது. யாங்கள் எதிரில் நோக்கினோம்.

"தாங்கமுடியாத தாகம்! தாங்க முடியாத தாகம்! நீர் வேட்கையைத் தணிமின்" என்று சொல்லிக்கொண்டு ஒருவன் வந்தான். அவன் யார்? யாராயிருக்கலாம்?

அந்தப் பட்டிதான்!

என் அன்னை இரங்கிவிட்டாள். மனம் உருகிவிட்டாள். உடனே அவள் என்னை நோக்கி,

---

பட்டி—காவலில்லாதவன். பேச்சு வழக்கில் 'விடுகாலி' என்பர்.

"மகளே! அதோ அந்தப் பொற்கரகத்தை எடுத்து, அதனால் உண்ணத்தக்க நல்ல நீரை வார்த்து அவனை உண்ணப்பண்ணுவித்து வா" என்று கட்டளையிட்டாள்.

என் தோழி! யான் என்னதான் சொல்லுவேன். அவனை—அந்தப் பட்டியை முன்னும் முன்னும் அறிந்திருந்தும், அப்பொழுது அவனைப்பற்றி ஒன்றும் அறியாதவளாகவே தண்ணீர் வார்க்கச் சென்றுவிட்டேன். அந்தோ! அவன் தண்ணீரா உண்டான்? தனி இடம். எப்படிச் சொல்லுவது? என்னுடைய வளையலை அணிந்த முன்கையை இறுகப் பிடித்துக்கொண்டான்; பெரிதும் நலிந்தான். எனக்குச் செய்வதின்னதென்று தெரியவில்லை. மனம் சுழன்றுகொண்டேயிருந்தது. விவேகம் ஒளித்துவிட்டது. சிறிது நேரம் மூர்ச்சித்து நின்றுவிட்டேன். அப்பால் சிறிது தெளிந்து, அன்னாய்! அன்னாய்! என்று அழுது கூக்குரலிட்டு, "இதோ இவனொருவன் செய்த செயலைப் பார்" என்றேன். என்றதுதான்;

என் அன்னை அலறிக்கொண்டு என்னைக் கூப்பிட்டபடியே வந்து சேர்ந்தாள். உடனே நான் அன்னாய்! "இவன் உண்ணுகின்ற நீர் விக்கி வருந்தினன்" என்று பெரிய இரக்கத்தோடு சொன்னேன். என் அன்னையின் முகத்தில் துன்பமும், இன்பமும் ஒருங்குதோன்றின; அவள் முகம் வழக்கம்போல் மலர்ந்தது. மனசில் இரக்கங் குடிகொண்டது. அன்னை அவன் முதுகைப் பலதரம் அழித்து அழித்துத் தடவிக்கொண்டே நின்றாள்.

யான் மெல்ல மெல்லத் தண்ணீர் வார்க்கத் தொடங்கினேன். அடி தோழி! அவன்—அந்தப்பட்டி

அப்பொழுதும் தண்ணீரா உண்டான்! அவனுடைய கைகள் ஒட்டைக் கைகள். கொல்லுகிறவனைப்போலத் தன் கடைக்கண்ணால் என்னை ஒரு நோக்கு நோக்கினான். அடி, அம்மட்டோ! ஒரு ஆச்சரியம்! அவன் தன் உதடுகளினூடே ஒரு சிறு நகைப்பு நகைத்தான். அது நகைக் கூட்டம்; நகைப்பூங் கொத்து; சிரிப்பின் தொகுதி. இதுதான் நடந்தது.

என் கண்ணே, தோழி! ஒன்றும் ஒளியாமற் சொல்லிவிட்டேன். உனக்குச் சொல்லாமல் எதனைத் தான் மறைத்து வைத்திருப்பது? ஏன் வைத்திருக்க வேண்டும்? எனக்கு இரண்டொரு விஷயத்தில் சந் தேகம். அதனை நீயே நீக்கவேண்டும். வேறு யார் தான் நீக்கமுடியும்? அந்தப் பட்டி தன் கடைக் கண்ணால் என்னைக் கொல்லுகிறவனைப்போல நோக் கினானே, அவன் அப்படி நோக்கிய காரண மென்ன? ஓகோ!........ அது .. ....ஒருவாறு விளங்கு கிறது. முற்றாக விளங்காத விஷயம் மற்றையது தான், அவனுடைய நகைப்பு. அவன் ஏன் நகைத் தான்? அது சாதாரண நகையாயில்லை. நகைப்பூங் கொத்து. அரும்பு நகை-மொட்டு நகை-போது நகை -பூநகை என்று பல நகைகள் அந்த நகையுட் காணப்படுகின்றன. ஆயினும் அது ஒரு சிறு புன் னகை. அவன் ஏன் நகைத்தான்? இதுதான் பெரிய சந்தேகம்.

தோழி சொல்லுகின்றாள்: தலைவி! நீ என்னை 'உயிரே' 'கண்ணே' என்றெல்லாம் அழைத்தாய். நான் உன்னை 'மனமே!' என்று அழைக்கின் றேன். நீ எனக்கு மனம் போலிருக்கின்றாய். "நெஞ்சை மறைத்தொரு வஞ்சகமில்லை" என்

பார்கள். நீ என்னை மறைத்து ஒன்றும் வைத்திருக்க மாட்டாய். நீ என் மனம். மனம் எவ்வளவு நல்லது. என் மனமே! தலைவி! உனக்கு இரண்டு சந்தேகம். அவற்றை நீக்கி வைப்பது என்னுடைய கடன். ஆனால் எனக்கொரு சந்தேகம். அது உன்னாலேதான் ஆகவேண்டும். அதனை நீக்கி வைப்பது உன்னுடைய கடன். அதனை முதலிற் தீர்த்துக் கொண்டால் அதன்மேல் உன்னுடைய சந்தேகங்களை எளிதில் தீர்த்துக்கொள்ளலாம்.

நீ உன் அன்னையின் கட்டளைப்படி தண்ணீர் வார்க்கச் சென்றாய். அந்தப் பட்டியோ தண்ணீர் வார்க்க முன்னமே, உன் வளையலணிந்த முன் கையைப் பற்றி நலிந்தான். நீயோ செய்வதின்னதெனத் தெரியாத மயக்கத்தினாலோ, வேறெக் காரணத்தினாலோ சிறிது நேரம் மூர்ச்சித்து நின்றுவிட்டாய்; அதன்மேல் "அன்னாய்! இவனொருவன் செய்ததைப் பார்" என்று அழுதோ—அழாமலோ அன்னையை அழைத்தாய். அழைத்த அந்தக் கணமே அன்னை அலறிக்கொண்டுவந்தாள்; அவள் வந்தது வரமுன் நீ, "அவன் உண்ணுகின்ற நீர் விக்கி வருந்தினான்" என்று சொல்லிவிட்டாய். ஏன் அப்படிச்சொன்னாய்? இதுதான் எனக்குச் சிறிதும் விளங்கவில்லை. ........என் மனமே!........தலைவி!....ஏன் ........மௌனம்?

இக்கட்டுரை "சுடர்த்தொடீஇ கேளாய்" என்ற கலித்தொகைச் செய்யுட்கருத்துக்களைப் படியெடுத்தும் சிறிது புனைந்தும் ஒருவாறெழுதப்பட்டது. அச்செய்யுள் வருமாறு:

" சுடர்த்தொடீஇ கேளாய் தெருவிஞ மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்ரு ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்ளு யிவனொருவன் செய்ததுகா ணென்றே
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கிஞ னென்றேனு வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணுற் கொல்வான்போ னேக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன் "

—'குறிஞ்சிக்கலி'

[நாண் என்ற குணத்துக்கு இலக்கியமான ஒரு பெண், கற்பின் திண்மையைக் காக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், அறநெறிப்பட்ட—மறு அற்ற—தன்மனநிலையைப், புலப்படுத்தக் கூடிய இடத்திலுங், குறிப்பாற் புலப்படுத்துவதொரு நாகரிக முறையின் உச்சம் இந்தப்பாட்டு. பெண்மையின் உள்ளம் பிரதிபலிக்கும் பளிங்கு என்றும் இதனைச் சொல்லலாம்.]

இந்நூலில்
வசனத்திலும் செய்யுளிலும் வந்துள்ள

# அரும் பதங்களுக்குப் பொருளும், சில குறிப்புக்களும்

## 1. இரட்டையர்.

○ சப்பாணி—முடவர். பூர்த்தி—நிறைவு. சித்தாந்தம்—முடிவான கருத்து, தீர்மானம். அத்தாணி மண்டபம்—ஆஸ்தான மண்டபம், கொலுவிருக்குமிடம். தானைத்தலைவர்—சேனைத் தலைவர். ஓலக்கம்—அரசிருக்கை, தர்பார். பண்டம்—வஸ்து, பொருள். அபசகுனம்—கெட்ட நிமித்தம். நிந்தாஸ்துதி—இகழ்வதுபோலப் புகழ்வது.

● 'குன்றும்......' (செய்யுள்) கோ—பசு, காமதேனு. கா—சோலை, கற்பகச் சோலை; காமதேனுவுங் கற்பகதருவும் விரும்பியவற்றையெல்லாம் கொடுப்பவை. இடர்—துன்பம்.

'புராதனமான......' (செய்யுள்) புராதனமான—பழைமையான. தராதலம்—பூமி. மாறன்—பாண்டியன். இராகவன்—இரகு குலத்திற் பிறந்த இராமன்.

'ஆசுகவி......' (செய்யுள்) பூசுரன்—பிராமணன்.

நாணென்றால் என்று தொடங்கும் பாடல் பின்வருமாறு:

**நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங் கற்சாபம்**
**பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே**
**சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ**
**நேரார் புரமெரித்த நேர்.**

திருவாரூரில் இரட்டையரிலொருவர் இப் பாடலைப் பாடத்தொடங்கி 'பாணந்தான்...' என்ற சீர்வரையில் எழுதியிருந்தாரென்றும், பின்னர் காளமேகப் புலவர் மிகுதியைப் பாடி நிறைவாக்கினாரென்றுங் கூறுவர்.

## 2. காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்.

○ பஞ்சகாவியங்கள்—ஐம்பெருங் காப்பியங்கள் :– சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டல கேசி. சிறுபஞ்ச காவியங்கள்: சூளாமணி, நீலகேசி, உதயணன் கதை, யசோதர காவியம், நாககுமாரகாவியம். தவளம் — வெண்மை. ஓம்புதல் — பாதுகாத்தல். வேளாண்மை—உபகாரம்.

● **'காய்மாண்ட......'** (செய்யுள்) கமுகின் நெற்றி—கமுகின் மேலிடம். தீந்தேன்—இனிய தேன். வருக்கை—பலாக்கனி. மதுத் தண்டு+ஈட்டம்.

## 3. சிவகாமி சரிதை.

○ சுந்தர தாரகை—அழகிய நட்சத்திரம். சந்து பேசுதல்—தூது பேசுதல். கறங்கு—பம்பரம், காற்றாடி. அடவி—காடு. பனிப்பு—நடுக்கம். சுருதி—வேதம்.

**'தாடலைபோல்......'** (செய்யுள்) தாடலை என்பதில் தாள்+தலை என்னும் இரு சொற்களும் பிரிப்பின்றி ஒன்றாய்க் கலந்திருத்தல்போல, இறைவனுடன் ஆன்மாப் பிரிப்பின்றிக் கலந்திருக்கும் என்று நூல்கள் கூறும்.

## 4. மதியும் பிறையும்.

○ சிரம பரிகாரம்—களைப்பு நீக்கம். சூல்—கரு. குயுக்தி—சூழ்ச்சி, தந்திரோபாயம். அநாயாசமாக—சிரமமின்றி, எளிதாக.

● **'வெள்ளத்தடங்கா......'** (செய்யுள்) சினைவாளை—கருக்கொண்ட வாளை மீன். சோழ+நாடா=சோணாடா—சோழநாட்டரசனே. குறும்பர் குலம்—சிற்றரசர் கூட்டம். அண்டர் கோபாலன்—இடையர்களின் பசுக்களைக் காத்த கண்ணபிரான்.

**'பங்கப்பழனம்......'** (செய்யுள்) 'பங்கப்பழனம்'—சேறு நிறைந்த வயல். அமராபதி—சுவர்க்கம். கரும்பு இறை

—கரும்புவில்லோனாகிய மன்மதன். 'மெலிந்து + அப்பு + இறைக்கும்'. அப்பு — நீர்; கண்ணீர். விழிவேல் — வேல்போன்ற கண்.

'**வானப் பிறை** ......(செய்யுள்).வாடைப்புலி—வாடைக் காற்று; கொடுமையும், வேகமுங்காரணமாக வாடைப் புலி எனக் கூறப்பட்டது. மையல் — மயக்கம் தேன் அம்பு இறை--தேன் பொருந்திய மலரம்புடைய மன்மதன். 'கண் மீன் அப்பு இறைக்கும்'. 'ஊன் அப்பு இறைச்சிக்கு உகந்தார்.' மேவிலர்—அணைந்திலர். உகந்தார்—மகிழ்ந் தார். மறைசை—மறைக்காடு, வேதாரணியம்.

## 5. இலங்கை வளம்.

○ வசனிக்கிற—பேசுகிற. ஆஞ்சனேயர் — அநுமான். சாளரம்—யன்னல். இதரவிதரம்—ஒன்றுக்கொன்று உவமானமாவது. (வேறு உவமானம் சொல்லமுடியாதது.) நல்லை—நல்லூர்.

● '**மாகாரின்**......' (செய்யுள்). கார்—மேகம். மாகாரின் மின்கொடி—பெரிய மேகங்களிலுள்ள மின்னற் கொடிகள், காரம்—வீடு; மீகாரம்—மேல் வீடு, மேன்மாடம். அங்கை—அகங்கை, உள்ளங்கை.

'**மஞ்சளாவிய**... ...' (செய்யுள்). மடவார் கணம்—பெண் கள் கூட்டம். அம்சரோருகப் பள்ளியின் மீமிசை—அழ கிய தாமரைப் படுக்கையின் மீது. மேதி—எருமை.

'**சீரான எந்நாடும்**......' (செய்யுள்) காவும்—சோலையும். பெட்பு ஆரும் — விரும்பப்படும் இயல்பு நிறைந்த பெண்ணை—பனை. நிலமடந்தை—நிலமென்னும் பெண். நந்தவன மகவு—பூந்தோட்டமென்னும் குழந்தை.

'**அதிரவரும்**......' (செய்யுள்). மெய்ப்புளகம் ஊர— மெய்மயிர் சிலிர்க்க. பொரு இல் கந்தா—ஒப்பற்ற கந்தனே.

**'உண்ட செந்தமிழ்......'** (செய்யுள்) நாவலன் கண்டனப் பிரசங்கம் ஆம் என—நாவலரது கண்டனப் பிரசங்கம் இதுவாகுமென்று சொல்லத்தக்கதாக.

**'மலை வளத்தை......'** (செய்யுள்) மலர் அயன்—தாமரை மலரிலிருக்கின்ற பிரமன். பட அரவு—படத்தினையுடைய பாம்பு, ஆதிசேடன்.

**'கலைப் பட்டினம்......'** (செய்யுள்) கலப் பட்டினம்—மரக்கலங்கள் நிறைந்திருக்கும் பட்டினம். பெருமை தலைப்பட்டு இனம வரைப்பட்டிடா—பெருமை மிதந்து ஒப்பு வரையறுக்கப்படாத.

**'சரிந்த......'** (செய்யுள்) சாந்து—சந்தனம். வேய்—மூங்கில். இரிந்த—ஓடின. இழிந்த—கீழிறங்கின.

**'முன்னவன்......'** (செய்யுள்) முன்னவன்—சிவபிரான். தனுவில்—வில்லாகிய மாமேரு மலையில். வாரணத்தின்—யானை முகமுடைய விநாயகரின். முளரி—தாமரை.

**'கோள்நிலைகள்......'** (செய்யுள்) கோள் நிலை—கிரகங்களின் நிலை. வாரி—வருவாய். மிடி—வறுமை. தாள் நிழல் அளித்து—அடியின் நிழலைக் கொடுத்து. 'பல வேறு பொருள் தந்து தாங்கு பனை ஓங்கும்'.

**'எண்சாண்......'** (செய்யுள்) சென்னி—சிரம், தலை.

**'முன்னம்......'** (செய்யுள்) முன்னி—எண்ணி. வேல் கோட்டம்—வேலாயுதப் பெருமானது கோயில். இருவகை நோய்—உடல் நோயும், ஆன்ம நோயாகிய மலமும்,

**'மூன்றுவயசிலே......'** (செய்யுள்) மந்திர வாசகம்—தேவாரப் பதிகங்கள், முக்கோண மலை—திருக்கோணமலை,

**'காதலனை......'** (செய்யுள்) தீது பழி கேட்டவன்—(குற்றஞ் செய்யாமலே) தீய பழி சுமத்தப்பட்டவன், அழுங்குதல்—வருந்துதல், நிறை பழித்த கற்புடையாள்

—கற்பில்லாதவளென்று பிறரால் பழிக்கப்பட்ட கற்புடைப் பெண். காதும் அழுக்காறு உடையான்—கொல்லுகின்ற (தன்னையே அழிக்கின்ற) பொறாமையுடையவன்,

'ஆடிப்பிறப்பு......' (செய்யுள்) மாந்துதும்—நிறையப் பருகுவோம்.

## 6. கவி கவியாகிறான்

○ பரஸ்பரம்—ஒருவர்க்கொருவர். சிரச்சேதம்—தலை வெட்டுதல். பாசுரம—பாட்டு. பாதாதி கேசம்—அடி தொடங்கி முடிவரை. வியாக்கியானம்—விளக்கவுரை. சலனம்—அசைவு, மாற்றம். மரகதமலை—பச்சைக் கல்மலை.

● 'சுருக்கு......' (செய்யுள்) சோழியா—சோழநாட்டவனே, உலர்ந்த—காய்ந்த, குடந்தை—கும்பகோணம். கோட்டாலை—ஆந்தையே. (39-ம் பக்கத்திலுள்ள செய்யுளில் 'பொருக்குவர்ந்த' என்றிருப்பதைப் 'பொருக்குலர்ந்த' எனத் திருத்திக்கொள்க.)

'பொருவரு .....' (செய்யுள்) வரை—விலங்கல், மலை மால்வரை—பெரிய மலை. ஆகம்—மார்பு, விலங்கலாகம்—மலைபோன்ற மார்பு, நோற்றனள்—தவஞ்செய்தாள்,

'பாவமோர்......' (செய்யுள்) பரிவினில்—அன்புடனே, மல்கும — அதிகரிக்கும், இன்னது ஓர் பெற்றியை நாடி—இப்படிப்பட்ட தன்மையைத் தேடிக் கண்டு, அங்கண்—அவ்விடம். காஞ்சிமா நகரத்திலுள்ளார் ஒரு கோடி பாவஞ் செய்தாலும அது ஒரு பாவமாகக் குறைந்துவிடும், ஒரு தருமம் செய்தாலும் அது கோடிக் கணக்கான தருமங்களாகிப் பெருகிவிடும். அந்தத் தலத்தின் இத்தன்மையைத் தேவர்களும் முனிவர்களும் அறிந்து தத்தம் பதவிகளை வெறுத்தொதுக்கி அங்கு வந்து தவஞ் செய்துகொண்டிருக்கின்றார்களென்றால் அக் காஞ்சி நகரத்தின் பெருமையை யார்தான் விரித்துரைப்பார்கள்!

## 7. ஈழ நாட்டுப் புலவர்கள்.

○ மலேய—திகைக்க. மேதைகள்—மேதாவிகள், விசேஷமான விவேக சக்தியுள்ளோர். உபநியாசகர்—பேச்சாளர். மதி நுட்பம்—புத்தி நுட்பம். (யமகம் என்பதன் விளக்கத்தை 75-ம் பக்கத்திற் காண்க.)

● 'பொன் பூ......' (செய்யுள்) தாது இறைக்கும்—மகரந்தப் பொடியைக் கொட்டும். பிரபை—ஒளி. கனகம்—பொன்.

## 8. பருளாய் விநாயகர் பள்ளு.

○ மூதலித்தல்—முறைப்படுதல். தூக்குணி—மானமற்றவள். கசையடி—சவுக்கடி. வைது—ஏசி.

● 'கருமயில் .....' (செய்யுள) புல்வாய்—கலைமான். ஆளி—சிங்கம். சாரற் புற முழை — மலேச்சாரலிலுள்ள வெளிக்குகை. உழை—மான். தட திகிரி—பெரிய மூங்கில்.

'பட்ட நெஞ்சில்......' (செய்யுள்) என்கை—என்பது. கணக்கு ஆம்படி—கணக்குச் சரியாகும்படி. காற்றளே—(கால் + தளே) கால் விலங்கு.

'சுத்தர்......' (செய்யுள்) அத்த—ஐயனே. சூலந் திரித்து—சூலத்தைச் சுழற்றி. முனந் தோன்று—முன்னல் தோன்றுகின்ற. கா—காத்தருள்.

## 9. கம்பரில் பாலர் பாடசாலை

○ முனி சிரேஷ்டர்—சிறந்த முனிவர். என் பின்னவன்—எனது தம்பி, பரதன்.

● 'வீரனும்......' (செய்யுள்) வெறி பொழில்—வாசனை வீசும் சோலை. சோர் பொழுது—(சூரியன்) சோருகின்ற பொழுது, மாலைவேளை. துறுகுவர்—சேர்வர், பொருவுவர்—ஒப்பார்கள்.

'அஃது ஐய......' (செய்யுள்) நினை—நின்னை, உன்னை•

ஏழ் மகிதலம்—ஏழு தீவுகளாகவுள்ள பூமி, மலரோன் உகு பகல் அளவு—பிரமன் அழியுங்காலம் வரையில்.

**'ஏழையர்......'** (செய்யுள்) கேழ் கிளர் மதுகையர்—ஒளி விளங்கும் வலிமையுடையவர்கள். அவர் மனன் உறு கடவுள் தாழ்குவர்—அவர்கள் மனத்திற் பொருந்திய தெய்வத்தை வணங்குவார்கள்.

## 10. கம்பன் செய்த வம்பு.

O இழுக்குவது—குற்றப்படுத்துவது. அரும் பெறல்—பெறுதற்கரிய. துளசி—துளசிதாசர், இந்தி மொழியில் இராமாயணம் பாடியவர். ஆகுதி—ஓமத் தீயில் நெய்யைத் தாரையாக வார்த்தல். வெகு அநாயாசமாக—மிக எளிதாக. அபார கற்பனு சகதி—எல்லையற்ற கற்பனைத் திறன். சேதிக்கும்—வெட்டியழிக்கும்.

**'வாங்கரும்......'** (செய்யுள்) பாதம்—பாட்டின் அடி. நறவம் மாந்தி—மதுவையருந்தி. மூங்கையான்—ஊமையன்.

**'நொய்தில்......'** (செய்யுள்) வைத வைவு—சபித்த சாப மொழிபோன்ற பாணம் மராமரம் ஏழ்—ஏழு மாமரங்களும், தொளை எய்த—தொளைபடத்தக்கதாக. எய்தவற்கு—எய்தவனாகிய இராமனுக்கு, எய்திய—வந்து சம்பவித்த. மாகதை செய்த—சிறந்த கதையை இயற்றிய, செய்தவன்—செய்த தவத்தினையுடைய வான்மீகி முனிவனுடைய. சொல் நின்ற தேயத்தே—சொற்கள் நிலைபெற்ற இந்த நாட்டிலே. நொய்தில் நொய்ய சொல்—எளிதினும் எளிய சொற்களினால். நூற்கல் உற்றேன்—நூலியற்றத் தொடங்கினேன். எனை—என்னை! (என் அறியாமை இருந்தபடி என்னை!) (67-ம் பக்கத்தில் இச் செய்யுளில் **நெய்தில்** என்றிருப்பதை **நொய்தில்** எனத் திருத்திக் கொள்க.)

**'எந்தையே......'** (செய்யுள்) எந்தை—எமது தந்தை. என்னின்—என்னிலும் பார்க்க. நும் பணி—உமது கட்டளை.

**'மாகமடங்கலும்......'** (செய்யுள்) மாகம் மடங்கலும்—மிகச் சிறந்த சிங்கமும், மால் விடையும்—பெரிய இடபமும், பொன் நாகமும்—பொன் மலையாகிய மேருவும், நாகமும்—யானையும், நாண—நாணமடையுமாறு, நடந்தான்.

**'தேடரும்......'** (செய்யுள்) பொற் சூடக வால்வளை—பொன்னாலாகிய சூடகமென்னும் கையணியும் வெண்ணிறச் சங்கு வளையலுமுடையவள். ஏடு அவிழ் மாலை—இதழ் விரிகின்ற மாலை.

**'தடுத்து......'** (செய்யுள்) தாளில் மடுத்ததும்—காலினால் (வில்லின் ஒரு நுனியை) மிதித்ததையும், நாண் நுதி வைத்ததும்—நாணை (வளைத்த வில்லின்) மறு நுனியில் வைத்ததையும், கடுப்பினில்—வேகத்தால். இற்றது—முறிந்த சத்தத்தை.

**'கழுந்தராய்......'** (செய்யுள்) கழுந்தர்—முரடர். உனகழல்—உனது கழலணிந்த திருவடிகள். வாளிகள்—அம்புகள். தொடு சிலை—தொடுத்த வில். ராகவன் — ரகு குலத்தவனான இராமன்.

## 11. சொற் சித்திரம்

○ கதித்த—அதிகரித்த. சாமர்த்தியம்—திறமை. (76-ம் பக்கத்தில் சாமார்த்தியம் என்றிருப்பதை சாமர்த்தியம் எனத் திருத்திக் கொள்ளுக.) வடு விழி—கூரிய கண்.

## 12. யாழ்ப்பாணத்தில் இரு கவிராயர்கள்

○ வன்ன நடை—அழகிய நடை. தாதா—வள்ளல், கொடையாளி. சங்கமம்—சந்திப்பு, கூட்டுறவு. மதுகரங்கள்—வண்டுகள்.

● **'நீடிய......'** (செய்யுள்) மன்ன—மன்னனே, புவி—பூமி, கூழ்கள்—பயிர்கள். இன்பவாரி படிந்தனன்—இன்பக் கடலில் மூழ்கினேன்.

இளம் பெண் என்னும் பொருளமைந்த பாலா என்ற வட சொல் தமிழில் பாலை என்றும் வாலை என்றும் தற்பவமாகும்.

## 13. கவிஞர்கள்.

() விமர்சனம்—ஒன்றிலுள்ள குணத்தையும், குற்றத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்து காட்டுதல். விமர்சகர்—விமர்சனம் செய்பவர். நவீன—புதிய. அமிர்த சஞ்சீவி—சாவாரையும் பிழைக்க வைக்கும் அருமருந்து. பாணி—கை. ஆயுதபாணி—கைகளில் ஆயுதமேந்தியவன். நிராயுதபாணி—வெறுங்கையன். அபேதம்—பேதமின்மை, சமத்துவம். சூனியமான—வெறுமையான.

● 'ஐயத்தின்......' (செய்யுள்) தெளிந்தார்க்கு—மெய்யுணர்ந்தவற்கு. வானம்—வீட்டுலகம். நணியது உடைத்து—நணித்தாதலுடைத்து, அண்மையது.

'பேராண்மை......' (செய்யுள்) தறுகண் — மறம். ஒன்று உற்றக்கால்—(பகைவனுக்கு) ஓர் இடையூறு நேர்ந்தபோது. ஊராண்மை—உபகாரியாந்தன்மை. அதன் எஃகு—அப்பேராண்மைக்குக் கூர்மையாகும்.

'ஆளையாவுனக்கு......' (செய்யுள்) ஆள் ஐயா—அரக்கரை ஆளுகின்ற அரசனே. உனக்கு அமைந்தன—உனக்கு அமைந்த சேனை படைக்கலம் முதலியன. மாருதம் அமைந்த பூளை ஆயின—காற்றினால் மோதப்பட்ட பூளைப் பூப்போலாயின. நல்கினன்—கொடுத்தான் (உயிரையும், உயிரைக் காத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தையும்). வாளை—வாளை மீன்.

'மஞ்சள்......' (செய்யுள்) கஞ்ச மகள்—தாமரை மலராகிய பெண். கஞ்ஜம்—தாமரை.

## 14. வாழ்க்கையின் மூன்று படிகள்

'தன்னை......' (செய்யுள்) தீவினைப் பால்—தீவினையாகிய பகுதி. துன்னற்க—செய்யா தொழிக.

'**அற்கா......**' (செய்யுள்) அற்கா இயல்பிற்று—நிலை யாத இயல்பினையுடையது. அற்குப—நிலையானவற்றை, அறங்களை. ஆங்கே செயல்—(செல்வத்தைப் பெற்ற) அக்கணமே செய்க.

'**அற்றார்......**' (செய்யுள்) அற்றார் அழி பசி—பொரு ளற்ற வறியவரது மிக்க பசியை. தீர்த்தல்—தீர்க்க. பொருள் பெற்றான் ஒருவன் வைப்புழி அஃது—பொருள் பெற்றவனொருவன் (அப்பொருளைப் பாதுகாத்து) வைக் குமிடம் அதுவாகையால்.

## 15. நகைப் பூங்கொத்து

○ பண்டு—முன்னை நாட்களில், இளவயதில். சிற்றில்—சிறு வீடு. சோறு அட்டு—சோறு சமைத்து. அண்மை யில்—சமீபத்தில். கரகம்—நீர்ப் பாத்திரம். நலிந்தான்—வருத்தினான்.

'**சுடர்த் தொடீஇ......**' (செய்யுள்) தொடி—வளையல். சுடர்த் தொடீஇ — ஒளி பொருந்திய வளையணிந்தவளே. தெருவில் நாம் ஆடும்—தெருவிலே நாம் விளையாடுகின்ற. காலின் சிதையா—காலினால் சிதைத்து. அடைச்சிய கோதை பரிந்து—அணிந்த மாலைகளை அறுத்து. நோதக்க—வருந்தத்தக்க செயல்கள். இருந்தேம் ஆ—இருந்தே மாக, இருக்க. இல்லிரே—வீட்டிலுள்ளவரே. வேட் டேன்—விரும்பினேன். என வந்தாற்கு—என்று சொல்லி வந்தவனுக்கு. சிரகம்—கரகம், நீர்ப்பாத்திரம். வாக்கி—வார்த்து. சுடரிழாய்—சுடரிழையே, ஒளி பொருந்திய ஆப ரணமுடையாளே, தன்னை—பட்டியை, தெருமந்திட்டு—சுழன்று, மயங்கி. புறம்—முதுகு, நீவ—தடவ.

வரதர் வெளியீடு:

உயர் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற
மிகச் சிறந்த மொழி நூல்

# தமிழ் மரபு

எழுதியவர்: வித்துவான்,
**பொன். முத்துக்குமாரன் B. O. L.**

- சொல் மரபு
- சொற்றொடர் மரபு
- வாக்கிய மரபு
- கட்டுரை மரபு

ஆகிய நான்கு பகுதிகளில்
மிக விளக்கமாக, உதாரணங்கள்
பயிற்சி வினாக்கள் முதலியவற்றுடன்
எழுதப்பெற்றது.

**அநேக கலாசாலைகளில்**
**இன்று உபயோகிக்கப் பெறுகிறது.**

விற்பனை உரிமை:

**ஆனந்தா அச்சகம்,**
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அடுத்து வருவது:

பண்டிதமணி

## சி. கணபதிப்பிள்ளை

அவர்கள் காட்டுங் கவிநயம்

# " தெய்வப் புலமை "

வரதர் வெளியீடு

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.